விலை: 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 ஆனி 15 வெள்ளிக்கிழமை (29.06.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 192



கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுன் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/- மட்டுமே


றெஜினா படுகொலையை கண்டித்து

## நீதி கேட்டு மாணவர்கள், பொதுமக்கள் போராட்டம்



03

காணாமல்போன முதியவர்

## புத்துவெட்டுவானில் சடலமாக மீட்பு

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு - புத்துவெட்டுவானில், கடந்த 23ஆம் திகதி காணாமற்போயிருந்த முதியவர், நேற்று முன்தினம் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

புத்துவெட்டுவான் - சுடலைப் பகுதியில் வைத்தே, குறித்த முதியவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

வீரகத்தி சோமசுந்தரம் 24

மாணவியின் படுகொலைக்கு

## நீதி கோரி யாழில் இன்று கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம்

சுழிபுரம் பாடசாலை மாணவியின் படுகொலைக்கு நீதி கோரி இன்று காலை 9 மணிக்கு யாழ் பிரதம தபால் நிலையத்துக்கு அருகில் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இந்த ஆர்ப்பாட்டத்தில் அரசியல்வாதிகள், பொது அமைப்புக்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டு மாணவிக்கு நீதிகோரும் செயற்பாட்டுக்கு ஆதரவு தருமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர்.(ம-9)

நிலக்கீழ் கசிப்பு நிலையம்

## சுற்றிவளைப்பு ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)

சுழிபுரம் பகுதியில் நிலத்துக்கு கீழ் பங்கர் வெட்டப்பட்டு கசிப்பு உற்பத்தி செய்து வந்த ஒருவர் வட்டுக்கோட்டை பொலிஸாரால் 24

## ஆளுமையற்ற தவிசாளர் பதவி விலக வேண்டும்!

கரவெட்டி பிரதேச சபையின் நேற்றைய அமர்வில் காரசாரம்

(கரணவாய்)

கரவெட்டி பிரதேச சபையின் தவிசாளர் ஆளுமையற்றவர். அவர் உடனடியாகப் பதவி விலக வேண்டும். அவரது இட 23

சமையல் எரிவாயுவின்

## விலையை குறைக்க அரசு தீர்மானம்

(கொழும்பு)

சமையல் எரிவாயு சிலிண்டரின் விலையை குறைக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. கடந்த செவ்வாய்க்கிழமை கூடிய 23

## மாணவி படுகொலைக்கு நீதிகோரி வடமாகாணம் முழுவதும் இன்று

# பகுதி நேர கடையடைப்பு பகிஷ்கரிப்பு முன்னெடுப்பு

## அரச, தனியார், பொது அமைப்புக்கள், பாடசாலை மாணவர்களுக்கு அழைப்பு



(யாழ்ப்பாணம்) சுழிபுரம் காட்டுப்புலத்தை சேர்ந்த மாணவி றெஜினாவின் படுகொலைக்கு நீதி கோரியும், வடக்கில் போதைப்பொருள் பாவனையை தடுக்க வலியுறுத்தியும் இன்று வடக்கு மாகாணம் முழுவதும் பகுதி நேர கடையடைப்பு பகிஷ்கரிப்பு முன்னெடுக்கப்படவுள்ளது. இப்போராட்டத்திற்கு அனைத்து அரச, தனியார் நிறுவனங்கள், பொதுமக்கள் மற்றும் பாடசாலை மாணவர்களையும் ஒத்துழைப்பு தருமாறு காட்டுப்புலம் மக்கள், அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளன. (23-ம் பக்கம் பார்க்க...)

இந்திய மீனவர்களின் இழுவை

## படகுகளை விடுவிப்பதற்கு வடக்கு மீனவர்கள் எதிர்ப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மீனவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றாமல் இந்திய இழுவைப்படகுகள் விடுவிக்கப்படுமானால் மீனவர்கள் வீதிகளில் இறங்கி தொடர் போராட்டத்தை முன்னெடுப்பார்கள் என வடமாகாண கடற்றொழிலாளர் இணையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் கடற்றொழிலாளர் இணையம் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இலங்கை கடற்பரப்புக்குள் இந்திய மீனவர்கள் இழுவைப் படகுகளை பயன்படுத்தி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடுவதனால் 23

## ஊர்காவற்றுறை படை முகாம் சிப்பாய்

துப்பாக்கியால் சுட்டு உயிர் மாய்ப்பு

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை படை முகாமில் கடமையாற்றும் சிப்பாய் ஒருவர் நேற்று இரவு தன்னைத் தானே துப்பாக்கியால் சுட்டு உயிரிழந்துள்ளார்.

இரத்தினபுரியை சேர்ந்த உதய குமார வயது (27) என்ற இராணுவ சிப்பாயே மேற்படி உயிரிழந்தவராவார். 24

## வயோதிபப் பெண் மானிப்பாயில் கழுத்தறுத்து கொடூரக் கொலை

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் பகுதியில் வயோதிப பெண் ஒருவர் நேற்று காலை கொடூரமான முறையில் கழுத்தறுத்து கொலை செய்யப்பட்டுள்ளார்.

மானிப்பாய், சங்கரப்பிள்ளை வீதியைச் சேர்ந்த தம்பையா நீலாதேவி (வயது -69) என்ற வயோதிப் பெண்ணே மேற்படி கொடூரமாக கொலை செய்யப்பட்டவரா 24

மாகாணசபைத் தேர்தலை

## துரிதமாக நடத்துவதற்கு பொது இணக்கப்பாடு

(கொழும்பு)

மாகாணசபைத் தேர்தலை துரிதமாக நடத்துவதற்கான பொது இணக்கப்பாடு காணப்பட்டுள்ளது.

எதிர்வரும் மாகாணசபை தேர்தல் தொடர்பான கலந்து 23

## மானிப்பாயில் இரு இடங்களில் வாள்வெட்டு குழுவினர் அடாவடி

பெற்றோல் குண்டு வீச்சு;

பெறுமதியான பொருட்கள் சேதம்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் பகுதியில் உள்ள இரு வேறு இடங்களில் வாள்வெட்டு குழுவினர் மேற்கொண்ட கொலைவெறி தாக்குதலில் இருவர் படுகாயம் அடைந்ததுடன் பெருமளவு பெறுமதியான பொருட்கள் சேதமடைந்துள்ளன.

வாள்வெட்டு குழுவின் அட்டூழியம் மீண்டும் தலை 24



பாடசாலை மாணவி படுகொலைக்கு

## சிரேஷ்ட பள்ளிக் கல்வியாளர் ஒன்றியம் கடும் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

காட்டுப்புலம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை மாணவி சிவநேஸ்வரன் றெஜினா என்ற ஆறு வயதேயான பச்சிளம் பாலகி கொடூரமாகக் கொலை 23

## வாசனா சம்பத

சீட்டிழுப்பு இலக்கம் 1498 திகதி 2018/06/28

E A J

வெற்றி இலக்கங்கள்: 15 18 32 34 போனஸ் இலக்கம்: 11

தேசிய லொத்தர் சபை

## மஹஜன சம்பத

திகதி 2018/06/28

சீட்டிழுப்பு இலக்கம் 3690

ஆங்கில எழுத்து: S வெல்லப்பட்ட இலக்கங்கள்: 5 4 7 9 1 2

தேசிய லொத்தர் சபை

## கொவிசெத

திகதி 2018.06.28

சீட்டிழுப்பு இலக்கம் 1804

ஆங்கில எழுத்து: P வெல்லப்பட்ட இலக்கங்கள்: 13 47 52 65

தேசிய லொத்தர் சபை

## நீரோகா

திகதி 2018/06/28

சீட்டிழுப்பு இலக்கம் 413

லக்கினம்: கன்னி வெற்றி இலக்கங்கள்: 03 16 24 60 போனஸ் இலக்கம்: 56

தேசிய லொத்தர் சபை

வலம்புரி 021 221 7603,
விளம்பரத் தொடர்புகளுக்கு 021 567 1532

## துயர் பகிர்கின்றோம்

அமரர் **விக்னஜெயம் கேதாயினி**

பிறப்பு 09.07.2009 இறப்பு 20.06.2018



எமது கல்லூரியில் ஆய்வுகூட உதவியாளராகச் சேவையாற்றும் திரு.தி.விக்னஜெயம் அவர்களின் அன்பு மகள் வி.கேதாயினி அவர்கள் 20.06.2018 அன்று இறைவனடி சேர்ந்துவிட்டார். இவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆன்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

துயர்பகிர்வோர்:ஆசிரியர் நலன்புரிச்சங்கம்
யா/வட்டு.இந்துக் கல்லூரி, சித்தன்கேணி.

(4714)

## கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 14 - 04 - 1956



மறைவு 28 - 06 - 2018

திருமதி **விமலாதேவி றெஜினோல்ட் சுகுமார்**

(ஓய்வுநிலை உப அதிபர்- யா/பரமேஸ்வரா வித்தியாலயம்)

எமது பாடசாலையில் 15 வருடங்களுக்கு மேலாக அரும்பணியாற்றி பாடசாலையின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்த திருமதி விமலாதேவி றெஜினோல்ட் சுகுமார் அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து ஆழ்ந்த துயரடைவதுடன் அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகின்றோம். அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்
யா/பரமேஸ்வரா வித்தியாலயம், திருநெல்வேலி

(C-3054)

WESTERN UNION WU

moving money for better

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு தரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப நாடுங்கள்

உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.

இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை

Authorised Agent

SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE

# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

(ச-2996)

## பெயர் மாற்ற அறிவித்தல்

தாவடி தெற்கு கொக்குவில், பத்திரகாளி கோவிலடி எனும் முகவரியினை உடைய விபுலானந்தம் கஸ்மன் ஆகிய நான் எனது பெயரினை இன்று முதல் விபுலானந்தம் அபிஷ் எனப் பெயர் மாற்றம் செய்கின்றேன்.

இனிவரும் காலங்களில் எனது சகல ஆவணங்களிலும் இப்பெயரையே பயன்படுத்துவேன் என்பதனை இலங்கை வாழ் சனநாயக குடியரசு மக்களுக்கு அறியத் தருகின்றேன்.

-விபுலானந்தம் அபிஷ்
29.06.2018

(4713)



## இணுவில் கந்தசுவாமி கோயில்

## 12ஆம் திருவிழா மஞ்சத் திருவிழா

### விஞ்ஞாபனம்

**பகல் நிகழ்ச்சிகள் இன்று (29.06.2018)**

காலை 7மணி 1008 சங்காபிஷேகம்
முற்பகல் 11மணி வசந்தமண்டப பூசை

நண்பகல் 12மணிக்கு
விநாயகர், வள்ளி, தெய்வானை சமேதரராய்
முருகப்பெருமான் உள்வீதி வலம் வருவார்!

பிற்பகல் 1மணிக்கு பகல் திருவிழா நிறைவடையும்.

மாலை 5மணிக்கு வசந்த மண்டப பூசை
ஆரம்பமாகி சண்முக அர்ச்சனை நடைபெறும்.

இரவு 7மணியளவில் பிள்ளையார், சிவன் பார்வதி,
வள்ளி தெய்வானை சமேதரராய் ஆறுமுகப்பெருமான்
மஞ்சத்தில் வலம் வருவார்.

அடியார்கள் அனைவரும் சண்முகப் பெருமானின் திருமஞ்ச காட்சியை கண்டு சண்முகப் பெருமானின் ஆசியை பெற்றுக் கொள்ளுமாறு வேண்டிக்கொள்கிறோம்.

12ஆம் திருவிழா உபயகாரர்களும்,
தர்மகர்த்தா சபையினரும்.

(4698)

உ
ஸ்ரீ ராம ஜெயம்

## இணுவில் திருப்பதி

## அருள்மிகு திருவேங்கடேஸ்வரர் ஆலய மஹாலட்சுமி தாயார் குடமுழுக்குத்திருமுகம்

### 01-07-2018 ஞாயிற்றுக்கிழமை

**கோவிந்தன் அடியார்களே!**

பெருமாளின் இணைபிரியா சக்தி அன்னை மஹாலட்சுமி, அதனால்தான் அகிலமெல்லாம் நிறைந்திருக்கும் பெருமாளை அலர்மேல் மங்கையுறை மார்பா என்று ஆழ்வார்கள் மஹாலட்சுமி தாயாரைப் புகழ்ந்து பாடியுள்ளனர். இப்பெருமை மிகு பெரியபெருமாளின் அருட்பிரசாத வடிவாகிய மஹாலட்சுமி தாயார் பாற்கடலிலிருந்து உதித்ததுபோல் இந்து சமுத்திரம் கடந்து இணுவைத் திருப்பதியில் எழுந்தருளியுள்ளார். அத்தாயாருக்கு குடமுழுக்கென்னும் சம்புரோக்ஷணம் ஆனித் திங்கள் 17ஆம் நாள் (01.07.2018) ஞாயிற்றுக்கிழமை காலை 9.35 மணியளவில் திருவோண நட்சத்திரமும் சிம்ம லக்கினமும் கூடிய சுபவேளையில் நடைபெறத் திருவருள் கூடியுள்ளது.

### கர்மாரம்பம்

- 29.06.2018 வெள்ளிக்கிழமை காலை 5.30 மணிக்கு கோதோஹன முகூர்த்தத்தில் கணபதி வழிபாட்டுடன் ஆரம்பம். மாலை 4.00 யாகாரம்பம்.
- 30.06.2018 சனிக்கிழமை காலை 8.00 முதல் மாலை 5.00 மணிவரை அடியார்கள் மஹாலட்சுமி தாயாருக்கு பால் அபிஷேகம்.
- 01.07.2018 ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 4.00 மணிக்கு ஸ்ரீ வெங்கடேஸ்வரப் பெருமானுக்கு 108 கலச மஹாபிஷேகம். தொடர்ந்து கும்பாபிஷேக தின மணவாளக்கோல தரிசனம்.

காலை 9.35 மணிக்கு மஹா கும்பாபிஷேகம்,
மஹாலட்சுமி தாயாரின் விசேட தரிசனம்,
தொடர்ந்து மஹாபிஷேகம், காலை 11.00 மணிக்கு
லட்சுமி நாராயணர் திருக்கல்யாணம், பகல் 12.30
மணிக்கு மஹாலட்சுமி தாயார் கருவறைப்
பிரவேசம், லட்சுமி நாராயணர் ஏகாந்தசேவை.

தொலைபேசி இல: 0212242300

ஆலய தர்மகர்த்தா
ச.கணேசலிங்கம்

(4717)

# பாலகி படுகொலையைக் கண்டித்து சுழிபுரத்தில் வீதிமறியல் போராட்டம்



(படங்கள்:-சாளின், சோபிகா)

(யாழ்ப்பாணம்)


சுழிபுரம் காட்டுப்புலம் பகுதியில் பாடசாலை மாணவி படுகொலை செய்யப்பட்டதை கண்டித்தும் மாணவிக்கு நீதி கோரியும் விரைவில் உரிய நடவடிக்கை எடுக்க வலியுறுத்தியும் பாடசாலை மாணவர்களுடன் பொதுமக்கள் ஒன்றிணைந்து நேற்று சுழிபுரம் சந்தியில் வீதி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மாணவியின் படுகொலை தொடர்பாக 6 பேர் கைது செய்யப்பட்டு மறுநாளே 5 பேர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். குற்றம் செய்தவர்கள், குற்றத்துக்கு உடந்தையாக இருந்தவர்கள் அனைவரும் தண்டிக்கப்பட வேண்டும்.

எனவே உடனடியாக பொலிஸார் ஏனையவர்களைக் கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்தி அதிகூடிய தண்டனை விரைவில் வழங்கப்படவேண்டும். குறித்த பகுதியில் பொலிஸ் காவலரண் ஒன்று அமைக்கப்பட்டு பொலிஸார் கண்காணிப்பில் ஈடுபடுவதுடன் போதைப்பொருள் விற்பனையை முற்றாகத் தடுக்க பக்கச்சார்பற்ற நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். குறிப்பாக மாணவியின் படுகொலை தொடர்பாக அரசியல்வாதிகள், கல்வித்துறை சார்ந்த அதிகாரிகள், சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை அதிகாரிகள், பெண்கள் அமைப்புக்கள் குரல் கொடுக்கவில்லை என்றும் விரைவான நடவடிக்கை எடுப்பதற்கு அழுத்தங்கள் கொடுக்கவில்லை எனவும் குற்றஞ்சாட்டியதுடன் அவர்கள் இந்த இடத்துக்கு வருகைதரவேண்டும் என தெரிவித்து மேற்குறித்த போராட்டத்தை முன்னெடுத்தனர்.

நேற்றுக் காலை 7.30 மணி முதல் சுழிபுரம் சந்தியில் வீதியை மறித்து போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இதனால் யாழ்ப்பாணம்-காரை நகருக்கு இடையிலான போக்குவரத்துக்கள் ஸ்தம்பிதம் அடைந்திருந்தன. இந்தப் போராட்டம் ஆரம்பித்து சில மணி நேரத்தின் பின்னர் பல மக்கள் பிரதிநிதிகள், அரசியல் கட்சிகளின் உறுப்பினர்கள், சில பொது அமைப்பின் பிரதிநிதிகள் அவ்விடத்துக்கு சென்று போராட்டத்தில் கலந்து கொண்டிருந்தனர். (இ-4-9)

# சர்வதேச அதிகாரப் போட்டியில் நாடுகளை பலிக்கடாவாக்க வேண்டாம்-நாமல் எம்.பி



(கொழும்பு)

சர்வதேச அதிகாரப் போட்டியில் நாடுகளைப் பலிக்கடா ஆக்குவது தவிர்க்கப்பட வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ வலியுறுத்தியுள்ளார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது சீன அரசாங்கத்தினால் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு பாரிய நிதி அன்பளிப்புச் செய்யப்பட்டதாக நியூயோர்க் டைம்ஸ் செய்தி வெளியிட்டிருந்தது.

அதற்குப் பதிலளிக்கும் வகையில் நாமல் ராஜபக்ஷ தன் டுவிட்டர் கணக்கில் பதிவொன்றை இட்டுள்ளார். குறித்த பத்திரிகையின் செய்தி ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல என்று அவர் அதில் தெரிவித்துள்ளார்.

உலக நாடுகளின் கப்பல் போக்குவரத்து வழித்தடத்தில் முக்கியமான இடத்தில் அம்பாந்தோட்டை துறைமுகம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. சீனா இந்த விடயத்தில் உதவியதனை சில நாடுகளினால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

எனினும் சர்வதேச அதிகாரப் போட்டியில் எந்தவொரு நாட்டின் நலனும் பலிக்கடா ஆக்கப்பட முடியாது.

அவ்வாறான விடயங்கள் தவிர்த்து கொள்ளப்பட வேண்டும் என்றும் அவர் மேலும் வலியுறுத்தியுள்ளார். (இ-7)




# ரவுண்ட் 16இல் பிரேசில்

உலக கிண்ண கால் பந்து தொடரின் 'ரவுண்ட் 16' சுற்றுக்கு பிரேசில் அணி முன்னேறியது. கடைசி லீக் போட்டியில் செர்பியாவை 2-0 என வீழ்த்தியது.

ரஷ்யாவில் 21ஆவது உலக கிண்ண கால்பந்து தொடர் நடக்கிறது.

இதன் 'இ' பிரிவு லீக் போட்டியில் ஐந்து முறை சம்பியனான நெய்மரின் பிரேசில் அணி, செர்பியாவை சந்தித்தது.

இதில் குறைந்தபட்சம் 'சமன்' செய்தால் அடுத்த சுற்றுக்கு செல்லலாம் என்ற நிலையில் பிரேசில் களமிறங்கியது. போட்டியின் 25ஆவது நிமிடம் ஜீசசிடம் இருந்து பந்தை வாங்கிய நெய்மர், கோல் அடிக்க முயன்றார். இதை செர்பிய கோல் காப்பாளர் டோஜ்கோவிச், இடது கையால் தடுத்து அசத்தினார்.

**கிடைத்தது முன்னிலை**

35ஆவது நிமிடம் கவுட்டினோ அடித்த பந்து செர்பிய கோல் போஸ்ட் முன் விழுந்து வேகமாக மேலே எழுந்தது. இதை தடுக்க ஓடி வந்தார் டோஜ்கோவிச். இதற்குள் முன் வந்த பவுலினோ, பந்தை கோல் காப்பாளர் தலைக்கு மேலாக தூக்கி விட, கோலாகமாறியது. 'ஸ்ரொப பேஜ்' நேரத்தில் நெய்மர் அடித்த பந்து கோல் போஸ்ட் மேலாக சென்றது. முதல் பாதியில் பிரேசில் அணி 1-0 என முன்னிலை பெற்றது.

இரண்டாவது பாதியில் 57ஆவது நிமிடத்தில் வில்லியன் தந்த பந்தை பெற்ற கவுட்டினோ தலையால் முட்டினார். இது நெய்மரிடம் சென்றது. இவர் அடித்த பந்தை டோஜ்கோவிச் மீண்டும் தடுத்தார். 61ஆவது நிமிடம் செர்பியாவின் ருகவினா அடித்த பந்து கோல் காப்பாளர் அலிசன் பெக்கர் தடுக்க, பந்து கையில் பட்டு திரும்பியது. இதை மிட்ரோவிச் தலையால் முட்டினார். கோல் எல்லைக்கு அருகில் இருந்த தியாகோ சில்வா 'தில்லாக' தடுக்க பிரேசில் தலை தப்பியது.


கோலடித்த தியாகோ சில்வா அருகில் நெய்மர்

**உறுதியான வெற்றி**

68ஆவது நிமிடம் கிடைத்த 'கோர்னர் கிக்' வாய்ப்பில், நெய்மர் கோல் போஸ்ட் நோக்கி அடித்தார். அங்கிருந்த தியாகோ சில்வா, தலையால் முட்டி வலைக்குள் தள்ள பிரேசில் அணி (2-0) வெற்றி உறுதியானது.

தன் பங்கிற்கு ஒரு கோல் அடித்து விட முயன்ற நெய்மரின முயற்சிக்கு பலன் கிடைக்கவில்லை. முடிவில் பிரேசில் அணி 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. இதை யடுத்து 7 புள்ளிகள் பெற்ற பிரேசில் அணி, இப்பட்டியலில் முதலிடம் பிடித்து 'ரவுண்ட் 16' சுற்றுக்கு முன்னேறியது. வரும் ஜூலை 2ஆம் திகதி மெக்சிகோவை சந்திக்கிறது.

**13** கடந்த 1966 உலக கிண்ணத் தொடரில் லீக் சுற்றுடன் திரும்பியது பிரேசில். இதன்பின் எழுச்சி பெற்ற இந்த அணி 1970இல் கிண்ணம் வென்றது. அன்று முதல் தொடர்ந்து 13ஆவது முறையாக 'நொக் அவுட்' சுற்றுக்கு முன்னேறியது.

**3** சுதந்திரத்துக்குப் பின் களமிறங்கிய 2006, 2010, 2018 என மூன்று உலக கிண்ணத் தொடரிலும் லீக் சுற்றுடன் திரும்பியது செர்பியா.

**2** கடந்த 2010க்குப் பின் லீக் சுற்றில் மோதிய அடுத்தடுத்த போட்டிகளில் வெற்றிபெற்றது பிரேசில்.

# ஜப்பான் 'ஜாலி'

## மஞ்சள் அட்டை விதியால் கிடைத்தது நொக்கவுட்


மகிழ்ச்சியில் திளைக்கும் ஜப்பான் ரசிகர்கள்

போலந்துக்கு எதிரான உலக கிண்ண கால்பந்து லீக் போட்டியில் தோற்ற போதும், ஜப்பான் அணி 'ரவுண்ட் 16' சுற்றுக்கு முன்னேறியது.

ரஷ்யாவில் உலக கிண்ண கால்பந்து தொடர் நடக்கிறது.

இதன் 'எச்' பிரிவு லீக் போட்டியில் ஜப்பான், போலந்து அணிகள் மோதின.

இப்போட்டியை 'சமன்' செய்தால் அடுத்த சுற்று வாய்ப்பு என்ற நிலையில் ஜப்பான் களமிறங்கியது. போட்டியின் 32ஆவது நிமிடத்தில் கிடைத்த பந்தை போலந்து வீரர் கமில் தலையால் முட்டி கோலாக்க முயற்சித்தார்.

ஆனால், கோல் லைன் அருகில் சென்ற பந்தை, பாய்ந்து வந்து தடுத்தார் கோல்காப்பாளர் கவாசிமா. இதனால், நூலிழையில் போலந்தின் கோல் வாய்ப்பு பறிபோனது. இது, 'கோல் லைன்' தொழில்நுட்பத்திலும் உறுதியானது. முதல் பாதி கோல் எதுவுமின்றி முடிந்தது.

59ஆவது நிமிடத்தில் போலந்து அணிக்கு 'பிரீ கிக்' வாய்ப்பு கிடைத்தது. இதில், ரபெல் தந்த பந்தை கோல் போஸ்ட் அருகே பெற்றார் பெட்னார்க். துடிப்பாக செயற்பட்ட இவர் காலால் உதைத்து கோலாக்கினார். இதற்கு, எதிரணியால் பதிலடி கொடுக்க முடியவில்லை.

முடிவில், போலந்து 1-0 என வெற்றி பெற்றது. இருப்பினும், புள்ளிப்பட்டியலில் 2ஆவது இடம்பிடித்த ஜப்பான் அணி அடுத்த சுற்றுக்கு முன்னேறியது. போலந்து அணி தொடரிலிருந்து வெளியேறியது.

**முன்னேறியது எப்படி?**

'எச்' பிரிவில் ஜப்பான், செனகல் அணிகள் தலா 4 புள்ளிகள் பெற்றன, கோல் வித்தியாசமும் 0 என, சமமாக இருந்தது. இதனால் இத்தொடரில் செனகலை விட (6) குறைவான 'மஞ்சள் அட்டை' பெற்ற ஜப்பான் (4) அடுத்த சுற்றுக்குள் நுழைந்தது.

உலக கிண்ண வரலாற்றில் இப்படிப்பட்ட விதிமுறையால் அடுத்த சுற்றுக்கு முன்னேறிய முதல் அணியானது ஜப்பான்.

# ஜேர்மனி சரிந்தது எப்படி?

சிறப்பான தலைவர் இல்லாதது, களத்தில் வகுத்த தவறான திட்டமிடல், வீரர்கள் தேர்வில் சொதப்பியது உள்ளிட்ட காரணங்கள்தான் ஜேர்மனியின் தோல் விக்கு முக்கிய காரணங்களாகின.

உலக கிண்ணத் தொடரில் 2006 சம்பியன் இத்தாலி, 2010ல் சாதித்த ஸ்பெயின் அணிகள் அடுத்த தொடரின் முதல் சுற்று டன் நடையைக் கட்டின. இதனால்2014 சம்பியன் ஜேரமனிக்கு ரஷய தொடர சிக்கல் கொடுக்கலாம் என கூறப்பட்டது.

2014இல் சாதித்த அணியில் இருந்த அணித் தலைவர் பிலிப் லாம், அதிக கோல் அடித்து வரலாறு படைத்த குளோஸ் ஓய்வுபெற்றனர். 2016ல் ஸ்கீவன்ஸ்டீகரும் விலகினார். இதனால் 2014ல் இருந்தே தடுமாறியது. 23 பேர் கொண்ட உலக கிண்ண அணியில் லெராய் சேன் இடம் பெறவில்லை. கடைசியாக பங்கேற்ற 6 சர்வதேச போட்டிகளில் 1ல் மட்டும் வென்றிருந்தது. உலக கிண்ணத் தொடர் முழுவதும் வீரர்கள் முழு அளவல்திறமை வெளிப்படுத்தவில்லை. முன்கள வீரர்களிடம் எதிரணியின் கோல் ஏரியாவை தகர்க்கும் திறன், வேகம் போதவில்லை.

**குழப்பமான தேர்வு**

சுவீடனுக்கு எதிராக சமி. கெதீராவை நீக்கி விட்டு செபஸ்டியன் ரூடியை கொண்டு வந்தனர். தென் கொரிய போட்டிக்காக ஐந்து மாற்றங்கள் செய்தனர். மீண்டும் கெதீரா வந்தார். கடந்த இரு தொடரில் அதிக கோல் அடித்த தோமஸ் முல்லர் இம்முறை ஒரு கோல் கூட அடிக்கவில்லை. தென் கொரியாவுக்கு எதிராக 86 ஆவது நிமிடத்தில் கிடைத்த வாய்ப்பில் மாட் ஹம்மல்ஸ், தலையால் முட்டி கோல் ஆக்கியிருக்க வேண்டும். மாறாக இவர் தோளில் பட்டு பந்து வெளியே சென்றது.

**அடுத்து என்ன?**

கடந்த ஆண்டு ரஷ்ய மணணில் கொன்பெடரேஷன் கிண்ணம் வென்றது ஜேர்மனி. இதில் இருந்த 7 வீரர்கள் தென் கொரியாவுக்கு எதிராக களமிறங்கிய முதல் 11 பேர் கொண்ட அணியில் இல்லை. கெதீரா, ஓசில், நோயர், போயட்டாங் போன்ற வீரர்கள் 2010 உலக அணியில் சேர்க்கப்பட்டது போல, கடந்த ஆண்டு 21 வயது யூரோ தொடரில் சாதித்த எவரும் தற்போதைய அணியில் சேர்க்கப்படவில்லை. கடந்த தொடரில் எதிரணிக்கு மொத்தமே 4 கோல்கள் மட்டும் விட்டுக் கொடுத்த ஜேர்மனி, இம் முறை லீக் சுற்றில் மட்டும் 4 கோல் (அடித்தது 2 மட்டும்) விட்டுக் கொடுத்தது பெரிய ஏமாற்றம்தான்.

# கொலம்பியா 'கொண்டாட்டம்'

செனகல் அணிக்கு எதிரான உலக கிண்ண கால்பந்து லீக் போட்டியில் எர்ரி மினா ஒரு கோல் அடித்து கைகொடுக்க கொலம்பிய அணி 1-0 என்ற கோல் கணக்கில் 2ஆவது வெற்றியை பதிவு செய்தது.

ரஷ்யாவில், 21ஆவது 'பிபா' உலக கிண்ண கால்பந்து தொடர் நடக்கிறது.

நேற்று சமரா நகரில் நடந்த 'எச்' பிரிவு லீக் போட்டியில் உலகின் 'நம்பர் 16' கொலம்பிய அணி, 27 ஆவது இடத்தில் உள்ள செனகல் அணியை எதிர்கொண்டது. 'ரவுண்ட் 16' சுற்றுக்கு முன்னேற கொலம்பிய அணி கட்டாய வெற்றியை நோக்கியும், செனகல் அணி 'சமன்' செய்தாலே போதும் என்ற நிலையிலும் களமிறங்கின.

**'பெனால்டி' மறுப்பு**

ஆட்டத்தின் 12ஆவது நிமிடத்தில் கொலம்பியாவுக்கு 'பிரீ கிக்' வாய்ப்பு கிடைத்தது. இதில் ஜுவான் பெர்ணான்டோ குயின்டிரோ அடித்த பந்தை செனகல் கோல்காப்பாளர் காடிம் நிடியே தடுக்க, கொலம்பியாவின் கோல் வாய்ப்பு வீணானது. பின், 17ஆவது நிமிடத்தில் செனகலின் சடியோ மானேவை கொலம்பியாவின் டேவின்சன் சான்சஸ் தள்ளிவிட்டார். அப்போது 'பவுல்' செய்ததாக நினைத்த 'மேட்ச் ரெப்ரி' செனகல் அணிக்கு 'பெனால்டி' வாய்ப்பு வழங்கினார். இதை எதிர்த்து கொலம்பிய வீரர்கள் முறையிட்டனர். பின் 'வீடியோ ரெப்ரல்' உதவியுடன் 'பவுல்' இல்லை என்பதை உறுதி செய்த 'மேட்ச் ரெப்ரி', செனகலின் 'பெனால்டி' வாய்ப்பை திரும்பப் பெற்றுக் கொண்டார்.

**ரொட்ரிக்ஸ் விலகல்**

இந்நிலையில் 25ஆவது நிமிடத்தில் கொலம்பியாவுக்கு கிடைத்த 'பிரீ கிக்' வாய்ப்பில் குயின்டிரோ தூக்கி அடித்த பந்தை அணித் தலைவர் பல்காவோ தலையால் முட்டி கோலாக்க முயற்சித்தார். ஆனால் பந்து 'கோல் போஸ்ட்டுக்கு' மேலே சென்றது. பின் 27, 28 ஆவது நிமிடத்தில் முறையே செனகலின் கெய்டா, இஸ்மைலா சர் ஆகியோரின் கோலடிக்கும் முயற்சியை கொலம்பிய கோல்காப்பாளர் டேவிட் ஆஸ்பினா தடுத்தார். கடந்த 2014ல் 'கோல்டன் பூட்' விருது வென்ற கொலம்பியாவின் ஜேம்ஸ் ரொட்ரிக்ஸ், 31ஆவது நிமிடத்தில் காயத்தால் வெளியேறினார். முதல் பாதி முடிவு கோல்எதுவுமின்றி சமநிலையில் இருந்தது.

இரண்டாவது பாதியில் 64ஆவது நிமிடத்தில் செனகலுக்கு கிடைத்த 'பிரீ கிக்' வாய்பபில் சடியோ மானே தூக்கி அடித்த பந்து 'கோல் போஸ்ட்டுககு' மேலே செனறது. இந் நிலையில் 74ஆவது நிமிடத்தில் கிடைத்த 'கோர்னர்' வாய்ப்பில் கொலம்பியாவின் குயின்டிரோ தூக்கி அடித்த பந்தை எர்ரி மினா தலையால் முட்டி முதல் கோல் அடித்தார். கடைசி நிமிடம் வரை போராடிய செனகலால் ஒரு கோல கூட அடிக்க முடியவில்லை.


கோல் அடித்த எர்ரி மினா

இறுதியில் கொலம்பியா 1-0 என்றகணக்கில் வெற்றி பெறறது. இதன மூலம் 3 போட்டியில் 2 வெற்றி. ஒரு தோல்வி என 6 புள்ளிகளுடன் 'எச்' பிரிவில் முதலிடம் பிடித்து 'ரவுண்ட் 16'க்கு முன்னேறியது.

# ஜொலிஸ்ரார் வெற்றிக் கிண்ணம்

ஜொலிஸ்ரார் வெற்றிக் கிண்ணத்துக்காக 30 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்ட சுற்றுப் போட்டியில் யாழ்.மாவட்ட துடுப்பாட்ட சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட 25 கழகங்களைக் கொண்ட 26 அணிகள் பங்குபற்றவுள்ளன.


இச்சுற்றுப் போட்டிக்கான விண்ணப்ப முடிவுத் திகதி 30.06.2018 ஆகும். அணி ஒழுங்கு தெரிவு 01.07.2018 அன்று மாலை 5 மணிக்கு யாழ்.இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

போட்டிகள் 07.07.2018 பிற்பகல் ஒரு மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

இச்சுற்றுப்போட்டி தொடர்பான மேலதிக விபரங்களுக்கு 0771829243 எனும் தொலைபேசி இலக்கத்தை அணுகவும். (கு)

# உண்மையைக் கூறினால் ஆத்திரப்படுவார்கள் என்று எக்காலத்திலும் மௌனமாக இருக்க எண்ணுவது மடமை

## முதலமைச்சர் விக்னேஸ்வரன் சுட்டிக்காட்டு



(யாழ்ப்பாணம்)

பொய்மைகளின் வழிநின்று சீற்றமடைபவர்களுக்கு உண்மையை எடுத்துக் கூறுவது பிழையன்று. அவ்வாறு செய்யாவிட்டால் பொய்மையை எப்பவேண்டுமானாலும் பலாத்காரமாக நிலைநிறுத்தலாம் என்றாகி விடும். உண்மைக்கு ஒருபலம் உண்டு. அதுபற்றி ஆதிசங்கரரின் குருவின் குருவான கௌடபாதர் கூறியுள்ளார். உண்மையானது ஆயிரம் பொய்மை களுக்கு மத்தியிலும் சுடர் விட்டுப் பிரகாசிக்கக் கூடியது என்றார். அதன் சக்தி அது. எனவே உண்மை யைக் கூறினால் மற்றவர்கள் ஆத்திரப்படுவார்கள் என்று எக்காலத்திலும் மௌனம் சாதிக்க வேண்டும் என்று எண்ணுவது மடமை என வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இவ்வாறக் கேள்வி வரலாறு சம்பந்தப்பட்டது. எனினும் கேள்வி கேட்டவர் சற்று தடுமாற்றத்துடன்தான் கேள்வியைக் கேட்டுள்ளார்.

**கேள்வி - இலங்கையின் மூத்தகுடிகள் தமிழரே என்று ஒரு குண்டைத் தூக்கிப் போட்டுவருகின்றீர்களே! சிங்களப் பேராசிரியர்கள் இதுவரை கூறி வந்ததை முற்றாக மாற்றும் வண்ணம் உங்கள் கருத்து அமைந்துள்ளது. உங்கள் கூற்று சிங்கள மக்களை சீற்றமடையச் செய்யும் அல்லவா?**

பதில் -உண்மையை சில தருணங்களில் கூறாது விடுவது பொருத்தமானதாகும் சில தருணங்களில் அதனை இடித்துக் கூற வேண்டியுள்ளது.

ஒருவர் சிலரால் வாள் தடிகளுடன் துரத்தப்பட்டு வருகின்றார். அவர் உங்கள் வீட்டினுள் நுழைந்து ஒளிந்து கொள்கின்றார். வந்தவர்கள் அவரின்அடையாளங்களைக் கூறி "வந்தாரா?" என்று கேட்கின்றார்கள். "ஆம்" என்று அவரைப் பிடித்துக் கொடுத்தால் ஒளிந்தவரின் உயிர் உங்கள் முன்னிலையிலேயே பிரிய சந்தர்ப்பம் உண்டு. நீங்கள்முடியுமெனில்மௌனம்காக்கலாம் அல்லது"இல்லை" என்று கூறலாம் "பொய்மையும் வாய்மை இடத்தே புரை தீர்ந்த-நன்மை பயக்கும் எனின்" என்று பொய்யா மொழியினராகிய வள்ளுவரே கூறியிருக்கின்றார்.

அதாவது பொய்யான சொற்கள் குற்றமற்ற நன்மையைப் பிறர்க்கு நல்குமாயின் அச் சொற்கள் வாய்மைச் சொற்கள் போன்ற நிலையை அடைவன என்றார். அவ்வாறான சொற்களானது பிறர்க்கு நன்மை பயக்க வேண்டும். தனக்கு நன்மை தருவதாக, இருந்தால் அது சுயநலம் ஆகிவிடும். ஆகவேதான் "புரைதீர்ந்த" என்றார் வள்ளுவர். குற்றம் அற்ற என்பது பொருள்.

ஆனால் உண்மையா னது சில தருணங்களில் வெளிக் கொண்டு வரப்படாது நம்மால் மௌனம் காக்கப்பட்டால் பொய்மைகள் நாடு பூராகவும் உலாவத் தொடங்கி விடுவன. இன்று அவ்வாறான ஒருநிலையே எழுந்துள்ளது. பத்தாம் நூற்றாண்டில் சோழர் படையெடுப்பின் போது வந்தவர்களே இலங்கைத் தமிழர்கள் என்று கூறி வருகின்றார்கள் பெரும் பான்மையினர். உண்மை அதுவல்ல. இலங்கையின் மூத்த குடிகள் நாகர்கள் என்று அழைக்கப்பட்ட தமிழர்களே என்பது இப்போது வரலாற்று ரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது என்றாலும் சுயநலம் கருதி, சிங்கள அறிஞர்கள் உண்மையைத் தெரிந்தும் அதைத் திரிபுபடுத்தி சொல்லி வருகின்றார்கள். அவர்களின் பொய்மைகள் வாய்மைக்குள் அடங்கமாட்டா.

உங்களைப் போலவே ஒரு சிங்கள அன்பர் ஆத்திரத்துடன் எனக்கு மின்னஞ்சல் ஒன்றை அனுப்பினார். உண்மைக்குப் புறம்பான தகவல்களை நான் பரப்பி வருகின்றேன் என்றார். அதற்கு உடனே நான் பதில் இறுத்தேன். எனது வரலாற்று அறிவின்படி தமிழரின் வரலாறு பற்றிய சில விடயங்களைச் சரியென்று ஏற்றுக்கொண்டுள்ளேன். அவற்றைப் பிழையென்று கூறக் கூடிய மேம்பட்ட அறிவு உங்களுக்கிருந்தால் உங்கள் கருத்தைக் கூறுங்கள். நான் நூல்களை வாசித்தறிந்து, எமது வரலாற்றுப் பேராசிரியர்களுடன் கலந்தாலோசித்து எனது தரவுகள் சரியா? நீங்கள் கூறுபவை சரியா? என்ற முடிவுக்கு வருகின்றேன் என்று கூறி பின்வரும் ஐந்து விடயங்களை மின்னஞ்சல் மூலம் அவர்முன் வைத்தேன்.

1. இலங்கையில் திரா விடர்கள் புத்தபெருமானின் பிறப்புக்கு முன்னரே இருந்து வாழ்ந்து வந்துள்ளார்கள்.

2. ஒரு முழுமையான மொழி என்ற முறையில் சிங்கள மொழி பரிணாமம் பெற்றது கி.பி 6ம் அல்லது 7ம் நூற்றாண்டிலேயே. அதற்குமுன் சிங்களமொழி என்று ஒன்று இருக்கவில்லை.

3. நவீன DNA சோதனைகள் தற்போதைய சிங்களமக்கள் பண்டைய திராவிடரின் வாரிசுகளே என்பதை உறுதிப்படுத்துகின்றன. திராவிடர் என்ற சொல்லும் தமிழர் என்ற சொல்லும் தமிழரையே குறிப்பிடுகின்றன. சமஸ்கிருதம் பேசிய மக்களுக்கு தமிழர் என்று உச்சரிக்க முடியாததால் அவர்களே தமிழர்களைத் திராவிடர் என்று அழைத்தார்கள்.

4. சிங்களமொழியானது தமிழ், பாளி மற்றும் அக்காலத்தைய பேச்சு மொழிகளில் இருந்தே உருப்பெற்றது.

5. சிங்களவர் என்ற முறையில் வடமாகாணம் பூராகவும் எந்தக் காலகட்டத்திலும் சிங்கள மக்கள் இங்கு வாழவில்லை. தமிழ் மக்கள் வாழ்ந்த பண்டைய இலங்கையில் பின்னர் ஒரு கட்டத்திலேயே சிங்கள மக்கள் உருவெடுத்தார்கள். அவர்கள் தற்போதைய வடமாகாணத்தின் தெற்குப் பக்கமாக வாழ்ந்து வந்தார்கள்.

அவர் எனது கூற்றை மறுத்து தனது தரவுகளை சமர்ப்பிப்பதாகக் கூறியுள்ளார். எனது கூற்றுக்களே அவர்களைக் கோபமடையச் செய்து சிந்திக்கவும்வைத்துள்ளது. உண்மை நிலையை உணர்த்தினால் சிங்கள மக்கள் சீற்றமடைவார்கள் என்பது எனக்குத் தெரியும். நான் சிங்களமக்களுக்கு எதிரானவன் அல்ல. ஆனால் சிங்களமக்கள் இதுவரையில் நிர்மாணித்துள்ள பொய்மையான வரலாற்றை எதிர்ப்பவன். உண்மை வெளிவர வேண்டும் என்ற விருப்பம் உடையவன்.

ஒரு திருமணம் நடக்க விருந்தது. ஒரு வீட்டுக்குக் குடியிருக்க வந்த ஒரு குடும்பத்தவர் தாங்கள் அந்த வீட்டுச் சொந்தக்காரரின் உறவினர் என்று கூறி தமது வாரிசுக்கு திருமணமும் நிச்ச யித்து விட்டார்கள். ஆனால் இரு குடும்பங்களுக்குமிடையில் எதுவித சொந்தமுமில்லை. குலம் கோத்திரம் பின்னணி எல்லாம் வெவ்வேறு. வீட்டுச் சொந்தக்காரருக்கு இது தெரிய வந்தது. ஆயிரம் பொய் சொல்லி என்றாலும் பெண்பிள்ளையை கரை சேர்க்க வேண்டும் என்று எம் மக்கள் பேசிவந்துள்ளதை அவரும் அறிந்திருந்தார். அவர் மௌனம் காத்திருக்கலாம். ஆனால் பொய் சொல்லிக் கல்யாணம் நடக்கின்றதே. அது எதிர்காலத்தில் எத்தகைய பாதிப்பைஏற்படுத்தும் என்று அவர் யோசித்துப் பார்த்தார். தனது கடமை உண்மையை உள்ளவாறு கூறி வைப்பதே என்பதை உணர்ந்தார். மாப்பிள்ளை வீட்டார்கள் சொந்தம் பற்றிவேறு நபர்கள் மூலம் வினவியபோது உண்மையைக் கூறினார். எந்தவித சொந்தமுமில்லை அவர்கள் குடியிருக்க வந்தவர்கள் என்பதைத் தெளிவுபடுத்தினார். இதனால் நிச்சயதார்த்தத்துடன் திருமணம் தடைப்பட்டது. இந்த நிலையை ஏற்படுத்தியமை பிழையென்று கூறுவோரும் உண்டு. சரியென்று அடித்துக் கூறுவோரும் உண்டு.

எது எவ்வாறிருப்பினும் உண்மைக்குப் புறம்பான தகவல்களை ஊரில் உலாவ விட்டது குடியிருப்பாளரின் தவறு!தான் தவறைச் செய்து விட்டு.பொய்யைப் புனைந்துரைத்து விட்டு. உண்மையை வெளிக்கொண்டுவந்தவரின் மீது சீற்றமடைவது குடியிருப்பாளரின் பிழை. அதை உணராமல் பேசுவது பொய்மையை உண்மையாக்குவது போலாகும் திருமணமானபின் உண்மை வெளிவந்தால் தம்பதியினரிடையேயும் குடும்பத்தினரிடையேயும் ஏற்படக்கூடிய பாதிப்புக்களை நாங்கள் எண்ணிப்பார்க்கவேண்டும். பொய்மையை உண்மை என்று சித்திரித்து ஒருசாரார் நன்மைகளைப் பெற்று வரப்பார்ப்பதும் கருத்துக்கெடுக்கப்பட வேண்டும். இவ்வாறான நிலையில் தான் பொய்மைகளை விமர்சித்து வருகின்றேன்.

பொய்மைகளின் வழி நின்று சீற்றமடைபவர்களுக்கு உண்மையை எடுத்துக் கூறுவது பிழையன்று. அவ்வாறு செய்யாவிட்டால் பொய்மையை எப்ப வேண்டுமானாலும் பலாத்காரமாக நிலை நிறுத்தலாம் என்றாகிவிடும். உண்மைக்கு ஒரு பலம் உண்டு. அதுபற்றி ஆதிசங்கரரின் குருவின் குருவான கௌடபாதர் என்பவர் கூறியுள்ளார். உண்மையானது ஆயிரம் பொய்மைகளுக்கு மத்தியிலும் சுடர் விட்டுப் பிரகாசிக்கக் கூடியது என்றார். அதன் சக்தி அது. எனவே உண்மையைக் கூறினால் மற்றவர்கள் ஆத் திரப்படுவார்கள் என்று எக் காலத்திலும் மௌனம் சாதிக்க வேண்டும் என்று எண்ணுவது மடமை.

பேராசிரியர் பத்மநாதன் அவர்கள் 2016ஆம் ஆண்டு மார்ச் மாதம் வெளிவந்த தமது அண்மைய நூலான " இலங்கைத் தமிழர் வரலாறு- கிழக்கிலங்கையில் நாகரும் தமிழும் - கிமு 250-கிபி 300" என்ற நூலின் தமது பதிப்புரையில் (பக்கம் XIV) பின்வருமாறு கூறுகிறார் -

"இலங்கையின் மூன்றிலொரு பாகத்திலே தமிழர் சமுதாயம் கி.மு.முதலிரு நூற்றாண்டுகளிலும் உருவாகி விட்டது என்பதையும் தொடர்ச்சியான ஒருநிலப்பகுதியிலே தமிழ்மொழி பேசுவோர் வேளிர் ஆட்சியின் கீழமைந்த சிற்றரசுகள் பலவற்றை உருவாக்கி விட்டனர் என்றும்" சொல்லக் கூடிய காலம் வந்துள்ளது. நாகர் தமிழ் மொழிபேசியவர்கள் என்பதாலும்,ஆதி இரும்புக் காலப் பண்பாட்டைப் பிரதானமாக அவர்களே இல ங்கையிற் பரப்பினார்கள் என்பதாலும் கி.மு.ஏழாம் நூற்றாண்டு முதலாகத் தமிழ் ஒரு பேச்சு வழக்கு மொழியாக நிலை பெற்றுள்ளமை உய்த்து ணரப்படுகின்றது. தமிழ் மொழியின் தொன்மை பற்றி தமிழ் நாட்டுத் தொல்பொருட் சின்னங்களை ஆதாரமாகக் கொண்டு நிர்ணயிக்க முடியாதவற்றை இலங்கையிற் கிடைக்கின்ற தமிழ்ப் பிராமிக் கல் வெட்டுக்களின் அடிப்படையிலேயே சொல்லமுடிகின்றமை ஒரு குறிப்பிடத்தக்க விடயமாகும்".

ஆகவே இலங்கையின்மூத்த குடிகள் தமிழரே என்று சொல்வதில் தவறு ஏதும் இருப்பதாகக் கூறமுடியாது.

ஶ்ரீலங்கா கார்டியன் என்ற பத்திரிகையின் 25.01. 2013 ஆம் திகதியப் பிரதியில் பின்ருமாறு கூறப்பட்டுள்ளது,

"சிகல"என்றசொல் (பாளி மொழியில் சிங்கம்) முதன் முதலில் தென்படுவது தீபவன்ச என்ற நூலில் (கி.பி. 4-5ம் நூற்றாண்டுகளில்). இந்த நூலில் "சிகல" என்ற சொல்லானது ஒரு முறையே தென்படுகிறது. சிங்கம் என்ற சொல்லின் காரணமாகவே இந்தத் தீவு "சிகல" என்று அழைக்கப்பட்டது. 5ம் , 6ம் நூற்றாண்டு காலத்தைய நூலாகிய மகாவம்சத்தில் "சிகல" என்ற சொல் இருமுறையே குறிப்பிடப்படுகிறது. ஆனால் கிறிஸ்துவுக்கு முன்னைய இராமாயணத்தில் இத்தீவு இலங்கை (லங்கா) என்றே அழைக்கப்பட்டுள்ளது. தீபவன்ச இவ்வாறான சொற் களைப் பாவிப்பதற்கு முன்னர் இலங் கையில் சிங்கள இனம் என்று ஒன்று இருக்கவில்லை. கி.பி. 4ம், 5ம் நூற்றாண்டுகளில் கூட பின்னர் சிங்கள மொழி என்று அழைக்கப்பட்டமொழி வழக்கிற்கு வரவில்லை. தீபவன்ச, மகாவன்ச என்ற நூல்களை அம்மொழியில் எழுதும் அளவுக்கு அம்மொழி வெளிவந்திருக்கவில்லை".

ஆகவே அந்தக் காலத்தில் சிங்களம் பேசாதவர்களை சிங்களவர் என்று அடையாளப் படுத்துவது தவறானது. எனவே இலங்கையின் மூத்தகுடிகள் தமிழரே என்பதற்கு தற்போது போதிய சான்றுகள் கிடைத்துள்ளன. இதுவரை சிங்கள அறிஞர்களால் குறிப்பிட்டு வரப்பட்ட வரலாறு பிழையானது. உண்மையை உள்ளவாறு உரைப்பது தவறாகாது. சினமூட்டுதல் தவறு என்றால் எமது உண்மை வரலாறு என்ஞான்றும் வெளிவராது போய் விடும். சினமூட்டியேனும் உண்மைகளை வெளிக்கொண்டு வரவேண்டும் என்பதே எனது விருப்பம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

---

## இராசி பலன்

**மீனம்:** குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், உறவினர்களும், நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள்.

**மேடம்:** இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பூர்வீகச் சொத்துக்களால் கணிசமான ஆதாயமுண்டு, மறைமுகப் போட்டிகளைச் சமாளிப்பீர்கள்.

**இடபம்:** அடுத்தவர் விவகாரங்களில் தேவையில்லாமல் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, பயணத்தின் போது பொருட்களில் கவனம் தேவை.

**மிதுனம்:** நட்புவட்டம் விரிவடையும் நாள், பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தி யாகும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.

**கும்பம்:** உன்னதமான வாழ்வுக்கு வழிகாட்டுவீர்கள், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும்.

| | | | |
|---|---|---|---|
| | | | சூரி |
| | இராசி பலன் கிரகநிலை | | ராகு. சுக். |
| கேது. | சந்திராஷ்டமம் ரோகினி, மிருகசீரிடம் இரவு 10.42 மணிக்கு மகர-சந் | | |
| சனி | | குரு | |

**29.06.2018**

ஆனி 15, வெள்ளிக்கிழமை

சூரிய உதயம் காலை 5.55 மணிக்கு

பிரதமை பிற்பகல் 12.38 மணிவரை

பூராடம் பிற்பகல் 3.37 மணிவரை

சுபநேரம் 5.56-7.26 மணிவரை

இராகுகாலம் 10.26-11.56 மணிவரை

வளவன்

**கடகம்:** வழிபாட்டால் சிறப்படைவீர்கள், தொலைபேசி வழியில் பொன்னான தகவல்கள் வந்து சேரலாம், தொழிலை விருத்தி செய்ய முற்படுவீர்கள்.

**மகரம்:** பயணத்தால் பிரபலமானவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு, சுப விரயங்கள் ஏற்படலாம்.

**சிம்மம்:** சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், உள்ளம் மகிழும் சம்பவங்கள் இல்லத்தில் இடம் பெறலாம்.

**தனுசு:** ஆரோக்கியம் சீராக ஆகாரத்தில் கட்டுப்பாடு தேவை, மற்றவர்களில் விமர்சனங்களை மறந்து செயற்படுவது நல்லது, வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**விருச்சிகம்:** வாய்ப்புக்கள் உங்களைத் தேடிவரலாம், நண்பர்கள் மூலம் சுபதகவல்கள் வந்து சேரலாம், வாக்கு மேன்மையுண்டு, அதிகாரிகளை அனுசரித்துச் செல்ல வேண்டிய நாள்.

**துலாம்:** சுறுசுறுப்பாக செயற்படுவீர்கள், எடுத்த காரியத்தை எளிதில் முடிக்க சகோதர வழியில் ஒத்துழைப்புகள் கிடைக்கும், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**கன்னி:** பேச்சில் கனிவு பிறக்கும், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், பக்குவமாக நடந்து பாராட்டுப் பெற வேண்டிய நாள், பயணங்கள் கைகூடும்.



யாழ்ப்பாணம்-வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் கோவில் தேர்த்திருவிழா நேற்று முன்தினம் வெகுவிமர்சையாக இடம்பெற்றது. (படங்கள்: ஐ.சிவசாந்தன்)



யாழ்ப்பாணம்-அச்சுவேலி பத்தமேனி மிட்டிலாங்கூடல் நடராஜா அம்பலவாணர் விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் தேர்த் திருவிழா கடந்த செவ்வாய்க்கிழமை சிறப்பாக இடம்பெற்றது. (படங்கள் - தீபன்)

## அலுமாரிகள் அன்பளிப்பு



யாழ். உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலய வகுப்பறைச் செயற்பாட்டிற்காக பழைய மாணவன் த.கோணேஸ்வரன் 33 உருக்கு அலுமாரிகளை அண்மையில் அன்பளிப்பாக வழங்கினார். (இ)

## மஹா கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

வில்லூன்றி வீரகத்தி விநாயகராலய சம்புரோட்சண மஹா❜ கும்பாபிஷேகம் நாளை மறுதினம் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.


இன்று 29ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.30 மணி முதல் வாஸ்து சாந்தி, நவதானிய முளையிடல் நடைபெறும். பிற்பகல் 3 மணிக்கு மூஷிகக் கொடியேற்றலும் பிரசன்னாபிஷேகம், பிரசன்ன பூசை, கலாகர்ஷணம், விசேட கலச பூசை ஆகியன நடைபெற்று கும்ப யாகசாலைப் பிரவேசம் இடம்பெறும். இரவு 9.45க்கும் 10.35க்கும் இடைப்பட்ட சுப வேளையில் தூபிஸ்தாபனம், யந்திர ஸ்தாபனம், விம்ப ஸ்தாபனம் ஆகியன நடைபெறும்.

நாளை முப்பதாம் திகதி சனிக்கிழமை காலை 8 மணிக்கும் பிற்பகல் 3 மணிக்கும் இடையே பக்தர்கள் எண்ணெய்க் காப்பு சாத்துதல் இடம்பெறும். பிற்பகல் 3 மணிமுதல் பிம்ப சுத்தியும்ஸ்வர்ணாகுதியும்நடைபெறும்.

முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு இடம்பெறும் பூரணாகுதியைத் தொடர்ந்து விசேட கலச பூசையும் கும்பங்கள் வீதிப்பிரதட்சணமும் நடைபெற்று முற்பகல் 10.30க்கும் 11.45க்கும் இடையே இராஜ கோபுரம், மணிக்கூட்டுக் கோபுரங்கள், மூலமூர்த்தி, பரிவார மூர்த்திகள் கும்பாபிஷேகங்கள் நடைபெற்று நண்பகல் 12 மணிக்கு மகாபிஷேகமும் விசேட பூசையும் நடைபெறும். அன்று மாலை 6 மணிக்கு திருவூஞ்சலும் பூந்தண்டிகை உற்சவமும் கிராமப் பிரதட்சணமும் இடம்பெறும். (இ)

## பிக்கப் வாகனம் விபத்து!





(கரணவாய்)

புத்தூரிலிருந்து சென்ற பிக்கப் ரக வாகனம் மட்டுவில் பன்றித் தலைச்சி அம்மன் கோவிலுக்கு அருகாமையில் மின் கம்பத்தில் மோதுண்டு விபத் துக்குள்ளானது. வாகன சாரதி உட்பட இருவர் தலைமறை வாகியுள்ளனர். வாகனம் பலத்தசேதமடைந்துள்ளது. (இ-60-29)

யாழ்.செய்திகள்



தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை (NHDA) ஊடாக 32 வீடமைப்பு மாதிரி கிராம வீட்டுத் திட்ட அடிக்கல் நாட்டுவிழா ஈவினை மத்தியில் அண்மையில் நடைபெற்றபோது விருந்தினர்களை மாலை அணிவித்து வரவேற்பதையும் உடுவில் பிரதேச செயலர் ஜெயகாந்தன், வலி.தெற்கு பிரதேசசபை உறுப்பினர் அரிகரன் ஆகியோர் உரையாற்றுவதையும் பிரதேச செயலர் ஜெயகாந்தன், தேசிய வீடமைப்பு அதிகார சபை மாவட்ட முகாமையாளர் ரவீந்திரன் ஆகியோர் அடிக்கல் நாட்டுவதையும் 32 வீட்டுத்திட்டத்திற்குரிய பயனாளிகளையும் படங்களில் காணலாம். (படங்கள்:சக்தி)

# நம்பிக்கை இழக்க வேண்டாம்.

**உங்களுக்காக நாங்கள் இருக்கிறோம்.**

எந்தத் துயரமாயினும், அழையுங்கள். அல்லது நேரில் வாருங்கள்.

மதசார்பற்ற, இலவச சேவை. ரகசியமானது.

**கை கொடுக்கும் நண்பர்கள்**

யாழ்ப்பாணம்: **077 900 8776**
(தினமும் மு.ப. 9.00 - பி.ப. 1.00)

வவுனியா: **024 324 4444**
(சனி, ஞாயிறு மு.ப. 9.00 - பி.ப. 1.00)


## வட்டு.மத்திய கல்லூரியின் பரிசளிப்பு விழா

யாழ். வட்டுக்கோட்டை மத்திய கல்லூரியின் பரிசளிப்பு விழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் கல்லூரி மண்டபத்தில் கல்லூரி அதிபர் திருமதி. பு.பஞ்சாட்சரம் தலைமையில் இடம்பெறும். இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் செ.சந்திரராஜா, சிறப்பு விருந்தினராக பழைய மாணவனும் வட்டு.தென் மேற்கு கிராம உத்தியோகத்தருமான சி.சிவகுமார் ஆகியோர் கலந்து கொள்வர். நிறுவுநர் நினைவுப் பேருரையினை கோப்பாய் கல்வியியற் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி ஜெயலட்சுமி உதயகுமார் வழங்குவார். (7)


## வேலைக்கு ஆள் தேவை

முல்லைத்தீவு பகுதியில் தோட்ட வேலைக்கு ஆள் தேவை. கால்நடை வளர்ப்பில் ஆர்வமும் அனுபவமும் இருப்பதுடன் தங்கியிருந்து வேலை செய்யக்கூடியவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும். ஆரம்ப சம்பளம் மாதம் 30,000/- வழங்குவதுடன் பிற சலுகைகளும் உண்டு.

**தொ.பே:0771681697, 0766205322**



# விற்பனையாகிறது

# தரம் 5 புலமைப்பரிசில் மாணவர்களுக்கு



Rs. 700/-

# பூமாலை

**15 ஆசிரியர்களின் 15 மாதிரி வினாத்தாள்கள்**

யுனிலங்காஸ் பப்ளிக்கேஷன் 077 6258778



குருவே துணை

வாழ்க வையகம்



வாழ்க வளமுடன்

## ஆளுமைத் திறனூக்கப் பயிற்சிகள் ஆரம்பமாகிறது

- எளியமுறை உடற்பயிற்சிகள்
- எளியமுறை தியானப்பயிற்சிகள்
- சித்தர்கள் வழிவந்த காயகல்பப்பயிற்சி கற்றுக்கொடுக்கப்படுகிறது.

மாணவர்கள் கல்வியில் மேம்பட
மாணவர்கள் உயர்புள்ளிகள் பெற்று சித்தியெய்திட
நோய் எதிர்ப்பு சக்தி பெற்று ஆற்றல் பெருகிட
குடும்பத்தில் அமைதி நிலவி ஆனந்தம் பெருகிட
அனைவரும் வந்து பயிற்சி பெற்று
பலன் பெற்றிட வாருங்கள்

**பயிற்சி வழங்குபவர்கள்:- பேராசிரியர்.S.இந்திரா**
**துணைப்பேராசிரியர் T.நந்தகுமாரன்**

காலம்:-30.06.2018 தொடக்கம் 06.07.2018 வரை
நேரம்:-மாலை 5.00 மணி தொடக்கம் இரவு 7.00 மணிவரை
இடம்:- யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவில்

அத்துடன் 2018/2019 கல்வி ஆண்டுக்கான Vision Diploma கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்பட இருப்பதால் ஆர்வமுள்ளோர் கல்வித் தகைமைகளுடன் அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.எதிர்காலத்தில் எந்த ஒரு வேலைக்கும் யோகா சான்றிதழ்கள் அவசியமாதலால் இப்பொழுதே பெற்றுக் கொள்ள முன்வாருங்கள்.

30.06.2018 சனி, 01.07.2018 ஞாயிறு தினங்களில் அகத்தாய்வு 1 ஆம் நிலை காலை 9.00 மணிக்கு நடைபெறும்.
யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோயில்
இல.81, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம், தொ.பே:-021 222 2772.

(4709)



# மணிவிழா நாயகனை வாழ்த்துகின்றோம்

## திரு. வே.புவனேந்திரன்



இன்று ஓய்வுபெறும்
யா/ வயாவிளான் மத்திய
கல்லூரி பிரதி அதிபர்
திரு. வே.புவனேந்திரன்
அவர்களின் ஓய்வுக்காலம்
சிறக்க வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
இணைந்து பணியாற்றிய
ஆசிரிய நண்பர்கள்
வி.குகநாதன், செ.கமலக்கண்ணன்,
ம.சுதாகரன், நா.செந்தில்நாதன்.

Congratulations



# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை 2ஆம்பாதம்
கி.பா: செவ் 1 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: பொறியியலாளர் அவுஸ்திரேலியா
தொ.இ: B/7787

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: பரணி
கி.பா: 22 சூரிசெவ் 6 இல்
தகைமை/தொழில்:A/L சொந்தத் தொழில்
தொ.இ: B/7794

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: ரேவதி 1 ஆம் பாதம்
கி.பா: 17
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: IT பட்டதாரி
தொ.இ: B/7795

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: சுவாதி 3 ஆம் பாதம்
கி.பா: 31 செவ் 12 இல்
உயரம்: 6'
தகைமை/தொழில்: மிருகவைத்தியர்
தொ.இ: B/6859

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: சதயம் 1 ஆம் பாதம்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: A/L
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்
தொ.இ: G/8213

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: பூராடம் 4 ஆம் பாதம்
கி.பா: 18 செவ் 7 இல்
உயரம்: 5'2'
தகைமை/தொழில்:A/L ஆய்வுகூட உதவியாளர்
தொ.இ: G/8216

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: அனுசம் 4 ஆம் பரதம்
கி.பா: செவ் 8 இல்
தகைமை/தொழில்: A/L
தொ.இ: G/8223

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம் 4ஆம் பாதம்
கி.பா: 20 செவ் 4 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: A/L அரசதொழில்
எதிர்பார்ப்பு: சைவபோசனம் மட்டும்
தொ.இ: G/8224

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


## யாழில் அகதிகள் தினம்




(யாழ்ப்பாணம்)

UNHCR நிறுவனத்தின் அனுசரணையில் சர்வதேச அகதிகள் தினம் அண்மையில் நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் இந்தியாவிலிருந்து மீளத் திரும்பிய அகதிகளின் கருத்துப் பகிர்வும் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. அனைத்து மாணவர்களுக்கும் கற்றல் உபகரணங்களும் வழங்கப் பட்டன. (இ-78)

## தரையில் விழுந்து தீப்பிடித்த வானூர்தி நால்வர் உயிரிழப்பு; மும்பையில் பரபரப்பு

(மும்பை)

மும்பையில் தனியார் நிறுவனத்துக்குச் சொந்தமான சிறிய ரக வானூர்தி ஒன்று நேற்று பிற்பகல் 3 மணியளவில் வானில் பறந்து கொண்டிருந்த போது திடீரென கட்டுமானப் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருந்த இடத்தில் வீழ்ந்து நொருங்கியது. தரையில் விழுந்த உடன் வானூர்தி தீப்பிடித்து எரியத் தொடங்கியதால் மீட்புப் பணிகளை மேற்கொள்ள சிரமம் ஏற்பட்டது. இதனைத் தொடர்ந்து தீயணைப்பு வீரர்களின் உதவியுடன் மீட்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. 12 இருக்கைகள் கொண்ட சிறிய ரக வானூர்தியில் விமானி உட்பட 4 பேர் உயிரிழந்திருப்பதாகக் கூறப்படுகிறது. மும்பை வானூர்தி நிலையத்திற்கு 3 கிலோ மீற்றருக்கு அப்பால் இந்த விபத்து நிகழ்ந்துள்ளது. விபத்துக்குள்ளான வானூர்தி இதற்கு முன்னர் உத்தரபிரதேச அரசின் கட்டுப்பாட்டில் இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)



# போசாக்கு உணவுகள் தொடர்பான கண்காட்சியும் நலமுரசு சஞ்சிகை வெளியீடும்








(கிளிநொச்சி)

போசாக்கு வகையான உணவுகள் தொடர்பான கண்காட்சியும் நலமுரசு சஞ்சிகையும் நேற்றுக் காலை 9.30 மணியளவில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

குறித்த நிகழ்வு கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் கரைச்சி, கண்டாவளை, பூநகரி, பச்சிலைப்பள்ளி ஆகிய பிரதேச சுகாதாரப் பிரிவுகளிலிருந்தும் பலர் கலந்து கொண்டிருந்தனர்.

முதல் நிகழ்வாக நலமுரசு சஞ்சிகை வெளியிடும் நிகழ்வு இடம்பெற்றது. இந்நிகழ்வில் மாகாண பிரதி நீர்ப்பாசனப் பொறியியலாளர் எஸ்.சுதாகரன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டதுடன் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களப் பிரதிப் பணிப்பாளர், கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், வைத்தியர்கள், சுகாதாரப் பரிசோதகர்கள் என பெருமளவானோர் பங்கு கொண்டிருந்தனர். நலமுரசு சஞ்சிகை வெளியீட்டை தொடர்ந்து கண்காட்சி ஆரம்பித்து வைக்கப்பட்டது.

குறித்த கண்காட்சியில் சுகாதார உணவுப் பழக்கங்கள், போசாக்கான உணவுகள் தொடர்பில் காட்சிப்படுத்தப்பட்டன. குறித்த கண்காட்சி நேற்று நடைபெற்று இன்றும் இடம்பெறவுள்ளதுடன் மாணவர்கள், ஆசிரியர்கள், பொதுமக்கள் எனப் பலரும் பார்வையிட்டு வருகின்றனர். குறித்த கண்காட்சியின்போது, போசாக்கான உணவும் மற்றும் சுகாதார முறைகள் தொடர்பில் மாணவர்களை விழிப்புணர்வூட்டும் சிறப்பு நாடகமும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

யுத்தம் நிறைவுற்றதன் பின்னர் வடக்கு மாகாணம் போசாக்கு மட்டத்தில் வீழ்ச்சி அடைந்து காணப்படுவதாக உலக சுகாதார புள்ளிவிபரங்கள் தெரிவித்தன.

குறிப்பாக யுத்தம் இடம்பெற்ற பகுதிகளான கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்கள் அதிகளவில் போசாக்கு மட்டத்தில் குறைவான நிலையில் காணப்பட்டதாக குறித்த காலப்பகுதியில் வெளியான புள்ளிவிபரங்கள் சுட்டிக்காட்டுகின்றன. (2-315)




# இறங்குதுறைகளை புனரமைக்குமாறு கடற்றொழிலாளர்கள் கோரிக்கை

(கண்டாவளை)

கிளிநொச்சி பூநகரிப் பிரதேசத்திற்குட்பட்ட கரையோரப்பகுதிகளில் காணப்படுகின்ற மீன்பிடி இறங்குதுறைகளை புனரமைத்துத் தருமாறு கடற்றொழிலாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பூநகரிப் பிரதேசத்திற்குட்பட்ட கௌதாரிமுனை, மன்னித்தலை ஆகிய இடங்களைச் சேர்ந்த மீனவர்களுக்குரிய இறங்குறைகள் மற்றும் பள்ளிக்குடா இரணைமாதா நகர், கிராஞ்சி, போன்ற கரையோரப்பகுதிகளில் காணப்படுகின்ற இறங்குதுறைகள் பல புனரமைக்கப்படாது காணப்படுகின்றன.

இதனால் கடற்றொழிலுக்கான கடற்றொழில் உபகரணங்களைக்கொண்டு செல்வதிலும் அவற்றை கரைசேர்ப்பதிலும் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக தெரிவித்துள்ள கடற்றொழிலாளர்கள் இந்த இறங்குதுறைகளை ஆழப்படுத்தி புனரமைத்துத் தருமாறு கடற்றொழிலாளர்கள் கோரியுள்ளனர்.

இதேவேளை கரையோரப் பகுதிகளில் வெளிச்ச வீடுகள் அமைக்கப்படாது காணப்படுகின்றன.

இதனாலும் கடற்றொழிலாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கின்றனர். எனவே வெளிச்ச வீடுகளை அமைக்கவும் நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர். (2-315)

# இரணைதீவிலிருந்து நோயாளர் படகுச்சேவையை ஏற்படுத்துங்கள்

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தின் இரணைதீவுப் பகுதி மக்களின் மருத்துவத் தேவைகளுக்கு ஏற்ற வகையில் நோயாளர்களுக்கான படகுச்சேவை ஒன்றை ஏற்படுத்துமாறு கோரியுள்ளனர்.

பூநகரிப்பிரதேசத்திற்குட்பட்ட இரணைதீவுப்பகுதியில் மக்கள் மீள்குடியேறியதையடுத்து குறித்த பிரதேசத்தின் மருத்துவத் தேவை நிவர்த்தி செய்யப்படுவதில் காலதாமதங்கள் காணப்படுகின்றன எனத் தெரிவித்த இரணைதீவு மக்கள் இரணை தீவிலிருந்து நோயாளிகளைக் கொண்டு செல்வதற்கு ஏற்ற வகையில் நோயாளர்களுக்கான படகுச்சேவையை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கோரிக்கை விடுத்துள்ளனர்.

பூர்வீகமாக வாழ்ந்த குறித்த தீவில் அம்மக்கள் வெளியேற்றப்பட்டு சுமார் 28 வருடங்களின் பின்னர் சொந்த இடத்தில் குடியமர அனுமதிக்கப்பட்டிருக்கின்றனர். இந்நிலையில் இங்கு அடிப்படை வசதிகள் ஏற்படுத்தப்படாவிட்டாலும் மருத்துவ வசதி என்பது மிக முக்கியமான ஒன்றாகக் காணப்படுவதனால் இந்த மருத்துவ வசதியை ஏற்படுத்தித் தரவேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-315)

# தென்னை பயிர்ச்செய்கை சபையின் விழிப்புணர்வு வேலைத் திட்டங்களும் விரிவாக்கல் நிகழ்ச்சிகளும்

தென்னை பயிர்ச் செய்கை சபையின் தென்னை தொடர்பான விரிவாக்கல் நிகழ்ச்சிகளும் விழிப்புணர்வு வேலைத் திட்டங்களும் கடந்த 26 ஆம் திகதி காலை 9 மணியளவில் ஆரம்பிக்கப்பட்டு அம்பாள்புரம், பனங்காமம், அம்பலபெருமாள் குளம் ஆகிய மூன்று கிராமங்களில் முன்னெடுக்கப்பட்டது. இந் நிகழ்வில் தென்னை பயிர்ச்செய்கை சபையின் யாழ்.பிராந்திய முகாமையாளர் தே.வைகுந்தன், பண்ணைத் திட்டமிடல் உத்தியோகத்தர் ஈ.சற்குணன், தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.ஆர்.எம்.சபான் ஆகியோர் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் தென்னை தொடர்பான தொழில்நுட்பக் கருத்துக்கள், பசளைப் பிரயோகங்கள், நடுகை முறைகள், கோடை காலங்களில் மண்ணீர் பாதுகாப்பு, உற்பத்தித் திறனை அதிகரித்தல் தொடர்பான விளக்கங்களும் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் கருத்து தெரிவித்த பிராந்திய முகாமையாளர், இப்பிரதேசங்களில் தென்னை வளர்க்கக் கூடிய நிலங்கள் இருந்தபோதிலும் பொருளாதார வசதி குறைவாக இருப்பதனால் தென்னை பயிர்ச்செய்கை சபை மூலம் வழங்கப்படும் மானியங்கள், ஆலோசனைகளைப் பெற்று படிப்படியாக தென்னை செய்கையை மேற்கொள்ள வேண்டும். நுண்நிதி நிறுவனங்களின் மூலம் ஏற்படும் தாக்கங்களை தவிர்ப்பதற்காக தென்னை கற்பகதரு சங்கங்கள் மூலம் வழங்கப்படும் சுழற்சி முறைக் கடன்களை பெற்று



நிதித் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ள முடியும்.

இதன்போது மக்கள் தம் கிராமங்களில் காணப்படும் பிரச்சினைகளான யானை தொடர்பான பிரச்சினைகள், கோடை காலங்களில் கிணறுகள் ஆழப்படுத்தல் தொடர்பான பிரச்சினைகளை சுட்டிக்காட்டினர். இதற்கு கருத்துத் தெரிவித்த பிராந்திய முகாமையாளர், அனைவரும் ஒன்றிணைந்து இப்பிரச்சினைகளுக்கு தீர்வு காண வேண்டும். மேலதிக நிதி தேவைக்காக குறித்த திணைக்களங்களிற்கு அறிவிப்பதாகவும் தெரிவித்தார். மேலும் அனைவரும் ஒன்றிணைந்து கற்பகதரு சங்கங்களை அபிவிருத்தி செய்து சங்கங்கள் மூலமான கடன்களைப் பெற்று தங்களின் தென்னந்தோட்டங்களை தாமே அபிவிருத்தி செய்வதன் ஊடாக வருமானங்களைப் பெற்று வாழ்க்கைத் தரத்தை உயர்த்துமாறு கேட்டுக் கொண்டார். (2)

# புகைப்படப் போட்டியும் கண்காட்சியும் முல்லையில்

(பனிக்கன்குளம்)

சமயங்களினூடாக நல்லிணக்கத்தை வெளிப்படுத்தும் புகைப்படப் போட்டியும் கண்காட்சியும் முல்லைத்தீவு மாவட்டத்தில் நடத்தப்படவுள்ளது.

சமுதாய அபிவிருத்தி நிறுவனத்தின் அனுசரணையுடன் முல்லைத்தீவு மாவட்ட இளைஞன் உபகுழு மற்றும் ஊடக அமையம் இணைந்து நடத்தும் இந்த கண்காட்சி போட்டிக்கு ஆர்வலர்களிடம் இருந்து புகைப்படங்கள் எதிர்பார்க்கப்படுகின்றது.

சமயங்களினூடாக நல்லிணக்கத்தை வெளிப்படுத்தும் புகைப்படங்களுக்கு பரிசில்கள் வழங்குவதுடன் தெரிவு செய்யப்பட்ட புகைப்படங்களை கண்காட்சிப்படுத்தவுள்ளதுடன் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.

சமயங்களினூடாக நல்லிணக்கத்தை வெளிப்படுத்தும் புகைப்படங்களை கையடக்கத்தொலைபேசியிலும் தெளிவாக எடுத்து அனுப்பலாம். தெரிவு செய்யப்படும் முதல் மூன்று புகைப்படங்களுக்கு பெறுமதியான பணப்பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. புகைப்பட ஆர்வலர்கள் எதிர்வரும் 15.07.18 இற்கு முன்னர் mullaitivumedia@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு புகைப்படங்களை அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்படுகின்றது. (2-281)








முல்லைத்தீவு பாண்டியன்குளம் மகாவித்தியாலயத்தின் பொன்விழா நிகழ்வின் காலை அமர்வு நேற்று முற்பகல் 10 மணியளவில் பாடசாலை அதிபர் த.அருமைநாயகம் தலைமையில் இடம் பெற்றது. பழையமாணவரும் வடக்கு மாகாண சபை உறுப்பினருமான சு.பசுபதிப்பிள்ளையின் நிதியொதுக்கீட்டின் கீழ் அமைக்கப்பட்ட சரஸ்வதி சிலை திரைநீக்கம் செய்யப்பட்டதைத்தொடர்ந்து பழையமாணவனும் கிராம அலுவலருமான சுந்தரலிங்கம் ஞாபகார்த்தமாக அவரது குடும்பத்தினரால் அமைக்கப்பட்ட பொன்விழா நினைவுக்கல் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டது. தொடர்ந்து பொன்விழா மலர் வெளியிட்டுவைக்கப்பட்டது. பாடசாலையில் ஆரம்பகாலம் தொடக்கம் இன்று வரை சேவையாற்றி வருகின்ற அதிபரகள் ,ஆசிரியர்கள் கௌரவிக்கப்பட்டனர். (படங்கள்- கண்டாவளை செய்தியாளர்)

# மனித புதைகுழி அகழ்வுப்பணியை தொடர்வதற்கு நிதியொதுக்கீடு போதாது

## சதொச நிறுவனத்திடம் நிதி கோரல்



(மன்னார்)

மன்னார் சதொச விற்பனை நிலைய வளாகத்தில் கண்டு பிடிக்கப்பட்ட மனித எலும்பு அகழ்வுப் பணிகள் நேற்று வியாழக்கிழமை 23ஆவதுநாளாகவும் முன்னெடுக்கப்பட்டது.


தொடர்ச்சியாக சந்தேகத்திற்கு உரிய விதமாக மனித எச்சங்கள் குறித்த வளாகத்தின் மையப்பகுதி மற்றும் நுழைவு பகுதிகளில் கண்டு பிடிக்கப்பட்டு வருகின்றது. பகுதி அளவிலான எலும்பு கூடுகள், முழு மனித எலும்பு கூடுகள் என சந்தேகத்திற்குரிய விதமாக பல மனிதஎச்சங்கள் மீட்கப்பட்டு வருகின்றன.

இதனால் முழு சதொச வளாகத்தையும் அகழ்வு செய்ய வேண்டிய நிலையும் காணப்படுகின்றது. ஆனாலும் தற்போது அகழ்வுப் பணிகளை மேற்கொள்வதற்கும் அகழ்வுப் பணிகளில் மேலதிகமாக உத்தியோகபூர்வமாக அழைக்கப்பட்டு இணைக்கப்பட்ட வைத்திய நிபுணர்கள், பயிற்சி நிலை அதிகாரிகள், பேராசிரியர்கள் பல்கலைக்கழக மாணவர்கள், நகர சபை ஊழியர்களுக்கான உணவு தங்குமிடம் மற்றும் போக்குவரத்து கொடுப்பனவுகளை வழங்குவதற்கான போதுமான நிதி இன்மையால் குறித்த அகழ்வு பணியை தொடர்ச்சியாக கொண்டு நடத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

ஆதலால் அகழ்வுப் பணிகளை மேற்கொள்வதற்கான நிதிப் பங்களிப்பை சதொச நிறுவனத்திடம் கோரியுள்ள போதும் இதுவரை குறித்த நிறுவனம் எவ்விதமான சாதகமான பதிலையும் வழங்கவில்லை.

எனவே சதொச நிறுவனம் நிதி பங்களிப்பை செய்யாத பட்சத்தில் அகழ்வு பணியானது அரசாங்கத்தின் நிதியொதுக்கீடு கிடைக்கும் வரை தற்காலிகமாக நிறுத்தப்படலாம் என்பது குறிப்பிடத்தக்கது. (2)

# முல்லையில் பொசன் தினத்தை முன்னிட்டு வாழ்வாதார உதவிகள் வழங்கி வைப்பு



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்ட படைத்தலைமையகத்தின் ஏற்பாட்டிலும் 59,64,68 ஆகிய படைப் பிரிவுகளின் படைத் தளபதிகளின்ஒத்துழைப் புடனும் இலங்கை போதிராஜ மன்றத்தின் ஒத்துழைப்புடனும் முல்லைத்தீவு மாவட்டத்தில் வசித்துவரும் மக்களிடையே இன ஒற்றுமையை மேம்படுத்தும் முகமாக வறு மைக்கோட்டின் கீழ் வாழும் 100 குடும்பங்களுக்கு பசு மாடுகளும் 100 நோய் வாய்ப்பட்டவர்களுக்கும் வைத்தியசாலைக்கு உதவியும் சக்கரநாற்காலியும் பாடசாலை மாணவர்கள் 150 பேருக்கு ஆயிரம் ரூபா பெறுமதியான புத்தகப்பைகளும் விவசாய குடும்பங்களைச் சேர்ந்த 150 பேருக்கு விவசாய உபகரணங்களும் ஆயிரம் நல்லின மாங்கன்றுகளும் பொசன் தினத்தை முன்னிட்டுவழங்கிவைக்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே, முல்லைத்தீவு மாவட்ட படை கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ராஜகுரு, முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், பிரதேச செயலாளர்கள், இல ங்கை போதி ராஜ நிறுவனத்தின் தலைவர் ஓமல்பே சோபிதநாயக தேரர், தாய்லாந்து,சிங்கப்பூர் ஆகிய நாடுகளை சேர்ந்த கொடையாளிகள் மற்றும் பிரதேச அதிகாரிகள் பலர் கலந்து கொண்டு மக்களுக்கான வாழ்வாதாரங்களை வழங்கி வைத்துள்ளார்கள்.

50 இலட்சம் ரூபா பெறுமதியான வாழ்வாதார உதவிகள் முல்லைத்தீவு மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இதற்கு உதவி வழங்கிய தாய்லாந்து, சிங்கப்பூர் ஆகிய நாடுகளைச் சேர்ந்த கொடையாளிகளும் கலந்துகொண்டு சிறப்பித்துள்ளார்கள். (2-281)

# பொலிஸார் துரத்திச் சென்ற குடும்பஸ்தர் விபத்தில் படுகாயம்

(மன்னார்)

மன்னார் ஜிம்ரோன் நகர் உள்ளக வீதியில் நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில் மன்னார் பொலிஸ் நிலைய வீதி போக்குவரத்துப் பிரிவு பொலிஸார் கடமையில் நின்ற சமயம் மோட்டார் சைக்கிளில் பயணித்த குடும்பஸ்தர் ஒருவரை விரட்டிச் சென்ற நிலையில், பிரஸ்தாப நபர் விபத்திற்கு உள்ளாகிய நிலையில் மன்னார் பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த கிராமத்தைச் சேர்ந்த இராசமாணிக்கம் இராஜேந்திரன் (வயது-54) என்ற இரு பெண் பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு விபத்திற்குள்ளாகி மன்னார் பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

பிரஸ்தாப குடும்பஸ்தர் தனது வீடு நோக்கி மோட்டார் சைக்கிளில் பயணித்த போது, வீதி போக்குவரத்துப்பிரிவு பொலிஸார் குடும்பஸ்தரை நிறுத்தியுள்ளனர்.

அவர் மோட்டார் சைக்கிளை நிறுத்தாது பயணித்த போது பொலிஸார் அவரை துரத்திச் சென்றுள்ளனர்.

இதன் போது குடும்பஸ்தர் பயணித்த மோட்டார் சைக்கிள் வீதிக்கரையில் காணப்பட்ட மின் கம்பத்துடன் மோதியுள்ளது. இதனாலேயே விபத்து ஏற்பட்டுள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

உடனடியாக குறித்த குடும்பஸ்தர் மன்னார் பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகளை மன்னார் வீதி போக்குவரத்துப்பிரிவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (2)




# இந்தியாவிலிருந்து 777 குடும்பங்கள் வவுனியாவில் மீள்குடியேற்றம்

## தேவைகள் தொடர்பில் கவனம் செலுத்துமாறு லிங்கநாதன் கோரிக்கை

(கிளிநொச்சி)

இந்தியாவில் இருந்து 777 குடும்பங்கள் இதுவரை வவுனியாவிற்கு திரும்பியுள்ள நிலையில் அவர்களது தேவைகள் குறித்து கவனம் செலுத்துமாறு வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன் கோரிக்கை விடுத்துள்ளார்.

நேற்று முன்தினம் இடம் பெற்ற மக்கள் சந்திப்பு ஒன்றின் பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தியாவிற்கு அகதிகளாக சென்றவர்கள் மீள திரும்பும்போது அவர்களுக்கான வசதி வாய்ப்புக்கள் எவ்வாறு, என்ன விதத்தில் செய்து கொடுக்கப்படுகின்றது என கடந்த முறை நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் கேள்வி எழுப்பியிருந்தேன்.

இதன்போது இதுவரை இந்தியாவில் இருந்து வவுனியாவிற்கு 777 குடும்பங்கள் வந்திருப்பதாகவும் அவர்களில் 200 பேருக்கு இந்திய வீட்டு திட்டம் அமைத்து கொடுத்திருப்பதாகவும், இந்தியாவில் இருந்து வருகைதந்து காணியற்று இருப்பவர்களுக்காக செட்டிகுளம் பகுதியில் காணி வழங்குவதற்கான திட்டம் ஒன்று இருக்கிறது. வன திணைக்களம் அந்தகாணிகளை வழங்கினால் அதனை மக்களுக்கு வழங்கமுடியும் என மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் தெரிவித்திருந்தார்.

இதனடிப்படையில், இது தொடர்பில் ஆராய்ந்து அந்த மக்களுக்கான வசதி வாய்ப்புக்களை செய்து கொடுக்க ஒவ்வொரு பிரதேச செயலக பிரிவிலும் ஒரு குழு நியமிக்கப்பட்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஒருங்கிணைப்புக் குழு இணைத்தலைவர்களால் கோரப்பட்டுள்ளது.

எனவே, பாதிக்கப்பட்ட நிலையில் அகதிகளாக இடம் பெயர்ந்து இந்தியாவில் இருந்து மீண்டும் தாயகம் திரும்பியுள்ள இந்த மக்கள் தொடர்பான நடவடிக்கைகளை துரிதப்படுத்த அரச அதிகாரிகள் முன்வரவேண்டும் எனவும் தெரிவித்துள்ளார். (2-250)

## 175 மில்லியன் ரூபா செலவில்

# கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் ஊடாக பல்வேறு வேலைத்திட்டங்கள்

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தின் கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் ஊடாக பல்வேறு வேலைத்திட்டங்கள் 175.50 மில்லியன் ரூபா செலவில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதற்கமைவாக இவ்வாண்டு சிறிய நீர்ப்பாசனக்குளங்கள் புனரமைத்தல், வாய்க்கால்கள் புனரமைத்தல், விவசாயக்கிணறுகள் அமைத்தல், நெல் உலரவிடும் தளங்கள் புனரமைத்தல் போன்ற பல்வேறு வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதாவது, கமத்தொழில் அமைச்சு, கமநல அபிவிருத்தி திணைக்களம், மீள்குடியேற்ற அமைச்சு, தேசிய ஒருமைப்பாட்டிற்கும் நல்லிணக்கத்திற்குமான அமைச்சு, உலக உணவுத்திட்டம், உலக உணவு ஸ்தாபனம் ஆகியவற்றின் நிதியொதுக்கீடுகளில் குறித்த வேலைகள் சுமார் 175.50 மில்லியன் ரூபா செலவில் முன்னெடுக்கப்பட்டு வருவ்தாக நீர்ப்பாசனத்திணைக்களத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-315)

# சட்டவிரோத கசிப்பு உற்பத்தி விற்பனை

(கண்டாவளை)

கிளிநொச்சி குமாரசுவாமிபுரம் பகுதியில் பாடசாலை மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் சட்டவிரோத கசிப்பு உற்பத்தி விற்பனைகள் அதிகரித்துக் காணப்படுவதனால் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொள்வதாக இப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

குமார சுவாமிபுரம் கிராமத்தில் பாடசாலையை அண்மித்த பகுதியிலும் பாடசாலை அருகில் குடியிருப்புக்கள் அற்றுக்காணப்படும் காணிகளிலும் சட்டவிரோத கசிப்பு விற்பனை அதிகரித்துக் காணப்படுவதாகவும் இதனால் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம்கொடுத்து வருவதாகவும் மாணவர்களின் பெற்றோர்கள் கவலை தெரிவித்துள்ளனர். (2-315)





மு/அம்பலவன்பொக்கணை மகா வித்தியாலயத்தின் இவ்வருட பரிசளிப்பு விழா அண்மையில் பாடசாலை அதிபர் சி.ஏ.காம்பரம் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்ற போது...

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...

# விஷமே மருந்தாக

கூர்ப்பு ரீதியாக தொன்று தொட்டு இன்றுவரை மனிதர்கள், பாம்புகள் மற்றும் ஏனைய விஷ ஜந்துக்களை அச்சத்துடனேயே பார்த்து வருகின்றனர். "பாம்பை கண்டால் படையும் நடுங்கும் என்பார்கள்", இந்த பழமொழி நிஜ வாழ்க்கையில் உண்மையான ஒன்றாகவே காணப்படுகின்றது . "அளவிற்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சே". ஆனால் விஞ்ஞானம் இதற்கு எதிர்மாறான ஒரு விடயத்தை கூறுகின்றது. சமீபத்தைய ஆராய்ச்சிகளின் படி கொடிய விஷ ஜந்துக்களின் விஷங்கள் கூட உயிர் காக்கும் மருந்தாக பயன்படுத்த கூடியவை என நிரூபணமாகியுள்ளது.

விஷங்களில் பல வகைகள் உள்ளன. பொதுவாக உற்று நோக்கின் விஷ ஜந்துக்கள் தமது பாதுகாப்பிற்காகவும் உணவை வேட்டையாடுவதற்காகவுமே தம்முடைய விஷங்களை பயன்படுத்துகின்றன. ஆனால் அவை ஒவ்வொன்றினதும் நோக்கம் ஒன்றாகவே உள்ளது, "கொல்



லுதல் அல்லது செயலிழக்க செய்தல்".

விஷத்தை உற்பத்தி செய்ய 100,000 க்கும் அதிகமான விலங்குகள் கூர்ப்படைந்துள்ளன. பாம்புகள், தேள்கள், சிலந்திகள், சில பல்லிகள்,தேனீக்கள், ஒக்டோபஸ்கள் (Octopus), பல இன மீன்கள் மற்றும் கூம்பு நத்தைகள் (Cone snails) போன்ற கடல் உயிரினங்களை மேற்கோள் காட்டமுடியும் . இந்த அனைத்து உயிரினங்களிலும், அவற்றின் விஷம் மற்றும் அதன் கூறுகள் சுயாதீனமாகவே உருவாகியுள்ளன. எனினும் எல்லா விஷமும் உயிர்கொல்லியாக இருப்பதில்லை என்பதையும் நாம் விளங்கி கொள்ளவேண்டும். ஏனெனில் தேனீக்களை நாம் உதாரணமாக எடுத்து நோக்கின் அவை தமது உடலில் சுரக்கும் விஷத்தினை, தற்பாதுகாப்புக்காகவே பயன்படுத்துகின்றனவே ஒழிய கொல்வதற்காக இல்லை.

### வலி நிவாரணி *

1990 களில் முதன்முறையாக வலி நிவாரணிகளாக அறிமுகம் செய்யப்பட்ட மருந்துகளில் பெரும்



பான்மையானவை ஓபியத்தை அடிப்படை மூலக்கூறாக கொண்டிருந்தன. இந்த ஓபியம் (Opium) ஆனது ஓபியம் வகை தாவரங்களில்(*Opium poppies*) இருந்து பெறப்படுகின்றது .


*Opium poppies*

ஹெரோயின் போன்ற போதை வஸ்துக்களிலும் இவைகளே முக்கிய கூறுகளாக உள்ளன. வலி நிவாரணிகளாக பாவிக்கப்பட்ட இந்த மருந்துகள் , காலப்போக்கில் போதை மருந்தாக அதிகம் பயன்படுத்தப்பட்டு பல உயிரிழப்புக்களுக்கும் காரணமாக போனது யாவரும் அறிந்த உண்மையாகும் .

Morphine போன்ற Opioid வலி நிவாரணிகளை பாவித்தவர்கள் அடிமையாவதினாலே , வலி நிவாரணிகளின் சட்ட விரோத பாவனை அதிகமாக உள்ளது. போதை மருந்து அடிமைத்தனத்தில் இருந்து வெளியே வருவதும் கடினமான ஒன்றாகவே உள்ளது. இக்காரணிகளே மாற்றுவகை வலி நிவாரணிகளுக்கான ஆராய்ச்சிகளை துரித கதியில் இடம்பெற செய்ய காரணிகளை இருந்தன. அந்த வழியில் விலங்குகளில் இருந்து பெறப்படும் விஷங்களை வலி நிவாரணியாக பயன்படுத்த முடியும் என்ற கண்டுபிடிப்பும் ஒன்றாகும்.

### <u>வலி</u>

வலி என்பது உடலில் ஏற்பட்டுள்ள சேதத்தை / காயத்தை எமக்கு அறியத்தரும் சமிக்ஞை ஆகும். கலங்கள் உடலில் காணப்படுகின்ற சோடியம் நுண் துளைகளின் (Sodium channel) ஊடாக சிறிய அளவில் சோடியம் அயனை ($Na^+$) கசிய விடுவதன் மூலம் சமிக்ஞையை தோற்றுவிக்கின்றன. வலிகளை உணர்வதற்கென உள்ள சோடியம் நுண் துளைகள், "voltage-gated sodium channel 1.7 (Nav 1.7)" என அழைக்கப்படுகின்றன . வலி உணர்ச்சிக்கும்




நரம்பு கணத்தாக்கத் திற்கும் இவை முக்கிய பங்காற்றுகின்றன. சிலருக்கு இவை மரபணு ரீதியான மாற்றங்களால் உடலில் உருவாகாமல் இருக்கும் சந்தர்ப்பங்களும் உண்டு. அவ்வாறானவர்களுக்கு வலியை தாங்க அல்லது உணராமல் இருக் கக்கூடிய இயல்பு காணப்படுகி ன்றது . விஞ்ஞானிகளின் கருத் துப்படி இவ்வகை சோடியம் நுண் துளைகளை தொழிற்பாடு ரீதியாக நாம் தடை செய்யும் பொழுது, சாதாரண மனிதனாலும் வலியை குறிப்பிட்ட நேரத்துக்கு உணராமல் இருக்க முடியும். விலங்குகளின் உடலில் இருந்து பெறப்படும் விஷம் இந்த செயறபாட்டையே ஒரு வலி நிவாரணியாக மேற்கொள்கின்றது.

பெரும்பாலான வலி நிவாரணிகள் மூளையில் தமது தாக்கத்தினை செலுத்துவதன் காரணமாகவே அவற்றை பயன் படுத்துபவர்கள் அதற்கு அடிமையாகி , நாளடைவில் போதை மருந்தாக அதனை பயன்படுத்தும் நிலைக்கு உந்தப்படுகின்றார்கள் . இந்த புதிய கண்டுபிடிப்புகளோ வலிகளை உணரும் / கடத்தும் சோடியம் துளைகளை முடக்குவதனால் தமது குறிக்கோளை நிறைவேற்றிக்கொள்கின்றன. எனவே மூளைக்கு சமிக்ஞை செல்லாதவிடத்து, பாரிய விளைவு கள் ஏற்படுவது தடுக்கப்படுகின்றது. அதாவது போதைப்பொருள் அடிமைத்தனம் என்பதற்கு துளியும் இடம் இல்லாமல் போகின்றது.

எல்லா வகை விஷங்களை





யும் மருந்தாக பயன்படுத்த முடியாது என்பதும் இன்னொரு சாராம் சமாகும். நரம்புத் தொகுதியினை குறிப்பாக தாக்கக்கூடிய விஷங்களை உற்பத்தி செய்யும் விலங்குகளே பெரிதும் விரும்பப்படுகின்றன. குருதிச்சுற்றோட்டத்தினை தாக்கி பாதிப்பை ஏற்படுத்தும் விஷங்களுள்ள பாம்புகள் மற்றும் ஏனைய சில ஊர்வன , இவ்வகை ஆராய்ச்சிக்கு உகந்தவை அல்ல என கூறப்படுகின்றது. இந்தத் தேடலின் விளைவாக முதன்முதலில் கண்டுபிடிக்கப்பட்ட உயிரினம், "Peruvian green velvet tarantula"ஆகும். இதன் விஷமானது , "Nav 1.7" இனை கட்டுப்படுத்த வல்லதாகும். இத்தேடலின் விளைவாக மனிதனில் வலி நிவாரணியாக பயன்படுத்த வல்ல கூறுகளை கொண்ட விஷங்கள் உள்ள விலங்குகள் பல கண்டுபிடிக்கப்பட்டன. தேள்,, பூரான் போன்ற கொடிய ஜந்துக்களில் கூட பயன்தரு நிவாரணி ஒளிந்து மறைந்து இருந்தது என்பது வியத்தகு உண்மையே.

Peruvian green velvet terantulaCone snail

இந்த கண்டுபிடிப்புகளின் வரிசையில் சமீபமாக கண்டுபிக்கப்பட்டுள்ளது , Cone snails என்படும் கூம்பு நத்தைகளின் உடலில் இருந்து எடுக்கப்படும் விஷம் ஆகும். இதனை புற்றுநோய் சிகிச்சையின் விளைவாக அல்லது புற்று நோயினால் ஏற்படுகின்ற கடுமையான வலியினை மறைக்க பயன்படுத்த முடியும். இதனை ஒரு வலி நிவாரண மருந்தாக பாரிய அளவில் Neurex and Elan மருந்து நிறுவனங்கள் Prialt or ziconotide என்ற பெயரில் அறிமுகம் செய்துள்ளன.

போதை மருந்துகளும் அவற்றின் சட்டவிரோத பாவனைகளும் பெருகியுள்ள இக்கால கட்டத்தில் இவ்வாறான வலி நிவாரணிகளின் தேவையும் அவசியமும் அதிகமாகவே உள்ளன. இவ்வாறான விஷங்களை பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படும் வலி நிவாரணிகள் தேவையற்ற உயிரிழப்புக்களை தடுப்பதோடு .போதைப் பொருளற்ற சமூகத்தை கட்டியெழுப்பவும் வழி வகுக்கும் என்பதே எனது கருத்தாகும்.

ம.ஜோன் பிரியந்
உதவி விரிவுரையாளர்,
விலங்கியல்துறை.
யாழ். பல்கலைக்கழகம்.

**புதிர் 208 க்கான 500/- பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

கே.இராஜகோபால்
அடைக்கலம் தோட்டம்,
கந்தசுவாமி கோவிலடி,
வட்டுக்கோட்டை.

**புதிர் 208க்கான கேள்வியும் விடையும்:**

பின்வருவனவற்றில் பச்சை வீட்டு வாயு அல்லாதது?

1. மெத்தேன் 2. நைட்ரஸ்ஒக்சைட் 3. காபன் டை ஒக்சைட் 4. ஐதரசன்

ஐதரசன்

## வாரத்திற்கு ஒரு புதிர்! 209

புலிமுகச் சிலந்தியில் எத்தனை கண்கள் உள்ளன?

Dr. வி.சா.துளசிதா
விலங்கியல்துறை,
விஞ்ஞானபீடம்,
யாழ். பல்கலைக்கழகம்.

**புதிர் 209இற்கான விடைகளை 09.07.2018 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி:**

சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு
ரூபா 500/- பணப்பரிசு வழங்கப்படும்.

இப் பணப்பரிசினை யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் பிரிவு A ஆசிரியரிடம் நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.

**யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் புதிர் இல. 209**

சரியான விடை:-......................................
முழுப்பெயர்:-......................................
முகவரி:-......................................
தொ.பே. இல:......................................
கையொப்பம்:......................................

# "காவல் துறையா கஞ்சா துறையா"

# பாடசாலை மாணவி படுகொலையைக் கண்டித்து பல்கலை. மாணவர்கள் கவனயீர்ப்புப் போராட்டம்



படங்கள்:-பொ.சோபிகா

சுழிபுரம் பாடசாலை மாணவி றெஜினாவின் படுகொலையைக் கண்டித்தும் பொலிஸாரின் அசண்டையீனமான செயற்பாடுகளைக் கண்டித்தும் யாழ்.பல்கலைக் கழக மாணவர்களால் நேற்றுப் பாரிய கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக் கப்பட்டது.

யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட இந்தப் போராட்டம் பல்கலைக்கழக முன்றலில் ஆரம்பிக்கப்பட்டு பேரணியாக பரமேஸ்வராச் சந்தியைச் சென்றடைந்தது.

அதில் ஒன்றுகூடிய மாணவர்கள் வீதியின் இருமருங்கிலும் நின்று கவனயீர்ப்பை முன்னெடுத்தனர்.

'காவல்துறையே நித்திரையா', 'வளரும் பயிரை முளையிலேயே கிள்ளாதே', 'காவல் துறையா கஞ்சா துறையா' போன்ற பல்வேறு சுலோகங்களை ஏந்தியவாறு கோசங்களை எழுப்பி ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்திருந்தனர். (இ-9)

# சிறுமியின் கொலையில் சம்பந்தப்பட்ட கொலையாளிகள் தண்டிக்கப்பட வேண்டும்

## கல்வியமைச்சர் சர்வேஸ்வரன் வலியுறுத்து



(யாழ்ப்பாணம்)

வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை, இளைஞர் விவகார அமைச்சர் கலாநிதி கந்தையா சர்வேஸ்வரன், பாடசாலை மாணவி சிவனேஸ்வரன் றெஜினாவின் படுகொலை தொடர்பாக வெளியிட்ட பத்திரிகை செய்திக் குறிப்பில் பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

சுழிபுரம் காட்டுப்புலம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் தரம் ஒன்றில் கல்வி கற்றுக் கொண்டிருந்த மாணவி சிவனேஸ்வரன் றெஜினா பாடசாலையில் இருந்து வீட்டுக்கு வந்த தன் பின்னர், ஏமாற்றி அழைத்துச் செல்லப்பட்டு, படுகொலை செய்யப்பட்டார்.

ஆறு வயதுச் சிறுமிக்கு நேர்ந்த இக்கதியானது மிகுந்த அதிர்ச்சியையும், கவலையையும் ஏற்படுத்தியுள்ளது.

இந்த மிலேச்சத்தனமான படுகொலை தொடர்பில் பொலிஸார் விரைந்து செயற்பாட்டுக் கொலையாளிகளையும் சூத்திரதாரிகளையும் கைது செய்திருப்பதன் மூலம் தமது கடமையைச் சரிவரச் செய்து கொண்டிருப்பதை அறியமுடிகின்றது.

இத்தகைய துன்பகரமான சம்பவங்கள், எதிர்காலத்தில் நிகழாது இருக்க, சிறுபிள்ளைகள் தொடர்பான பெற்றோர்களின் விழிப்புணர்வு அவசியமானதாகும்.

எனினும் எதிர்காலத்தில் சிறுவர்களுக்கு இத்தகைய ஆபத்துக்கள் ஏற்படுவதைக் குறைக்கக் கூடிய வகையில் வடமாகாணக் கல்வி அமைச்சு தனது வரையறைகளுக்குள் நடவடிக்கைகள் மேற்கொள்வதற்குத் தீர்மானித்துள்ளது என்ற வகையில் வடக்கு மாகாணத்தின் பாடசாலைகளில் ஆரம்ப வகுப்புகளில் கல்வி கற்கும் மாணவர்களை பாடசாலை முடிந்ததும் பெற்றோர்களோ அல்லது பெற்றோர்களினால் பெயர் குறிப்பிடப்பட்டு நியமிக்கப்பட்டவர்களோ மட்டுமே வந்து அழைத்துச் செல்ல வேண்டும் என்ற நடைமுறையைச் செயற்படுத்தத் தீர்மானித்துள்ளோம்.

இது எதிர்காலத்தில் பிள்ளைகளின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான ஒரு நடைமுறையாகவும் இருக்கும்.

இவ்வேளையில் இச் சிறுமியின் படுகொலை தொடர்பில், பொலிஸ்துறையினர் நடுநிலையுடனும் நீதியாகவும் செயற்பட்டு அனைத்துக் குற்றவாளிகளையும் நீதிமன்றத்தில் நிறுத்தி உரிய தண்டனையைப் பெற்றுக் கொடுக்கும் கடமையைக் கூடிய விரைவில் நிறைவேற்ற வேண்டும் என வடமாகாணக் கல்வி அமைச்சு கேட்டுக் கொள்கின்றது.

எதிர்காலத்தில் இத்தகைய தவறுகள் நிகழாதிருக்க, பொலிஸாரினதும் நீதிமன்றத்தினதும் இக் குற்றவாளிகள் மீதான நடவடிக்கையானது இத்தகையவர்களுக்கு ஒரு பாடமாகவும் இருக்க வேண்டும். இந்துன்பகரமான சாவைத் தழுவிய சிறுமி சிவனேஸ்வரன் றெஜினாவின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன் மாணவியின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவிக்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# பாரதம்

## காஷ்மீரில் மனித உரிமைகள் மீறல்; ஐ.நா.அறிக்கை உள்நோக்கமுடையது

### இந்.இராணுவத் தளபதி ராவத் கண்டனம்

(டில்லி)

காஷ்மீரில் மனித உரிமை மீறப்படுவதாக, ஐ.நா. வெளியிட்டுள்ள அறிக்கை உள்நோக்கம் கொண்டதென, இந்திய இராணுவத் தளபதி பிபின் ராவத் கண்டனம் வெளியிட்டுள்ளார்.



டில்லியில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்ட இராணுவத் தளபதியிடம், ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதில் வழங்கும்போதே, அவர் மேற்படி தெரிவித்தார்.


ஐ.நாவின் அறிக்கை குறித்து இந்தியா கவலை கொள்ளத் தேவையில்லை என்றும், இந்திய இராணுவத்தின் செயற்பாடு குறித்து அனைவருக்கும் தெரியும் என்றும் கூறினார்.

அத்துடன் மனித உரிமைகள் எதனையும் இந்திய இராணுவம் மீறவில்லை என்றும், ஐ.நா சபை ஏதோ ஒரு உள்நோக்கத்துடன் அறிக்கையை வெளியிட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

காஷ்மீர் மற்றும் பாகிஸ்தானின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் மனித உரிமை மீறல்கள் இடம்பெறுவதாக, இம்மாதத் தொடக்கத்தில் ஐ.நா.சபை அறிக்கை வெளியிட்டிருந்தது.

இது தொடர்பில் ஊடகவியலாளர்கள் வினவிய கேள்விகளுக்கு பதில் வழங்கிய ராணுவத் தளபதி மேற்படி தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (7)

### கிளர்ச்சியாளர்களுடன் சமாதான ஒப்பந்தம்



(ஜுபா)

கிளர்ச்சியாளர்களுடனான சமாதான உடன்படிக்கையொன்றில் தென்சூடான் ஜனாதிபதி கையெழுத்திட்டுள்ளார்.

72 மணிநேரங்களில் போர்நிறுத்தத்தை ஆரம்பித்தல் உள்ளிட்ட சில கோரிக்கைகளும் குறித்த சமாதான உடன்படிக்கை நேற்று முன்தினம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

முன்னர் சமாதான உடன்படிக்கை முறிவடைந்த நிலையில், பல்லாயிரக்கணக்கான மக்களின் உயிரை காவு கொண்ட கொடூர யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவரும் வகையில் இந்த புதிய உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளது. (7)

## ஐரோ. ஒன்றிய... விலகும் தீர்... பிரிட்டன் கைவி...

### முன்னாள் பிரதமர் டோனிபிளே...

(லண்டன்)

பிரிட்டன் முன்னாள் ஜனாதிபதி டோனி பிளேர், ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து விலகும் முடிவை பிரிட்டன் ஒத்திவைக்கவேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து விலக பிரிட்டன் பாராளுமன்றம் எடுத்த முடிவு தொடர்பாக கடந்த 2016 ஆம் ஆண்டு நடைபெற்ற பொது வாக்கெடுப்பில் விலகும் தீர்மானத்தை ஆதரித்து அதிகம் பேர் வாக்களித்தனர். இதையடுத்து, வரும் 29-3-2019-க்குள் ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரிந்து செல்வதற்கான ஆயத்தப் பணிகளில் பிரிட்டன் பிரதமர் தெரசா மே மும்முரம் காட்டி வருகிறார்.

இந்நிலையில், ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து விலகும் முடிவுக்கு சட்ட வடிவம் கொடுக்கும் மசோதா மீது பிரிட்டன் பாராளுமன்றத்தில் பல மாதங்களாக விவாதம் நடைபெற்று வந்தது. மசோதாவை ஆதரித்தும், எதிர்த்தும் ஆளும்கட்சி, எதிர்க்கட்சி எம்.பிக்கள் காரசாரமாக உரையாற்றினர்.

இதனிடையே, 1972ஆம் ஆண்டில் ஐரோப்பிய ஒன்றியத்தில் பிரிட்டன் இணைவது தொடர்பாக உருவாக்கப்பட்ட சட்டத்திற்கு மாற்றாக ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து விலகும் சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேறியது.

இதற்கா... யிட்டார்

இந்நிலை... இருந்து வில... வேண்டும்... டோனி பிளே... மேலும் அ... அளவில் பா... விடுத்தார்.

உலகின்... மிகப் பெரி... தஸ்தை பிரி... தனது முக்... ப்பிய ஒன்றி... வின் நெரு... கூறிக் கொ...

## ஸ்டெர்லைட் விவகாரம்

### உயர் மட்டக்குழுவின் முடிவுக்கு காத்திருக்கும் மாவட்ட ஆட்சியர்

(தூத்துக்குடி)

ஸ்டெர்லைட் ஆலையை ஆய்வு செய்யும் உயர் மட்டக்குழு, ஆய்வு அறிக்கையை தமிழக அரசிடம் தாக்கல் செய்தவுடன் இரசாயனங்கள் அகற்றப்படுமென, தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் சந்தீப் நந்தூரி தெரிவித்துள்ளார்.

தூத்துக்குடியில் ஏற்பட்ட இரசாயன கசிவின் தற்போதைய நிலைமை தொடர்பில், நேற்று முன்தினம் புதன்கிழமை செய்தியாளர்கள் வினவியதற்கே அவர் மேற்படி தெரிவித்தார்.

தற்போது ஆலையில் உள்ள இரசாயனத்தால் எவ்வித பாதிப்பும் இல்லை என்றும், 2, 600 மெட்ரிக் தொன் இரசாயனம் அகற்றப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

மேலும் ஆலையில் உள்ள மேலதிக இரசாயனங்களை அகற்றுவதற்கு, தமிழக அரசிடமிருந்து அனுமதி கிடைக்கப்பெற வேண்டும் என்றும், ஆய்வுக்குழு அரசிடம் அறிக்கையை தாக்கல் செய்த பின்னர் அதன் அடிப்படையில் இரசாயனங்கள் அகற்றப்படும் என்றும் தெரிவித்தார்.

ஸ்டெர்லைட் ஆலையினால், தூத்துக்குடி மாவட்டமே நிலம், நீர், உயிர் என மொத்தமாக அழியும் நிலைக்கு தள்ளப்படுவதாக கூறி, அம்மாவட்ட மக்கள் தொடர் போராட்டங்களை நடத்தி வந்தனர்.

அதனை தொடர்ந்து இறுதியாக நடந்த போராட்டத்தில் பொதுமக்கள் மற்றும் பொலிஸாருக்குமிடையே ஏற்பட்ட மோதலில், பொலிஸ் தரப்பு முன்னெடுத்த துப்பாக்கி தாக்குதலில் சிக்கி 13 பேர் உயிரிழந்தனர். இந்நிலையில் குறித்த சம்பவம் பெரும் போராட்டத் திருப்புமுனையைத் தொடர்ந்து, ஸ்டெர்லைட் ஆலையை மூடுமாறு தமிழக அரசு உத்தரவிட்டது.




அதையடுத்து ஆலைக்கு சீல் வைக்கப்பட்டு சிறிது காலத்தில், ஆலையிலிருந்து இரசாயனக்கசிவு ஏற்படுவதாக கூறி மீண்டும் பிரச்சினைகளும் மக்கள் மத்தியில் அச்சமும் ஏற்பட்டது.

தொடர்ந்து கசிவுக்கு உள்ளான இரசாயனங்கள் உடனடியாக அகற்றப்பட்டதோடு, மேலதிக இரசாயனங்களை அகற்றுவது தொடர்பில் சிறப்பு குழு அமைக்கப்பட்டு ஆய்வுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. (7)

## காய்கறி சந்தையில் தீ விபத்து; 15 பேர் உடல் கருகி உயிரிழப்பு


கென்யா நாட்டில் காய்கறி சந்தையில் ஏற்பட்ட திடீர் தீ விபத்தில் 15 பேர் பரிதாபமாக உடல் கருகி உயிரிழந்துள்ளனர். 70 இற்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்துள்ளனர்.



கென்யா தலைநகர் நைரோபியில் உள்ள காய்கறி சந்தையில் நேற்று அதிகாலை திடீர் தீ விபத்து நிகழ்ந்தது. சந்தையில் பற்றி எரிந்த தீ, படிப்படியாக அக்கம்பக்கம் இருந்த கட்டடங்களுக்கும் பரவியது. இதில், 15 பேர் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர். 70 இற்கும் மேற்பட்டோர் பலத்த தீக்காயம் அடைந்தனர்.

தீ விபத்தினால் கட்டடங்கள் சிதைந்து பலவீனமாக இருப்பதால், தீயில் உயிரிழந்தவர்களின் சிலரது உடல்களை மீட்பதில் சிரமம் ஏற்பட்டுள்ளதாக தீயணைப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (7)

## சீனாவில் வெள்ளம்; 1500 பேர் பாதிப்பு



(பீஜிங்)

தென்மேற்கு சீனாவின் சிச்சுவான் மாகாணத்தில் பெய்த அடை மழையை தொடர்ந்து ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் நிர்க்கதியான சுமார் ஆயிரத்து 500 பேர் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த இரு தினங்களாக தொடர்ச்சியாக பெய்த அடை மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினால் குறித்த பகுதியின் உட்கட்டமைப்புகள் மற்றும் வீதிகள் பலத்த சேதமடைந்துள்ளன.

குறிப்பாக குவான்யுவான் நகரில் உள்ள ஜியாங்கே ஆறு பெருக்கெடுத்தமையால் இந்நிலைமை ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். இதேவேளை, வெள்ள அனர்த்தத்தில் ஒரு கிராமத்திற்கான பாதை முற்றாக சேதமடைந்ததில் 15 பாடசாலை மாணவர்களும், சில கிராமவாசிகளும் வெள்ள பாதிப்பிற்குள் சிக்கிக் கொண்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில், தீயணைப்பு வீரர்களின் தீவிர முயற்சிகளின் பயனாக குறித்த கிராமப் பகுதியிலிருந்து 20இற்கும் அதிகமானோர் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (7)

## நிர்மலாதேவியிடம் குரல் பரிசோதனை



(டில்லி)

மாணவிகளை தவறாக வழிநடத்த முயன்ற புகாரில் கைதுசெய்யப்பட்ட, அருப்புக்கோட்டை பல்கலைக்கழகத்தின் துணைவர் நிர்மலாதேவிக்கு குரல் மாதிரி சோதனை நடத்தப்பட்டுள்ளது.

குரல் மாதிரி பரிசோதனைக்காக நிர்மலாதேவி நேற்று முன்தினம் மதுரையிலிருந்து சென்னைக்கு அழைத்து வரப்பட்டார்.

இந்நிலையில், நேற்று அவரின் குரல் பரிசோதனை தடய அறிவியல் பிரிவில் துணை இயக்குநர் கேமலதா தலைமையில் முன்னெடுக்கப்பட்டது.

மாணவிகளுடன் நிர்மலாதேவி பேசியதாக கூறப்படும் பதிவிலிருந்து, சில வார்த்தைகளை மட்டும் ஒரு தாளில் எழுதி, அதை வாசிக்குமாறு கூறி ஒலிப்பதிவை மேற்கொண்டனர்.

நிர்மலாதேவி மாணவிகளுடன் பேசியதை முழுமையாக பேசிக்காட்டுமாறு கூறினால், அவர் குரல் மாற்றி பேசக்கூடும் என்பதால் சில பகுதியை மட்டும் எழுதிக் கொடுத்துள்ளனர்.

அவர் சரியாக பேசும் வரை குரல் பதிவு இடம்பெற்று, பின்னர், அது ஆய்வுக்கு உட்படுத்தப்படும்.

இரு குரல் பதிவுகளும் ஒத்துப் போகுமிடத்து இது வலுவான ஆதாரமாக அமையப்பெறும் என்பது குறிப்பிடத்தக்கது. (7)

ஈரா... பொ...

(வோஷி... ஈரானி... குமதியை... நிறுத்தவில்... ளாதார... மிரட்டல்... மத்திய... கடந்த 20... இங்கிலாந்து... ஜேர்மனி... லாற்று... ஒப்பந்தம்... ஈரான்... படுத்த... டும். அத... கப்பட்ட... திய நாடு... வேண்டும்... இந்நிலை... ஒப்பந்த... தாக சில... ஜனாதிபதி... மேலும். ஈர...

மைக...

(வோஷி... பிரபல... ஜாக்சனின்... முன்தினம்... பொப் இ... லும் பாராட்... க்க பொ... பாடல் ஆசி... வெள்ளம்... இவர் க... திகதி உயிரி... அவரது... லாஸ் வேக... வந்தார். இ... இசைக் குழ... சனை இ...

# வெளிநாடு

## ...ியத்திலிருந்து ...ர்மானத்தை ...விட வேண்டும்

### ...பிளேர் வலியுறுத்து

...தற்கான அறிவிப்பை சபாநாயகர் வெளி...ட்டார்

இந்நிலையில், ஐரோப் பிய ஒன்றியத்தில் ...ருந்து விலகும் முடிவை பிரிட்டன் ஒத்தி வைக்க ...வேண்டும் என பிரிட்டன் முன்னாள் பிரதமர் ...டோனி பிளேர் வேண்டுகோள் விடுத்துள்ளார். ...மேலும் அந்த முடிவு பிரிட்டனை பெரிய ...அளவில் பாதிக்கும் எனவும் அவர் எச்சரிக்கை ...விடுத்தார்.

உலகின் மிகப்பெரிய வணிகச் சந்தை மற்றும் ...மிகப் பெரிய அரசு ஒன்றியம் என்னும் அந்...தஸ்தை பிரிட்டன் இழந்துவிட்டது. அமெரிக்கா ...தனது முக்கிய நட்பை இழந்து விட்டது. ஐரோ...ப்பிய ஒன்றி யத்துக்கு வெளியில் அமெரிக்கா...வின் நெருங்கிய நட்பு நாடு நாம் தான் என்று ...கூறிக் கொள்ளலாம். ஆனால் அது உண்மை



யல்ல. ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து வெளி யேற முடிவெடுத்த பின்னர், அமெரிக்கா உடன் பிரிட்டன் நெருக்கமாக இருக்கிறதா?, உறவு பலமாக இருக்கிறதா? இவ்வாறு அவர் தெரிவித்தார். (7)

## பிரிக்கப்பட்ட குழந்தைகளை 30 நாட்களில் பெற்றோரிடம் ஒப்படைக்க வேண்டும்

### நீதிபதி உத்தரவு

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் அகதிகளிடமிருந்து பிரிக்கப்பட்ட குழந்தைகளை 30 நாட்களில் பெற்றோர்களிடம் ஒப்படைக்க வேண்டும் என நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அமெரிக்காவுக்குள் எல்லை வழியாக சட்ட விரோதமாக குடியேறுபவர்களை கட்டுப்படுத்தும் வகையில் அகதிகளின் குழந்தைகளை அவர்களிடம் இருந்து பிரித்து வைக்கும் வகையில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அண்மையில் உத்தரவிட்டார்.

குழந்தைகளுடன் அமெரிக்காவுக்குள் வருபவர்களை பிடித்தால் குடியுரிமை சட்டத்தை மீறியதாக குழந்தைகள் மீது குற்றவியல் வழக்குப் பதிவு செய்ய சட்டத்தில் இடமில்லை என்பதால் பெற்றோர்களிடம் இருந்து குழந்தைகளை பிரித்து எல்லையோரங்களில் உள்ள பிரத்தியேக காப்பகங்களில் வைக்கப்படுகின்ற சூழல் உருவாகியுள்ளது.

இந்த புதிய உத்தரவு அமுலுக்கு வந்த கடந்த ஏப்ரல் மாதம் 19 ஆம் திகதியில் இருந்து மே மாதம் தொடக்கம் வரை எல்லை வழியாக அத்துமீறி அமெரிக்காவுக்குள் நுழைந்ததாக 2 ஆயிரத்துக்கும் அதிகமான குடியேறிகள் எல்லை காவல் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.

அவர்களுடன் வந்த சுமார் 2,300 சிறுவர், சிறுமியர் தங்களது பெற்றோர் அல்லது பாதுகாவலர்களிடம் இருந்து பிரிக்கப்பட்டு காப்பகங்களில் வைக்கப்பட்டுள்ளனர். இது உலகம் முழுவதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. பலர் இதற்கு எதிர்ப்பு தெரிவித்தனர்.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணையகத் தலைவர் செயிட் ராட் அல் ஹுசைன் ட்ரம்ப்பின் நடவடிக்கையை கடுமையாக கண்டித்துள்ளார். இதை தொடர்ந்து, குழந்தைகளை அகதிகளிடம் இருந்து பிரிக்கும் உத்தரவை ட்ரம்ப் ரத்து செய்தார்.

இந்நிலையில், கடந்த ஆண்டு அமெரிக்காவிற்கு அகதியாக வந்த பெண்ணிடமிருந்து 6 வயது குழந்தை பிரிக்கப்பட்டு காப்பகத்தில் சேர்க்கப்பட்டது. பாதிக்கப்பட்ட தாய் ஒருவர் சார்பாக அமெரிக்கன் மக்கள் உரிமை யூனியன் சான்டியேகோ நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தது. அந்த வழக்கை விசாரித்த நீதிபதி டானா சப்ரா நேற்று முன்தினம் தீர்ப்பு வழங்கினார்.

அதில், அகதிகளிடமிருந்து பிரிக்கப்பட்ட குழந்தைகளை உடனடியாக பெற்றோரிடம் ஒப்படைக்க வேண்டும். 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளை 14 நாட்களில், 5 வயதிற்கு மேற்பட்ட குழந்தைகளை 30 நாட்களில் பெற்றோரிடம் ஒப்படைக்க வேண்டும் என உத்தரவிட்டார். (7)

## ...ஈரானிடம் எண்ணெய் இறக்குமதி செய்தால் ...பொருளாதாரத் தடைகள் விதிக்கப்படும்

### இந்தியாவுக்கு அமெரிக்கா மிரட்டல்

(வோஷிங்டன்)

ஈரானில் இருந்து கச்சா எண்ணெய் இறக்...குமதியை வரும் நவம்பர் மாதத்தில் இருந்து ...நிறுத்தவில்லை என்றால் இந்தியா மீது பொரு...ளாதார தடை விதிக்கப்படும் என அமெரிக்கா ...மிரட்டல் விடுத்துள்ளது.

மத்திய கிழக்கு நாடுகளில் ஒன்றான ஈரான் ...கடந்த 2015 ஆம் ஆண்டு அமெரிக்கா, ...இங்கிலாந்து, ரஷ்யா, பிரான்ஸ், சீனா மற்றும் ...ஜெர்மனி ஆகிய வல்லரசு நாடுகளுடன் வர...லாற்று சிறப்பு வாய்ந்த அணு ஆயுத தவிர்ப்பு ...ஒப்பந்தம் ஒன்றை செய்துகொண்டது.

ஈரான் அணு ஆயுத திட்டங்களை செயற்...படுத்துவதை முடிவுக்கு கொண்டுவர வேண்...டும். அதற்கு பதிலாக அந்த நாட்டின் மீது விதிக்...கப்பட்ட பொருளாதார தடைகளை மேற்கத்...திய நாடுகள் படிப்படியாக விலக்கிக்கொள்ள ...வேண்டும் என்பது இந்த ஒப்பந்தத்தின் சாராம்சம்.

இதற்கிடையே, ஈரானுடனான அணுசக்தி ...ஒப்பந்தத்தை விட்டு அமெரிக்கா வெளியேறுவ...தாக சில மாதங்களுக்கு முன் அமெரிக்க ...ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அறிவித்தார். ...மேலும், ஈரான் மீது பல்வேறு பொருளாதார தடைகளையும் அமெரிக்கா விதித்தது.

இந்நிலையில், ஈரானிடம் இருந்து கச்சா எண்ணெய் இறக்குமதி செய்யும் இந்தியா, சீனா உள்ளிட்ட அனைத்து நாடுகளும் வரும் நவம்பர் மாதம் 4 ஆம் திகதிக்குள் இறக்குமதியை முற்றிலுமாக நிறுத்திக்கொள்ள வேண்டும், இல்லையேல் பொருளாதார தடை விதிக்கப்படும் என அமெரிக்கா மிரட்டல் விடுத்துள்ளது.

இந்தியா மற்றும் சீனா நாடுகள், அதிகரிக்கும் எரிபொருள் தேவைகள் காரணமாக ஈரானிடம் இருந்து அதிகளவு எண்ணெய் இறக்குமதி செய்யும் நாடுகளாக உள்ளன. கடந்த 2017- 18 ஆம் ஆண்டுகளில் ஈரானிடம் இருந்து 180 இலட்சம் தொன் கச்சா எண்ணெய் இந்தியா இறக்குமதி செய்துள்ளது.

ஈரானுடனான அணு ஆயுத தவிர்ப்பு ஒப்பந்தத்தில் இருந்து வெளியேறிய அமெரிக்கா உலக நாடுகளிடம் இருந்து ஈரானை தனிமைப்படுத்தும் நோக்கில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக பெயர் குறிப்பிட விரும்பாத அமெரிக்க அதிகாரி ஒருவர் இந்த தகவலை தெரிவித்துள்ளார்.

அடுத்த வாரம் இந்தியா மற்றும் அமெரிக்கா இடையே நடைபெறவுள்ள வெளியுறவுத்துறை மற்றும் பாதுகாப்புத் துறை அமைச்சர்களுக்கு இடையிலான பேச்சுவார்த்தையின் போது ஈரான் விவகாரம் முக்கிய பங்கு வகிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. (7)

## ட்ரம்புடனான ஒப்பந்தத்தை மீறி வடகொரியா அணு ஆயுத உற்பத்தி

(சியோல்)

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்புடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தை மீறிய வகையில் வடகொரியா ரகசியமாக அணு ஆயுத உற்பத்திக்கு தயாராகி வருவதாக தெரிய வந்துள்ளது.

சிங்கப்பூரில் அண்மையில் அமெரிக்கா - வடகொரியா இடையில் கையொப்பமான அணு ஆயுத ஒழிப்பு ஒப்பந்தத்தை பெரும்பாலான உலக நாடுகள் வரவேற்றுள்ளன. ஐக்கிய நாடுகள் சபையும் மகிழ்ச்சி தெரிவித்தது.


வடகொரியா இந்த ஒப்பந்தத்தை ஒழுங்காக நிறைவேற்றினால் அந்நாட்டின் மீதான பொருளாதார தடைகள் படிப்படியாக விலக்கிக் கொள்ளப்படும் என ட்ரம்ப் அறிவித்தார்.


இதற்கிடையில், ட்ரம்புடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தை மீறிய வகையில் வடகொரியா ரகசியமாக அணு ஆயுத உற்பத்திக்கு தயாராகி வருவதாக தெரியவந்துள்ளது.

வடகொரியாவின் பியாங்யாங் பகுதியில் உள்ள யுரேனியம் செறிவூட்டும் நிலையத்தில் பணிகள் நடை பெற்று வருவதாக அண்மையில் எடுக்கப்பட்ட செயற்கைக்கோள் படங்கள் மூலம் தெரிய வந்துள்ளதாக தென்கொரியாவை சேர்ந்த இணையச் செய்தி நிறுவனம் தற்போது குறிப்பிட்டுள்ளது.

நாட்டின் தலைமையிடம் இருந்து திட்டவட்டமான உத்தரவு வரும்வரை அங்குள்ள அதிகாரிகள் வழக்கமான பணிகளில் ஈடுபட்டு வரக்கூடும் எனவும் அந்த செய்தி சுட்டிக்காட்டுகிறது. (7)

## இங்கிலாந்தில் காட்டுத்தீ! பொதுமக்கள் வெளியேற்றம்





(லண்டன்)

வடக்கு இங்கிலாந்தில் காட்டுத் தீ பரவி வருவதால் அப்பகுதியைச் சுற்றி வசிக்கும் ஏராளமான மக்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

இங்கிலாந்தின் மான்செஸ்டர் நகர் அருகே காட்டுத் தீ பரவி வருகிறது. கடும் வெப்பநிலை காரணமாக ஞாயிற்றுக்கிழமையன்று டவ்ஸ்டோன்ஸ் நீர்த்தேக்கம் அருகே தீப்பிடித்து, பின்னர் அருகில் உள்ள பகுதிகளுக்கு பரவியது. சுமார் 6 கிமீ தொலைவுக்கு தீ பரவியதால் அப்பகுதி முழுவதும் புகை மண்டலமாக காட்சியளிக்கிறது. 10 தீயணைப்பு வாகனங்களில் சென்றுள்ள 50 தீயணைப்பு வீரர்கள்சம்பவ இடத்தில்முகாமிட்டு தீயைக் கட்டுப்படுத்த போராடி வருகின்றனர்.

இது ஒருபுறமிருக்க, காட்டுத் தீயினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வசிக்கும் பொதுமக்களை அப்புறப்படுத்தும் பணியும் முழுவீச்சில் நடைபெற்று வருகிறது. 34 வீடுகளில் வசித்த மக்கள் அங்கிருந்து வெளியேற்றப்பட்டு பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

காட்டுத் தீயினால் உயிர்ச்சேதம் எதுவும் ஏற்படவில்லை. எனினும், கரும்புகை காரணமாக பாதிப்பு ஏற்படலாம் என்பதால் பொதுமக்கள் தங்கள் வீடுகளின் ஜன்னல் கதவுகளை மூடி வைக்கும்படி சுகாதாரத்துறை அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர். நேற்று அப்பகுதியில் உள்ள 2 பாடசாலைகளுக்கு விடுமுறை விடப்பட்டுள்ளது. (7)

## ...மைக்கல் ஜாக்சனின் தந்தை மரணம்

(வோஷிங்டன்)

பிரபல பொப் இசையின் மன்னர் மைக்கல் ...ஜாக்சனின் தந்தை, ஜோசப் ஜாக்சன் நேற்று ...முன்தினம் மரணமடைந்தார்.

பொப் இசையின் மன்னர் என அனைவரா...லும் பாராட்டப்பட்ட மைக்கல் ஜாக்சன் அமெரி...க்க பொப் இசைப் பாடகர், நடன இயக்குநர், ...பாடல் ஆசிரியர், தொழில் தலைவர் மற்றும் ...வள்ளல் எனப் பல முகங்கள் கொண்டவர். ...அவர் கடந்த 2009 ஆம் ஆண்டு ஜுன் 25 ஆம் ...திகதி உயிரிழந்தார்.

அவரது தந்தை ஜோசப் ஜாக்சன் (வயது-89) ...லாஸ் வேகாஸ் நகரில் தனிமையில் வசித்து ...வந்தார். இவரே ஜாக்சன் 5 பிரதர்ஸ் என்ற ...இசைக் குழுவை உருவாக்கி மைக்கல் ஜாக்...சனை இசை உலகிற்கு அறி முகப்படுத்தினார்.



அவர் கடந்த பல ஆண்டுகளாக புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருந்ததாக கூறப்படுகிறது.

இந்நிலையில், அவர்நேற்று முன்தினம் மாலை உடல் நலக்குறைவால் மரண மடைந்தார். இந்த தகவலை ஜாக்சன் குடும்பத்திற்கு நெருக்கமான ஒருவர் உறுதிசெய்துள்ளார். (7)

# சந்தியாவுக்கு உயிர் அச்சுறுத்தல் சர்வதேச மன்னிப்புச்சபை கவலை

(கொழும்பு)

சந்தியா எக்னெலி கொடவுக்கு உயிர் அச்சுறுத்தல் விடுப்பவர்களுக்கு எதிராக அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என சர்வதேச மன்னிப்புச்சபை வேண்டுகோள் விடுத்துள்ளது.

காணாமல்போன ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொடவின் மனைவியும் பலவந்தமாக காணாமல் போனவர்களிற்காக குரல் கொடுப்பவருமான சந்தியா சமூக ஊடகங்களில் உயிர் அச்சுறுத்தல்களையும் துன்புறுத்தல்களையும் மிரட்டல்களையும் எதிர் கொண்டுள்ளார் என சர்வதேச மன்னிப்புச்சபை தெரிவித்துள்ளது.

சந்தியா எக்னெலிகொட எதிர்கொண்டுள்ள அச்சுறுத்தல்கள் கடும்கவலையளிக்கின்றன என தெரிவித்துள்ள மன்னிப்புச்சபையின் தென்னாசியாவிற்கான பிரதி இயக்குநர் தினுசிகா திஸாநாயக்கவுக்கு ஆபத்தை ஏற்படுத்த முயல்பவர்களுக்கு எதிராக அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மனித உரிமை பாதுகாவலர்கள் தங்கள் முக்கியமான பணியை சுதந்திரமாகவும் அச்சமின்றியும் முன்னெடுப்பது அவசியம் என குறிப்பிட்டுள்ள அவர் மனித உரிமை பணியாளர்களை அச்சுறுத்துவதற்கும் துன்புறுத்துவதற்கும் எவருக்கும் உரிமையில்லை எனத் தெரிவித்தார்.

மனித உரிமைகள் மற்றும் நீதிக்காக அமைதியான வழிகளில் பிரசாரம் செய்யும் அனைவருக்கும் பாதுகாப்பான சூழலை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டிய கடமை இலங்கை அதிகாரிகளிற்கு உள்ளது எனவும் குறிப்பிட்டுள்ள தினுசிகா திஸாநாயக்க மனித உரிமை ஆர்வலர்கள் மீதான அச்சுறுத்தல் குறித்து விசாரணை செய்து நடவடிக்கை எடுக்க வேண்டியது இலங்கையின் கடமை எனவும் தெரிவித்தார்.



தங்களுக்குள்ள அதிகாரத்தை பயன்படுத்தி அதிகாரிகள் சந்தியாவை பாதுகாப்பதற்காக உரிய நடவடிக்கைகளை எடுக்காவிட்டால் அது அவரின் மனித உரிமையை மீறிய விடயமாக அமையும் எனவும் தினுசிகா திஸாநாயக்க தெரிவித்தார். (இ-7)

# கொழும்பு துறைமுக நகர நிலப்பரப்பை உருவாக்கும் பணி இறுதிக்கட்டத்தில்

(கொழும்பு)

கொழும்பு துறைமுக நகருக்கான நிலப்பகுதியை கடலிலிருந்து உருவாக்கும் நடவடிக்கைகள் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளதாக, துறைமுக நகரக் கட்டுமானப் பணியில் ஈடுபட்டுள்ள சீன நிறுவனம் தெரிவித்துள்ளது.

தற்போது முழு வீச்சில் நிலத்தை மீட்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

இந்தப் பணிகள் அடுத்த ஆண்டு நிறைவடையும் என்று சீன நிறுவன அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (இ-7)



# குதிரைகளுடன் இலங்கை வந்த பாகிஸ்தான் கூட்டுப்படைத் தளபதி



(கொழும்பு)

பாகிஸ்தானின் கூட்டுப்படைத் தலைமை அதிகாரிகள் குழுவின் தலைவரான ஜெனரல் சுபைர் மஹ்மூட் ஹயட், நான்கு நாட்கள் பயணமாக, நேற்று முன்தினம் கொழும்பு வந்தார்.

அவரை இலங்கையின் பாதுகாப்பு அதிகாரிகளின் பிரதானியான அட்மிரல் ரவீந்திர விஜேகுணவர்த்தன, இராணுவத்தளபதி லெப்.ஜெனரல் மகேஸ் சேனநாயக்க ஆகியோர் வரவேற்றனர்.

இவர் இலங்கையில் தங்கியிருக்கும் போது, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பாதுகாப்புச் செயலர், பாதுகாப்பு அதிகாரிகளின் பிரதானி, முப்படைகளின் தளபதிகளைச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தவுள்ளார்.

அத்துடன், பாதுகாப்பு ஒத்துழைப்புக்களை வலுப்படுத்துவது குறித்து, முக்கியமாக, பயிற்சி மற்றும் இராணுவ ஒத்திகைகள் தொடர்பாக ஜெனரல் சுபைர் மஹ்மூட் ஹயட், பேச்சுக்களை நடத்துவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சபுகஸ்கந்தையில் உள்ள பாதுகாப்புச் சேவை அதிகாரிகள் கல்லூரியில், விரிவுரை ஒன்றையும் அவர் நிகழ்த்தவுள்ளார். இதே வேளை விமானப் படைக்கு, ஆறு குதிரைகளையும் ஜெனரல் ஹயட், அதிகாரபூர்வமாக கையளிக்கவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# எனக்கும் கோத்தாவுக்குமிடையில் எவ்வித பிரச்சினையுமில்லை-பசில்



(கொழும்பு)

எனக்கும் எனது சகோதரர் கோத்தபாய ராஜபக்ஷவுக்குமிடையில் எந்த விதமான பிரச்சினையும் இல்லை. நாங்கள் இருவரும் புரிந்துணர்வுடன் செயற்பட்டு வருகின்றோம் என முன்னாள் அமைச்சர் பஷில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

எனக்கும் எனது சகோதரர் கோத்தபாய ராஜபக்ஷவுக்குமிடையில் நெருக்கடி நிலவி வருவதாக பிரசாரம் செய்துவருகின்றனர். ஆனால் எனக்கும் எனது சகோதரர் கோத்தபாய ராஜபக்ஷவுக்குமிடையில் எந்த விதமான பிரச்சினையும் இல்லை.

நாங்கள் இருவரும் புரிந்துணர்வுடன் செயற்பட்டு வருகின்றோம். எப்படியிருப்பினும் ஜனாதிபதி தேர்தல் வரும்போது யார் ஜனாதிபதி வேட்பாளர் என்பதை மகிந்த ராஜபக்ஷ தீர்மானிப்பார். மகிந்த ராஜபக்ஷவையே மக்கள் விரும்புகின்றனர்.



எனவே மகிந்த ராஜபக்ஷ, யாரை களமிறக்குகின்றாரோ அவர் வேட்பாளராக வருவார். அவரின் வெற்றிக்காக நாங்கள் அர்ப்பணிப்புடன் செயற்படுவோம். மாறாக, எனக்கும் சகோதரர் கோத்தபாயவுக்குமிடையில் எந்தப் பிரச்சினையும் இல்லை. நாங்கள் புரிந்துணர்வுடன் செயற்பட்டு வருகின்றோம். எமக்கிடையில் பிரச்சினையிருப்பதாக பொய்ப் பிரசாரம் செய்கின்றனர். நாங்கள் புரிந்துணர்வுடனும் ஒற்றுமையுடனும் செயற்பட்டு வருகின்றோம் என மேலும் தெரிவித்தார். (இ-7)

## இன்று ஒரு தகவல்

### நம் நேர்மை சந்தேகிக்கப்படும் போது...

என் வெளிநாட்டு நண்பர் ஒருவர் தன் தமிழக நண்பர் மூலம் ஒரு பிரபலமான மனிதருக்கு ஒரு மதிப்பு மிக்க பரிசை அளிக்கச் சொன்னார். இது நடந்து ஒரு வருடத்துக்குப் பிறகு மீண்டும் தமிழகம் வந்த அந்த வெளிநாட்டு நண்பர், தமிழக நண்பரிடம், "நான் கொடுத்த பொருளைச் சேர்த்தீர்களா இல்லையா?" என்று கேட்கப் போக, தமிழக நண்பருக்கு ஏகப்பட்ட வருத்தம்.

என்னிடம் அழாக் குறையாக "என்னைப் போய் சந்தேகப்பட்டுவிட்டார் அந்த நண்பர்" என்றார். அதிர்ச்சியுடன். "தவறு உங்கள் மீது இருக்கிறது" என்றேன். "என்னது" என்றார் அதிர்ச்சியுடன். ஆமாம்! அந்தப் பிரபல மனிதரிடம் இந்த வெளிநாட்டு நண்பரின் விலாசத்தைக் கொடுத்து இந்தப் பரிசு கிடைத்தது என்று நீங்கள் நான்கு வரி எழுதிப் போட்டால் பூரித்துப் போவார் என்று நீங்கள் சொல்லியிருக்க வேண்டும். பத்து தினங்கள் கழித்துக் கடிதம் எழுதிவிட்டீர்களா? என்று கேட்டிருக்க வேண்டும். நீங்கள் எழுதாவிட்டால் என் நேர்மை சந்தேகிக்கப்படும். அதற்காகவாவது எழுதுங்கள் என்று அந்தப் பிரபலத்திடம் சொல்லியிருக்க வேண்டும். இவர் கடிதம் எழுத சாத்தியமில்லை என நீங்கள் நினைத்தால், சேர்த்த கையோடு உங்கள் வெளிநாட்டு நண்பருக்கு அந்தப் பொருளைச் சேர்த்த விதம் அந்தப் பிரபலமானவர் மகிழ்ந்து சொன்ன வார்த்தைகள், பிரதிபலித்த விதம் ஆகியவற்றை விளக்கி எழுதியிருக்க வேண்டும். இந்த உலகில் நாணயமாக நடந்து கொண்டால் மட்டும் போதாது; அப்படி நடந்து கொண்டதற்கான முகாந்திரங்களையும் ஏற்படுத்த வேண்டியது அவசியம்" என்று என் பிரசங்கத்தை முடித்தேன்.

நம் நேர்மை சந்தேகிக்கப்படும் போது ஆர்ப்பாட்டம் எதுவும் செய்ய வேண்டுமென்பதில்லை. நடந்தது நடந்து விட்டது. இனி நம் நேர்மையை நிரூபிக்க என்னென்ன வழி வகைகள் இருக்கின்றன என்று சிந்திக்க வேண்டும்.

நிரூபிக்க வழிகிடைக்காத நிலையில் அதிகமாக மனமுடைந்து போனதாகக் காட்டிக் கொள்ளக் கூடாது. இது நாம் குற்றவாளி என்பது கண்டுபிடிக்கப்பட்டு விட்டதால் ஏற்பட்ட மனமுடைப்பு என்று மற்றவர்களால் புரிந்து கொள்ளப்படக் கூடும்.

உண்மைக்கும் நேர்மைக்கும் ஒரு வலிமை உண்டு. இந்த வலிமையை இதயத்தில் 100 சதவிகிதம் நிரப்பிக் கொள்ள வேண்டும்.

எமக்கெதிராக எத்தனை பேர் வேண்டுமானாலும் அணிவகுக்கட்டும்; நேர்மை ஒன்றின் துணை போதும் நமக்கு.

**லேனா தமிழ்வாணன்**

# 500 நாட்களாக உறவினர்கள் தவிப்பு

# காணாமல் ஆக்கப்பட்டோரை விடுவிக்கக்கோரி

# சர்வதேச நாடுகளில் நாளை ஆர்ப்பாட்டம்

(யாழ்ப்பாணம்)

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களால் கிளிநொச்சியில் முன்னெடுக்கப்பட்டு வரும் தொடர் போராட்டம் 500 ஆவது நாட்களை எட்டவுள்ள நிலையில், இவர்களுக்கு ஆதரவாக லண்டன், கனடா, சுவிஸ் ஆகிய நாடுகளில் போராட்டங்கள் நடைபெறவுள்ளன. இந்த போராட்டங்கள் நாளை 30 ஆம் திகதி முதல் முன்னெடுக்கப்படவுள்ளன.

இது தொடர்பில் போராட்டத்தை ஏற்பாடு செய்தவர்களால் விடுக்கப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, புலம்பெயர்ந்த அனைத்துத் தமிழ் உறவுகளையும் ஏனைய நண்பர்களையும் காணாமலாக்கப்பட்ட தமிழ்க்குடும்பங்களின் போராட்டத்துக்குத் தோள் கொடுக்கும் பேரணிக்கு அழைத்து நிற்கிறோம்.

இலங்கையின் வடக்கு-கிழக்கு பகுதிகளிலிருந்து போராடி வரும் குடும்பங்கள் நாளை 30ஆம் திகதி 500 நாட்களை பூர்த்தி செய்யவுள்ளனர். இத் தோழமைப் பேரணியானது தமிழ்க் கனேடிய செயல்வாதிகளை உள்ளடக்கிய சுயாதீனக் குழு ஒன்றினால் ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதுடன், இதன் நோக்கங்களாக, காணாமலாக்கப்பட்டோரின் குடும்பங்களின் அவலநிலை தொடர்பான விழிப்புணர்வை தமிழ் சமூகத்தினரிடமும் பரந்த கனேடிய சமூகத்தினரிடமும் ஏற்படுத்தல்.

கிளிநொச்சி மாவட்டத்திலும் மற்றும் வடக்கு- கிழக்கு கெங்கிலும் 500 ஆவது நாளைப் பூர்த்தி செய்ய விருக்கும் காணாமலாக்கப்பட்டோரின் குடும்பங்களுடன் தோள்கொடுத்து நிற்றல் மற்றும் காணாமலாக்கப்பட்டோரின் குடும்பங்களின் கோரிக்கைகளை நிறைவேற்றும்படி இலங்கை அரசாங்கத்தின் மீது அழுத்தத்தை அதிகரித்தல், குறிப்பாக, சரணடைந்தவர்களதும் தடுத்து வைக்கப்பட்டுள்ளோரினதும் பெயர்ப் பட்டியல் கடந்த காலத்தில் இருந்ததும் தற்போதுமுள்ள எல்லா இரகசிய முகாம்களினது பட்டியலையும் வெளியிட அழுத்தம் வழங்குதல்.

போர் நிறைவுற்று 9 வருடங்களின் பின்பு, காணாமற்போனோர் தொடர்பான எந்தவொரு நடவடிக்கையும் இலங்கை அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படாத சூழ்நிலையில் விரக்தியடைந்த காணாமலாக்கப்பட்டோரின் குடும்பங்கள் பெரும்பாலும் பெண்களைக் கொண்ட குழு ஒன்றுடன் கிளிநொச்சி பிரதான வீதி ஓரத்தில் இருந்து கொண்டு தொடர்ச்சியான வீதியோரப் போராட்டமொன்றை முன்னெடுக்கத் தொடங்கினர்.

இப்போராட்டம், இதேபோன்ற போராட்டங்களை முன்னெடுப்பதற்குரிய அதிர்வலைகளை வடக்கு-கிழக்கில் ஏற்படுத்தியதுடன், யாழ்ப்பாணம், வவுனியா, திருகோணமலை மற்றும் முல்லைத் தீவிலும் கவனயீர்ப்புப் போராட்டங்கள் ஆரம்பமாகின.

இப்போது இக்குடும்பங்களின் போராட்டங்கள் இரவு பகலாக பெரும் பருவமழைக் காலங்களிலும் எரிக்கும் வெயிலிலும் நுளம்புக்கடி மற்றும் தூசி அனைத்தையும் எதிர் கொண்டு வீதியோரத்தில் 500 நாட்களை எட்டவுள்ள போதும், இன்னும் இவர்கள் விடைகளின்றித் தவிப்பதுடன், இலங்கை அரசாங்கத்தால் உதாசீனம் செய்யப்படுவதுடன் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆரம்பத்தில் இக்குடும்பங்களுக்குக் கொடுத்த வாக்குறுதியையும் நிறைவேற்றத் தவறியுள்ளார்.

தமது அன்புக்குரியவர்களோடு மீண்டும் இணைவதை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டுள்ள இக்குடும்பங்கள் இலங்கை அரசிடம் இக்கோரிக்கைகளை முன்வைக்கிறார்கள்.


- இறுதிக்கட்டப் போரில் சரணடைந்தவர்களின் பெயர்ப்பட்டியலை வெளியிடல்
- 1978 முதல் பயங்கரவாதத் தடுப்புச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளோரின் பெயர்ப்பட்டியலை ஆண்டுரீதியாக வெளியிடல்
- பழைய மற்றும் புதிய இரகசியத்தடுப்பு முகாம்களை விசாரணை செய்து அவற்றின் பெயர்ப்பட்டியலை வெளியிடல்

காணாமலாக்கப்பட்ட தமிழ்க் குடும்பங்களின் போராட்டத்துக்குத் தோள் கொடுக்கும் பேரணி ஏற்பாட்டுக் குழு, நாளை மிகுந்த துணிவும் ஓர்மமும் மிக்க இக்குடும்பங்களின் கோரிக்கைகளுக்கு ஆதரவு கொடுக்கவும், இவர்களது குரல்கள் இப்போதாவது கேட்கப்படவும் தம்முடன் இப்பேரணியில் இணைந்து கொள்ளுமாறு புலம்பெயர்ந்து வாழும் தமிழ்க் கனேடியர்களையும் ஏனைய சமூகங்களையும் அழைத்து நிற்கிறது என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கனடாவில் நாளை 30 ஆம் திகதியும் அதனைத் தொடர்ந்து லண்டன் மற்றும் சுவிற்சர்லாந்து ஆகிய நாடுகளிலும் போராட்டங்கள் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-4)

## தமிழகத்தில் பாதுகாப்பு அச்சுறுத்தலுக்கு விடுதலைப்புலிகளை குறைகூற முடியாது

### இராதாகிருஷ்ணன் தெரிவிப்பு



(சென்னை)

தமிழகத்தின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளமைக்கு, விடுதலை புலிகளை குறை கூறமுடியாது என, மத்திய இணை அமைச்சர் பொன்.இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

தீவிரவாத ஊடுருவல் இல்லை என தமிழக முதலமைச்சர் எடப்பாடி கூறிய கருத்துக்கு பதிலளிக்கும் முகமாக, சென்னையில் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவித்த அவர், இராமேஸ்வரம் தங்கச்சி மடத்தில் வெடிகுண்டுகள் மீட்கப்பட்டுள்ளதையும் இராதா கிருஷ்ணன் சுட்டிக்காட்டியுள்ளார்.

தீவிரவாத ஊடுருவல் இல்லை என, முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி அண்மையில் சட்ட பேரவை கூட்டத் தொடரில் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் இதற்கு பதில் வழங்கிய இராதாகிருஷ்ணன், ஒவ்வொரு விடயத்திலும் விடுதலைப்புலிகளை சாட்டுக் கூறுவதை நிறுத்தி, தமிழகத்தை அமைதியான முறையில் மாற்ற வேண்டும் எனத் தெரிவித்தார். (இ-7)

## கீரிமலை நகுலேஸ்வர மகா வித்தியாலய நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கீரிமலை நகுலேஸ்வர மகா வித்தியாலய நிறுவுநர் நினைவு தினமும் பரிசளிப்பு விழாவும் நகுலன் சஞ்சிகை வெளியீடும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியளவில் பாடசாலை மண்டபத்தில் அதிபர் த.தயானந்தன் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ந.காண்டீபன், சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணம் கால்நடை உத்தியோகத்தர் பழைய மாணவி திருமதி சுதர்ஷா கிங்ஸ்ரன், ஆகியோர் கலந்து கொள்வர்.

நினைவுப்பேருரையினை யாழ்.சுன்னாகம் ஸ்கந்தவரோதய கல்லூரி ஆசிரியர் த.மோகன்ராஜ் ஆகியோர் கலந்து கொள்வர். (இ)

## கற்கைநெறிகளுக்கு விண்ணப்பிக்கலாம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை தொழிற் பயிற்சி அதிகாரசபையின் யாழ்ப்பாணம் மாவட்டத்திலுள்ள யாழ்ப்பாணம், காரைநகர், கைதடி, சுன்னாகம், பண்டத்தரிப்பு, பருத்தித்துறை தொழிற் பயிற்சி நிலையங்களில் நடத்தப்படும் தொழிற்பயிற்சி கற்கைநெறிகள் முற்றிலும் இலவசமாக 09.07. 2018 இல் ஆரம்பிக்கவுள்ளன. இக் கற்கை நெறிகள் அனைத்தும் தேசிய தொழில் தகைமை (NVQ) சான்றிதழுக்கான பயிற்சிகளாகும்.

இக்கற்கை நெறிகளை கற்க விரும்புபவர்கள் தங்கள் பதிவுகளை அலுவலக நேரத்தில் மாவட்ட அலுவலகம், 4ஆம் மாடி, வீரசிங்கம் மண்டபம், இல 12,கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் (021 222 7949) அல்லது அந்தந்த தொழிற்பயிற்சி நிலையங்களில் எதிர்வரும் 06.07.2018 ஆம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம் என யாழ். பிராந்திய உதவிக் கல்விப் பணிப்பாளர் [illegible] அறிவித்துள்ளார். (இ)

## இலங்கையில் விசித்திர உயிரினம்

(பதுளை)



பதுளை தெல்பத்தை தோட்டத்தில் வசிக்கும் தோட்டத் தொழிலாளி ஒருவரின் வீட்டுத்தோட்டத்தில் இருந்து விசித்திரமான உயிரினம் ஒன்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

குறித்த நபரின் வீட்டுத் தோட்டத்தில் கொக்கோ மரத்தின் இலையிலிருந்து இந்த விசித்திரமான உயிரினம் உருவாகியுள்ளது. கொக்கோ மரத்தின் இலையை போன்ற உயிரினம் ஒன்றே அடையாளம் காணப்பட்டுள்ளது.

தனது வீட்டுத் தோட்டத்தினை துப்புரவு செய்துகொண்டிருக்கும் போது கொக்கோ மரத்தின் இலையை ஒத்ததாக ஓர் உயிரினம் அசைவதை அவதானித்த நபர் இந்த உயிரினத்தை அடையாளம் கண்டுள்ளார்.

தற்போது குறித்த உயிரினத்தை மக்கள் ஆர்வத்துடன் பார்த்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## கொக்குவில் ஸ்ரீஇராமகிருஷ்ண வித்தியாலய பரிசுத்தினம் இன்று

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாசாலையின் பரிசுத்தினம் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் கந்தையா ஞாபகார்த்த மண்டபத்தில் முதல்வர் கு.திலீபன் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி.தெற்கு பிரதேச செயலக பிரதேச செயலர் பழைய மாணவன் சி.ஜெயகாந், சிறப்பு விருந்தினர்களாக நல்லூர் கோட்டக்கல்விப் பணிப்பாளர் பி.சே. அன்ரன், ஊர்காவற்றுறை ஆதார வைத்திய சாலை வைத்திய கலாநிதி தி.கணாதீபன், நவமங்கை நிவாசம், இசுறுபாய நிறுவுநர் ஆசிரியர் கல்வி ஓய்வு நிலை பணிப்பாளர் திருமதி. க.நவரத்தினம், கிறீன்கிராஸ் விருந்தினர் விடுதி ஜெகன் மருந்தக தொழிலதிபர் தி.ஜெகசீலன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ)

# அரசின் குறைபாடுகளை சுட்டிக்காட்டி குடும்ப ஆட்சிக்கு மகிந்த முயற்சி

## அமைச்சர் பொன்சேகா தெரிவிப்பு

(கொழும்பு)

தேசிய அரசாங்கத்தில் காணப்படும் சில திருத்திக் கொள்ளக்கூடிய குறைப்பாடுகளைச் சுட்டிக்காட்டி முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மீண்டும் குடும்ப ஆட்சியினை நிலைநாட்ட முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றார் என அமைச்சர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.



களனிப் பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

1949 ஆம் ஆண்டு காலப்பகுதி முதல் எமது நாட்டின் பொருளாதாரம் தொடர்ந்து பின்னடைவினையே எதிர்கொண்டு வருகின்றது. கடந்த அரசாங்கத்தின் முறையற்ற அரசியல் கொள்கையின் காரணமாக பாரிய கடன் சுமைகளை எதிர் கொள்ள வேண்டிய நிலை தோற்றம் பெற்றது. இதன் பிரதிபலனையே தற்போது தேசிய அரசாங்கம் அனுபவித்து வருகின்றது.

இந் நிலையில் தேசிய அரசாங்கத்தில் காணப்படும் சில திருத்திக் கொள்ளக்கூடிய குறைப்பாடுகளை சுட்டிக் காட்டி முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மீண்டும் குடும்ப ஆட்சியினை நிலைநாட்ட முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றார்.

அரசாங்கம் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை விரைவில் நிறைவேற்றியிருந்தால் நடந்து முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் மக்களின் ஆதரவு தேசிய அரசாங்கத்திற்கே கிடைக்கப் பெற்றிருக்கும். ஆனால் மக்கள் அரசாங்கத்திற்கு பாடம் புகட்டும் விதமாகவே வாக்குகளைப் பயன்படுத்தினர்.

எனவே தேசிய அரசாங்கத்தில் காணப்படுகின்ற அடிப்படைக் குறைப்பாடுகளை நிவர்த்தி செய்து கொண்டு 2020 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலுக்கு முகம் கொடுப்போம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# 16பேர் குழுவின் செயற்பாடுகளில் திருப்தியில்லை - ஜோன் விசனம்

(கொழும்பு)

அமைச்சுப் பதவிகளைத் துறந்து அரசாங்கத்தை விட்டு வெளியேறிய 16 பேர் அணியின் செயற்பாடுகளில் திருப்தியில்லை என்று முன்னாள் அமைச்சர் ஜோன் செனவிரட்ன விமர்சித்துள்ளார்.



இது தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள அவர், அரசாங்கத்தில் இருந்து வெளியேறிய 16பேர் அதிருப்திக் குழுவினர் தொடர்ச்சியாக கட்சித் தலைவர்களை மட்டுமே சந்தித்துக் கலந்துரையாடி வருகின்றனர்.

ஆனால் அது போதுமான அரசியல் செயற்பாடல்ல. எங்களது செயற்பாடுகளை அதற்கும் அப்பால் விஸ்தரிக்க வேண்டும்.

ஒன்றில் எங்களுக்கான தனியான அரசியல் பயணம் உருவாக்கப்பட வேண்டும். இல்லையேல் நாங்கள் ஒரு கட்சியில் இணைந்து அந்தக் கட்சியின் செயற்பாடுகளில் கலந்து கொள்ள வேண்டும்.

உண்மையைச் சொல்வதாக இருந்தால் கூட்டு எதிர்க்கட்சியுடன் நேரடியாக இணைந்து கொள்வதே எங்களில் பெரும்பாலானவர்களின் எதிர்பார்ப்பு.

அவர்களுடன் இணைந்து அரசியல் செயற்பாடுகளை மேற்கொள்வதே உசிதமானதாக இருக்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## மழலைகளின் விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வலயக்கல்வி அலுவலக வலயமட்ட முன்பள்ளி மழலைகளின் விளையாட்டு விழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி மைதானத்தில் வலயக்கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம் தலைமையில் இடம்பெறும். இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக கோப்பாய் பிரதேச செயலாளர் திருமதி சுபாஜினி மதியழகன், சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணம் ஆரம்ப பிள்ளைப்பருவ அபிவிருத்திப் பிரிவு ஓய்வு நிலை உதவிக் கல்விப்பணிப்பாளர் கே.விமலநாதன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ




கொமர்ஷல் வங்கியின் நெல்லியடி கிளையின் ஏற்பாட்டில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 80 மாணவர்களுக்கு பாராட்டு விழாவும் பரிசளிப்பு விழாவும் நெல்லியடி முருகன்கோவில் மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. (படங்கள்:- மகாலிங்கம்)

# பிறந்த எண்களின் அதிர்ஷ்ட இரகசியம்

விநாயகராமன்

26

எண் 2 (சந்திரன்)
(சமுதாயச் சிற்பிகள்)

திடீர் திடீரென்று மாற்றி முடிவெடுப்பார்கள். தன்னை ஏமாற்றியவர்களை வேரோடு அழித்து விடும் தீவிரவாத குணமுடையவர்கள். தம்மையும் அழித்துக் கொள்ளத் தயங்க மாட்டார்கள். எளிதில் காதல் வயப்படுவார்கள். தோல்வி கண்டால் உடனே தற்கொலை முயற்சிக்குச் சென்று விடுவார்கள்.

இவர்கள் தன்னம்பிக்கையும் தெய்வ பலத்தையும் நம்பிச் செயற்பட்டால், எப்பேர்ப்பட்ட பிரச்சினைக்கும் தீர்வு கண்டு, வெற்றியான வாழ்க்கை வாழ்வார்கள். இவர்களின் தொழில் நேர்மையாலும், பேச்சு நாணயத்தாலும் பலபேருடைய ஆதரவுகள் இவர்களுக்குக் கிடைக்கும். இவர்கள் சொல்லைக் கேட்க ஒரு மக்கள் கூட்டமேயிருக்கும். இளமையில் சாதாரணமாகத் தோன்றினாலும். வாலிப வயதிற்குப் பிறகு அரசனைப் போலவே வாழ்க்கை நடத்துவார்கள். இவர்களின் மனதில் ஆகர்ஷண சக்திகள் குடிகொள்ளும். சந்திரனின் மாயாசக்தி இவர்களிடம் உண்டு. தன்னை அறியாமலேயே பல உண்மைகள் வெளியிடுவார்கள்.

குருவானாலும் தெய்வமானாலும் முழுமையாக நினைத்து வெற்றி பெறுவார்கள். இவர்கள் உடல் முழுவதும் சக்தி நிறைந்து காணப்படும். மின்சாரம் போல தெய்வ சக்தி உடலில் பாயும். மென்மேலும் தெய்வ பலத்தை வளர்த்துக் கொண்டால் பெரிய மகான்களாகவும் தீர்க்கதரிசிகளாகவும் வலம் வருவார்கள். எப்போதும் சந்தோசமாகவே இருப்பார்கள். உயர்ந்த இலட்சியத்துடன் வாழ்வார்கள். பணம், பதவி, புகழ் குறையாவண்ணம் வாழ்வார்கள். மற்றவர்களின் மனதைப் புரிந்துகொண்டு அதற்கேற்ற வண்ணம் பேசுவார்கள். வித்தியாசமான அணுகுமுறையில் தொழில்கள் செய்து வெற்றி பெறுவார்கள். பெரும் பணம் திரட்டுவார்கள். சட்டம், வேதம், இதிகாசம், ஆராய்ச்சிகளில் மனம் ஈடுபடும். கலைகளின் வேந்தன் என்று பெயரெடுப்பார்கள். தன்னைச் சார்ந்த சமுதாயம், நபர்களுக்குத் தானே பேசி வெற்றிக்கொடி நாட்டுவார்கள். உடலில் காதல் கலந்த உணர்வு கொண்டிருக்கும். ஒரு நிலைப்பட்ட மனதுடன் ஈடுபடும் அனைத்துக் காரியங்களும் வெற்றி பெறும். உடலில் ஒருவித காந்த சக்தியிருக்கும். வாக்கு சித்தியுண்டாகும். அந்த சக்தி படைத்தவர்கள்.

கனவில் தோன்றும் காட்சிகளில் சில உலகில் நடக்கும். புரட்சிகளை ஏற்படுத்தி மக்களைத் தூண்டும் தலைவர்களாகவும் இருப்பார்கள். அமோக வரவேற்பிலும் ஆரவாரத்திலும் மக்கள் கூட்டம் கூட்டி பாராட்டிக் கொடுக்கும் பரிசுகளிலும் சிறு விருப்பமும் இருக்காது. மிகச் சுலபமாகப் பூரணமான இறையருளைப் பெற்றிடுவார்கள். தெய்வத்தின் நேரடியான அருட் காட்சிகளைக் கண்டு வியப்படைவார்கள். நீர் சம்பந்தப்பட்ட தொழிலில் சிறப்படைவார்கள். கற்றுக் கொள்வார்கள். மந்திரத்தைச் சித்தியடையச் செய்வார்கள். ஆகர்ஷண வித்தைகள் தெரிந்துவைத்திருப்பார்கள். ஞான மார்க்கம் அறிந்தவர்கள். பிறர் குணமறிந்து நடப்பார்கள். மனதில் தோன்றும் திவ்ய திருஷ்டி எண்ணங்களால் கோபமடைவார்கள்.



இவர்களின் இரத்தம், மூளை, உயிர்ச் சக்தி அனைத்திலும் சந்திரனின் ஆதிக்க சக்தி குடிகொள்ளும். தீவிரமான ஆராய்சிகளில் ஈடுபடுவார்கள். ஓய்வு உறக்கமற்ற உழைப்புகள் இருக்கும். எதிலும் எச்சரிகையுடன் செயற்படும் இவர்கள் பேச்சை அளந்தே பேசுவார்கள். எக்காரியத்தையும் முடிக்காமல் அதை விட்டு நகர மாட்டார்கள். யாரையும் நம்ப மாட்டார்கள். நம்பிவிட்டால் அந்த நம்பிக்கையை கடைசி வரை எந்த சக்தியாலும் மாற்ற முடியாது. உயிரோடு கலந்த உறவாகவே அந்த நம்பிக்கை மாறும். பகலிலும் கனவு காண்பார்கள். கனவு நனவாக மாற உழைப்பார்கள். குடும்ப வாழ்க்கையில் சண்டை சச்சரவுகள் வந்து வந்து போகும். நிம்மதியற்ற சூழ்நிலையை உருவாக்குவார்கள்.

குடும்ப அமைதியின்மைக்கு இவர்கள் காரணமாவார்கள். தன்னுடைய எதிர்காலத்தைப் பற்றியே எந்த நேரமும் சிந்தித்துக் கொண்டு இருப்பார்கள். வருந்திக் கொண்டிருப்பார்கள். பிடிவாத மனப்போக்கு உண்டு. இவர்கள் தைரியசாலிகள் போல நடிப்பார்கள். இயற்கையில் தைரியம் மிகவும் குறைவாகும். இயற்கைக் காட்சிகளைக் கண்டு களிப்பதில் மனம் ஒன்றிப் போவார்கள். தன் மனதையே பறிகொடுத்து விடுவார்கள்.

பேச்சின் மூலம் மற்றவர்களைப் பிரமிக்கச் செய்வார்கள். பிறருக்குத் தீங்கு செய்யும் எண்ணம் அறவே இருக்காது. எல்லா மக்களும் நலமாக, வளமாக வாழ வேண்டும் என்று நினைப்பார்கள். வாய்ப்பேச்சின் மூலம் பொருள் சேர்ப்பார்கள். சிறிய பொருளால் பெரிய மனிதராகி விடுவார்கள். மனம் கண்டபடி அலை பாயும். அற்ப சுகத்திற்கு ஆசைப்படுவார்கள். ஆடம்பரத்தில் ஆசைப்படுவார்கள். மனதைக் கட்டுப்படுத்தினால் மங்காத புகழுண்டாகும். வரலாற்றில் இடம் பிடிப்பார்கள். வருங்காலம் இவர்களை வாழ்த்திக் கொண்டேயிருக்கும்படியான சாதனைகள் பல செய்வார்கள். மனிதகுலம் செழுமை பெற வேண்டி வாழ்வியல் நுணுக்கங்களை எடுத்து உரைப்பார்கள்.

தனக்குப் பிடித்தமான நபர்களுக்கு இயன்ற அளவு அவர்களுக்கு வேண்டிய காரியங்களைச் செய்து கொடுப்பார்கள். தன்னைப் புகழ்ந்து பேசும் நபர்களுக்குத் தேவையான அனைத்து செயலையும் செய்வார்கள். புகழ்வதை விரும்புவார்கள். வெளிக்காட்டிக்கொள்ள மாட்டார்கள். பிறருடைய புகழ்ச்சியை நல்லதா? கெட்டதா? என்று ஆராய்ந்து முடிவெடுப்பார்.

(தொடரும்....)

# உயிரைத் தியாகம் செய்தேனும் பௌத்தத்தை பாதுகாக்க வேண்டும்

## உபனந்த தேரர் உபதேசம்



(கொழும்பு)

இந்நாட்டிலுள்ள ஏனைய மக்கள் தொகுதியினருக்கு உலகில் செல்வதற்கு பல நாடுகள் உள்ளதாகவும் பௌத்தர்களுக்கு உள்ள ஒரே நாடு இலங்கை மாத்திரமே என தம்புள்ளை அதுபாரயாய ஸ்ரீ போதிருகாராமா விகா ராதிபதி அளுத்கம உபனந்த தேரர் தெரிவித்தார்.

பொசன் தினத்தை முன்னிட்டு நேற்று முன்தினம் நடைபெற்ற சமய நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் தேரர் மேற்கண்டவாறு கூறினார்.

இன்று பெரும்பாலான இராணுவத்தினர் சிறையிலேயேயுள்ளனர். இந்த இராணுவத்தினருக்காக கருத்துத் தெரிவிக்க முன்வந்தால், காவியுடையைக் கழற்றிவிட்டு சிறையில் இருக்கவேண்டி நிலை வருகின்றது. இது எமது தேசியப் பொறுப்பாகும்

தேசிய உரிமையைப் பாதுகாப்பதற்கும் இந்த பௌத்த மதத்தைப் பாதுகாப்பதற்கும் உயிரைத் தியாகம் செய்யவும் முன்வர வேண்டிய ஒரு கால கட்டத்தில் நாம் வாழ்கின்றோம் எனவும் தேரர் மேலும் சுட்டிக்காட்டினார். (இ-7)

# பிரசன்ன எம்.பிக்கு எதிரான வழக்கு செப். 13 ஆம் திகதிக்கு ஒத்திவைப்பு

(கொழும்பு)

மேல் மாகாண முன்னாள் முதலமைச்சரும் கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினருமான பிரசன்ன ரணதுங்க மற்றும் அவரது மனைவி உட்பட மூன்று பேருக்கு எதிரான வழக்கு விசாரணைகளை கொழும்பு மேல் நீதிமன்றம் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 13 ஆம் திகதிக்கு ஒத்திவைத்துள்ளது.

இந்த வழக்கு நேற்று கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி சம்பா ஜானகி ராஜரத்ன முன்னிலையில் விசார



ணைக்கு எடுக்கப்பட்டது.

முறைப்பாட்டாளர் சார்பில் வழக்கை நெறிப்படுத்தும் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் துசித் முதலிகே கடமை நிமித்தமாக அவசரமான வெளிநாட்டு பயணம் ஒன்றை மேற்கொண்டுள்ளதால், வழக்கு விசாரணைகளை ஒத்திவைக்குமாறு அரச சட்டத்தரணி நீதிமன்றத்தில் கோரிக்கை விடுத்தார்.

இதனையடுத்து வழக்கை செப்டெம்பர் 13 ஆம் திகதிக்கு ஒத்திவைத்த நீதிபதி அன்றைய தினம் சாட்சியமளிப்பதற்காக நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு சாட்சியாளர்களுக்கு உத்தரவிட்டுள்ளார்.

மீதொட்டமுல்ல பிரதேசத்தில் உள்ள சதுப்பு நிலத்தில் குடியிருக்கும் சட்டவிரோத குடியிருப்பாளர்களை அப்புறப்படுத்தி கொடுக்க ஜெராட் மெண்டிஸ் என்ற வர்த்தகரிடம் 64 மில்லியன் ரூபாய் பணத்தை கேட்டு பலவந்தப்படுத்தி, அச்சுறுத்தியதாக பிரசன்ன ரணதுங்க, அவரது மனைவி உட்பட மூன்று பேருக்கு எதிராக சட்டமா அதிபர் இந்த வழக்கை தொடர்ந்துள்ளார். இந்த வழக்கின் மூன்றாவது பிரதிவாதியான நரேஷ் பாரிக் என்ற நபர் நீதிமன்றத்தில் ஆஜராகாமல் இருப்பதுடன் வெளிநாட்டில் தங்கியுள்ளார்.

மூன்றாவது பிரதிவாதி இன்றி வழக்கு விசாரணைகளை நடத்த நீதிமன்றம் தீர்மானித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# தமிழர் விடுதலைக்கூட்டணி மத்திய செயற்குழுக் கூட்டம்




(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் விசேடமத்திய செயற்குழுக் கூட்டம் நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கட்சியின் தலைமைச் செயலகத்தில் நேற்று முன்தினம் உபதலைவர் கா.குலசேகரம் தலைமையில் நடைபெற்றது. கட்சியின் சிரேஸ்ட உபதலைவர் மறைந்த அமரர் கு.சிவகுலசிங்கத்தின் வெற்றிடத்திற்கு மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த, கிழக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் ஞா.கிருஸ்ணபிள்ளை (வெள்ளிமலை) மத்தியசெயற்குழு உறுப்பினர்களால் சிரேஸ்ட உபதலைவராக ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார்.

அண்மையில் நடந்து முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் நாம் சில அமைப்புகளுடன் இணைந்து தமிழரசுக் கட்சிக்குமாற்று அணியாக, மக்களுக்கு அர்ப்பணிப்புடன் சேவையாற்ற வேண்டும் என்ற ஒரு பொது நோக்கத்துடன் தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பு என்ற பெயரில் போட்டியிட்டு கணிசமான இடங்களை கைப்பற்றியது யாவரும் அறிந்ததே. ஆனால் என்ன நோக்கத்திற்காக நாம் தேர்தலில் போட்டியிட்டோமோ அதற்கு மாறாக ஒருசில உறுப்பினர்களின் செயற்பாடுகள் அமைந்துள்ளதால் அவ்வாறனவர்களை சபை உறுப்பினர் பதவிகளில் இருந்து நீக்குவதற்கு மத்திய செயற்குழுவால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு செயலாளர் நாயகத்திற்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டது. அதற்கு அமைவாக ஏற்கனவே கடிதங்கள் அனுப்பப்பட்ட உறுப்பினர்களை பதவிநீக்கம் செய்வதற்கு தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு அறிவித்து அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என செயலாளர் நாயகம் எடுத்துக் கூறினார்.

அடுத்ததாக தமிழர் விடுதலைக் கூட்டணியின் வட மராட்சிப் பிரதேசத்திற்கான அமைப்பாளராக பொ.குகதாசன் நியமனம் செய்யப்பட்டார்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள எமது கட்சியின் உறுப்பினர்களை சந்தித்து கலந்துரையாடல்களை மேற்கொள்ள வேண்டும் என்ற கோரிக்கையும் முன்வைக்கப்பட்டது. ஓகஸ்ட் மாதம் நடக்கவிருக்கும் வருடாந்த தேசிய மாநாட்டை மட்டக்களப்பில் நடத்துவதாகவும் தீர்மானிக்கப்பட்டது. எதிர்வரும் காலங்களில் ஒருபலமான அமைப்பாக எமது கட்சியை உருவாக்குவதற்கு அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி தனது உரையில் மேலும் தெரிவித்தார். (இ-7)

# மஹா கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை-மணிக்கூட்டுவீதி அரசடி விநாயகர் ஆலய மஹா கும்பாபிஷேகம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு விநாயகப் பெருமான் வழிபாட்டுடன் நடைபெறும்.

இந் நிகழ்வில் நாளை சனிக்கிழமை எண்ணெய்காப்பு சாத்துதல் நடைபெறும். தொடர்ந்து நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை கும்பாபிஷேகம் நடைபெற்று மாலை 6 மணிக்கு சாயங்கால பூஜை, வசந்த மண்டபப் பூஜை, திருவீதியுலா என்பன நடைபெறும்.

...............................................................

உடுப்பிட்டி தெற்கு பண்டகைப் பதியுறை பண்டகைப் பிள்ளையார் திருக்கோவில் மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் வியாழக்கிழமை 5 ஆம் திகதி முற்பகல் 9.40 மணியளவில் நடைபெறும்.

இதற்கான பூர்வாங்க கிரியைகள் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு ஆரம்பமாகும். (இ)

# இராமலிங்கம் சுவாமிகளின் வருடக் குருபூசை 1 ஆம் திகதி

வேதாந்த மடம் மகாதேவா சுவாமிகள் ஆச்சிரமம் ஸ்ரீ சிவகுரு நாத குருபீடம் ஸ்ரீமத் இராமலிங்கம் சுவாமிகளின் வருடக் குருபூசை நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு இல.18,குமாரசாமி வீதி, யாழ்.கந்தர் மடத்தில் அமைந்துள்ள ஸ்ரீசிவகுருநாத பீடத்தில் நடைபெறும். (இ)

# செய்தித்துளிகள்

## ரூ. 70 இலட்சம் பெறுமதியான பல வகையான போதைப்பொருட்களுடன் விமான நிலையத்தில் ஒருவர் கைது

70 இலட்சம் ரூபாய் பெறுமதியான பல வகையான போதைப்பொருட்களுடன் நபர் ஒருவரை விமான நிலையத்தில் வைத்து பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினர் நேற்றுக் காலை கைது செய்துள்ளனர். சென்னையிலிருந்து வந்த நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். இவரிடமிருந்து 320 கிராம் ஹெரோயின், 52 கிராம் ஐஸ், 230 கிராம் ஹஷிஷ் ஆகிய போதைப் பொருட்களை பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவினர் கைப்பற்றியுள்ளனர். இந்நிலையில் கைது செய்தவரிடம் மேலதிக விசாரணை களை பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப்பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

## ஏற்றுமதி நோக்கில் எள்ளு பயிரிட அரசு விசேட திட்டம்

(கொழும்பு)

வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் நோக்கில் இந்தாண்டு மாத்தளை மாவட்டத்தில் 500 ஹெக்டேயர் காணியில் எள்ளு பயிரிட மத்திய மாகாண விவசாயத் திணைக்களம் திட்டமிட்டுள்ளது. அந்தவகையில், தம்புள்ளை, கலேவெல, லக்கல ஆகிய பகுதிகளில் இந்த உற்பத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ள நீர்வளமும் நிலமும் காணப்படுவதனால் இத்துறையில் ஈடுபட்டுள்ள உற்பத்தியாளர்கள் விவசாய நடவடிக்கையில் பெரும் ஆர்வம் காட்டி வருகின்றனர். உற்பத்தியாளர்களுக்குத் தேவையான தொழில்நுட்ப அறிவு மற்றும் பயன்தரக் கூடிய விதைகளும் பகிர்ந்தளிக்கப்படவுள்ளதாக மேற்படி திணைக்களம் தெரிவித்துள்ளது. (இ-7)

## யாழ்.சின்மயா மிஷன் மண்டபத்தில் அனந்தராமனின் பக்தி இசைமாலை

(யாழ்ப்பாணம்)

யாழ்.சின்மயா மிஷனின் இசைப் பிரிவாகிய சின்மய ஸ்வராஞ்சலியின் ஏற்பாட்டில் கலைமாமணி பித்துக்குளி முருகதாஸின் சீடர் பேராசிரியர் அனந்தராமனின் "பக்தி இசை மாலை" இன்னிசை நிகழ்வு 2ஆம் திகதி திங்கட் கிழமை மாலை 4.30 மணி முதல் 6.30 மணி வரை இல. 9, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூரில் அமைந்துள்ள சின்மயாமிஷன் மண்டபத்தில் நடைபெறும். ஆர்வலர்கள் அனைவரையும் இதில் கலந்துகொள்ளுமாறு யாழ்.சின்மயா மிஷன் அழைப்பு விடுத்துள்ளது. (இ-7)

## வருடாந்த பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா நாளை சனிக்கிழமை காலை 9 மணியளவில் கல்லூரி மண்டபத்தில் அதிபர் எம்.கனகலிங்கம் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞானபீட முன்னாள் பீடாதிபதி சி.சிறிசற்குணராஜா, சிறப்பு விருந்தினராக கரவெட்டி பிரதேச செயலர் இ.தயாரூபன், நினைவுரையினை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை மனநல பிரிவு வைத்திய அதிகாரி கே.சிவசுதன் வழங்குவார். (இ)

## வாழ்வாதார கொடுப்பனவுகள் வழங்கல்

(குருநகர்)

குருநகர் மக்கள் முன்னேற்ற ஒன்றியத்தின் ஏற்பாட்டில் பெண் தலைமைத்துவக் குடும்பத்துக்கும் முதியோருக்குமான வாழ்வாதாரக் கொடுப்பனவுகள் குருநகர் சனசமூக நிலையத்தில் அதன் செயலாளர் அ.க.ஏணெஸ்ற் தலைமையில் அண்மையில் வழங்கப்பட்டன. (இ-106)

## தளபாடங்கள் வழங்கல்



(கரணவாய்)

பருத்தித்துறை பிரதேச சபையின் உப தவிசாளர் கு.தினேஸின் வேண்டுகோளுக்கு இணங்க இலண்டனில் வாழும் ப.ஜெயபூவன், 18 ஆயிரம் ரூபா பெறுமதியான தளபாடங்களை திக்கம் ஆரம்ப சுகாதார நிலையத்துக்கு வழங்கினார். (இ-60)

## நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும்

யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப்பாசாலையின் நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் தம்பையா மண்டபத்தில் அதிபர் திருமதி வே.சண்முகரட்ணம் தலைமையில் இடம்பெறும். இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராக வடமாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே கலந்து கொள்வார். (இ)





(பொலநறுவை)

பொலநறுவை பொசன் தின நிகழ்ச்சிகளுடன் இணைந்ததாக பொலநறுவை வரலாற்று முக்கியத்துவமிக்க கல்விகாரையில் இடம்பெறும் புனித சின்னாங்களை காட்சிப்படுத்தல்.பொதுமக்கள் தரிசிப்பதற்காக நேற்று முன்தினம் பிற்பகல் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் திறந்து வைக்கப்பட்டது. கண்டி நெல்லிகல சர்வதேச பௌத்த மத்திய நிலையத்திலிருந்து இந்த புனித சின்னங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன. மக்கள் தரிசிப்பதற்காக புனித சின்னங்கள் வைக்கப்பட்டுள்ள விசேட பேழையை பிரதிஷ்டை செய்த ஜனாதிபதி முதலாவது மலர் பூஜையை செய்தார். சங்கைக்குரிய கந்தகெடியே அத்ததஸ்ஸி தேரரினால் விசேட சமயக் கிரியைகள் நடத்தப்பட்டன. இராணுவத் தளபதி லெப்டினல் மகேஸ் சேனாநாயக்க, பொலநறுவை நகர பிதா சானக்க சிதத் ரணசிங்க, பொலநறுவை மாவட்ட செயலாளர் ரஞ்சித் ஆரியத்ன ஆகியோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# ஆட்சியைக் கைப்பற்றும் வரையில் எதிர்க்கட்சித் தலைவராக மகிந்த

## விமல் வீரவன்ச உறுதி



(கொழும்பு)

பிரதான எதிர்க்கட்சி அந்தஸ்தை எம்வசப்படுத்தி ஆட்சியைக் கைப்பற்றும் வரையில் மகிந்த ராஜபக்ஷவை எதிர்க் கட்சித் தலைவராக்குவதே எமது பிரதான இலக்காகும் என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

மக்கள் விடுதலை முன்னணியினால் கொண்டு வரப்பட்டுள்ள 20 ஆவது திருத்தச் சட்டத்தை தோற்கடிக்க வேண்டும் என்ற நோக்கம் எமக்குள்ளது. நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிக்கவும் நாட்டைத் துண்டாடவும் மக்கள் விடுதலை முன்னணியும் ஐக்கிய தேசியக் கட்சியும் முன்னெடுக்கும் திட்டங்கள் எமக்கு நன்றாகவே தெரிகின்றன. எனவே, நாட்டைக் காப்பாற்ற வேண்டிய தேவை எமக்குள்ளது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் ஆட்சிக்கு வந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நிறைவேற்று ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைத்துள்ளார். பாராளுமன்றத்துக்கு அதிகாரங்களை வழாங்கியுள்ளார்.

ஆகவே இது போதுமானது. இன்று தேசிய பாதுகாப்பு விடயத்தில் பாரிய அச்சுறுத்தல் உள்ளது.

வடக்கில் மீண்டும் பயங்கரவாதம் தலைதூக்கும் சூழல் உள்ளது. வடக்கு முதல்வர் நாட்டைத் துண்டாடும் நோக்கத்தில் செயற்பட்டு வருகிறார். சிவாஜிலிங்கம் போன்றவர்கள் பிரிவினை வாதக் கொள்கையில் செயற்பட்டு வருகின்றனர்.

பொலிஸ் அதிகாரங்கள், காணி அதிகாரங்களை கேட்டுக்கொண்டு அவர்கள் வடக்கில் மீண்டும் தனி இராச்சியமாக செயற்பட முயற்சித்து வருகின்றனர்.

இந் நிலையில் நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை நீக்கும் நோக்கங்கள் மூலமாக விடுதலைப் புலிகளின் இலக்கு என்னவோ அது அரசாங்கத்தின் மூலமாகவே நிறைவேற்றப்படும்.

ஆகவே 20 ஆவது திருத்தச் சட்டத்தை தோற்கடிப்பது குறித்து சகல தரப்புகளுடனும் நாம் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்து வருகின்றோம்.

பாராளுமன்றத்தின் பிரதான எதிர்க்கட்சி ஆசனத்தை நாம் கைப்பற்ற வேண்டும். அந்த நோக்கம் எமக்குள்ளது. குறிப்பாக இந்த அரசாங்கத்தின் ஆட்சி முடிவுக்கு வரும் வரையில் பாராளுமன்றத்தில் பிரதான எதிர்க்கட்சித் தலைவராக மகிந்த ராஜபக்ஷவைக் கொண்டு வர வேண்டும். அதற்கான சூழலை நாம் உருவாக்குவது குறித்தும் சிந்தித்து வருகின்றோம்.

இப்போது அரசாங்கத்தில் இருந்து பலர் வெளியேறி எதிர்க்கட்சிக்கு மாறியுள்ளனர். ஆகவே இப்போது கூட்டு எதிர்க்கட்சி பிரதான எதிர்க்கட்சியாக மாற்றம் பெற்றுள்ளது.

எனவே மகிந்த ராஜபக்ஷவை எதிர்க்கட்சித் தலைவராக மாற்றும் நகர்வுகளை நாம் முன்னெடுக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# ஆட்சியைக் கவிழ்க்க முடியாது

# கவலைக்குரிய நிலையில் ரணில் எதிர்ப்புக்குழு

## ஐ.தே.க. அமைச்சர் சாடல்

(கொழும்பு)

நாட்டில் கணக்கில் எடுக்காத பிளவடைந்த கட்சியின் தலைவரான விமல் வீரவன்சவை சந்தித்தமையின் ஊடாக சுதந்திரக் கட்சியின் 16 பேர் குழுவின் தரம் வெளிப்பட்டுள்ளது.

ஆகவே அரசியலில் 16 பேர் கொண்ட குழுவினர் அநாதைகளாக்கப்பட்டுள்ளனர். இவர்களினால் எப்படி ஆட்சியை கவிழ்க்க முடியும் என ஐக்கிய தேசியக் கட்சி கேள்வி எழுப்பியுள்ளது.

சுதந்திரக் கட்சியின் 16 பேர் கொண்ட குழுவினர் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்சவை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியதுடன் நாம் அனைவரும் ஒன்றிணைந்து ஆட்சியை கவிழ்க்க போவதாக சவால் விட்டனர்.

இது தொடர்பாக வினவிய போதே ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடக மற்றும் தொடர்பாடல் பிரிவின் பிரதானியும் அமைச்சருமான ஹரீன் பெர்னாண்டோ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தேசிய அரசாங்கத்தை விமர்சித்து வெளியேறிய சுதந்திரக் கட்சியின் 16 பேர் கொண்ட குழுவினர் நிலைமை கவலைக்குரியதாக மாறியுள்ளது. அரசியலில் அவர்கள் அநாதரவாக்கப்பட்டுள்ளனர். அரசியலில் எந்தக்கட்சியின் பக்கம் செல்வது என்பது தெரியாமல் தட்டுத்தடுமாறுகின்றனர்.

இதன்படி பிளவுபட்டுள்ள கட்சித் தலைவரை சந்தித்துள்ளனர். தனது கட்சியைப் பாதுகாக்க முடியாத விமல் வீரவன்சவை சந்தித்து பேசியுள்ளனர். கட்சி தலைவராகவே கணக்கில் எடுக்க முடியாத விமல் வீரவன்சவைச் சந்தித்தமை ஊடாக சுதந்திரக் கட்சியின் 16 பேர் கொண்ட குழுவின் உண்மை நிலைமை வெளிப்பட்டுள்ளது.

ஆகவே சுதந்திரக் கட்சியின் சுயாதீன குழுவினர் அரசியல் அநாதைகளாக ஆக்கப்பட்டுள்ளனர். எங்கு செல்வதென்று தெரியாமல் விமல் வீரவன்சவை சென்று சந்தித்துள்ளமை அதனை உறுதிப்படுத்துகின்றது.

அரசியலில் அநாதைகளானவர்களால் எப்படி ஆட்சியை கவிழ்க்க முடியும். இந்த ஆட்சியை ஐந்து வருடம் முடியும் வரை கவிழ்க்க முடியாது.

ஆகவே நாம் தொடர்ந்து ஆட்சியை கொண்டு செல்வோம் .

அத்துடன், தற்போது நாட்டை அபிவிருத்தி செய்வதற்கான ஏற்பாடுகளை துரிதமாக முன்னெடுத்து வருகின்றோம்.

தற்போது பிரதியாக உள்ள காலப் பகுதியைக் குறைபாடுகளை நிவர்த்தி செய்து கொண்டுபயணிக்கவுள்ளோம்

ஆகவே எமது வேலைத் திட்டத்திற்கு நாட்டு மக்களின் ஒத்துழைப்பு மிகவும் அவசியமாகும். அண்மையில் நாம் கம்பெரலிய வேலைத் திட்டத்தை ஆரம்பித்தோம். இதன் ஊடாக கிராமத்தில் பாரிய அபிவிருத்தியை முன்னெடுக்கவுள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# சீனாவின் உதவித்திட்டங்களை அவதானமாக கையாள வேண்டும்

## இலங்கைக்கு சர்வதேச நாணயசபை அறிவுறுத்து

(கொழும்பு)

சீனாவின் உதவியுடன் முன்னெடுக்கப்படும் பாரிய அபிவிருத்தித் திட்டங்களை இலங்கை அவதானமாக கையாளவேண்டும் என சர்வதேச நாணயநிதியம் தெரிவித்துள்ளது.

சீனாவின் புதிய பட்டுப் பாதை திட்டத்தின் மூலம் பயனைப்பெறுவதற்கு இலங்கை சீனாவின் உதவியுடன் முன்னெடுக்கப்படும் பாரிய அபிவிருத்தி திட்டங்களை கவனமாக கையாள்வது அவசியம் என சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

சீனாவின் நிதியுதவியுடன் முன்னெடுக்கப்படும் பாரிய அபிவிருத்தி திட்டங்கள் பாரிய பிராந்திய வர்த்தகம் மற்றும் நிதி ஒருங்கிணைப்பு மூலம் இலங்கைக்கு நன்மையை கொண்டு வரலாம் என தெரிவித்துள்ள சர்வதேச நாணய நிதியம், இலங்கையின் பாரிய கடன் மற்றும் சமூக தேவைகளை கருத்தில் கொள்ளும் போது இலங்கை இத்திட்டங்களை நிதானமாக கையாள வேண்டும் என மேலும் தெரிவித்துள்ளது. (இ-7)





ஆசிரியர் சாருவின் விடியல் சமூக அறிவியல் மாதாந்த சஞ்சிகை கரவெட்டி பிரதேச சபை மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கலந்து கொண்டு சஞ்சிகையை வெளியிட்டார். (படங்கள்:-கரணவாய் செய்தியாளர்)

# கட்சி பேதங்களை மறந்து உழைத்தால் சிறுமி றெஜினாவின் இழப்பே இறுதி படுகொலையாக இருக்கும்

## டக்ளஸ் எம்.பி. தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

அரசியல்வேறுபாடுகளுக்கு அப்பால் சமூக நலன் கருதியும் மக்களின் பாதுகாப்புக் கருதியும் அனைவரும் ஒன்றுபட்டு உழைப்பதனூடாகவே எமது சமூகத்தில் இன்னொரு றெஜினாவை கொடிய வன்முறைக்கு காவுகொடுக்காது பாதுகாத்துக் கொள்ளமுடியும் என்று ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா எம்.பி. தெரிவித்துள்ளார்.

வட்டுக்கோட்டை சுழிபுரம் பகுதியில் படுகொலை செய்யப்பட்ட அப்பாவிச் சிறுமி றெஜினாவின் மரணத்துக்கு நீதி கோரி நேற்று முன்னெடுக்கப்பட்ட மாணவர்களின் போராட்டத்தில்கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில், இன்று எமது மக்களது கலாசாரங்களை சீரழித்துக் கொண்டிருக்கின்ற சமூக சீரழிவுகளை இல்லாதொழிப்பதற்கு மக்களின் ஆதரவும் அவசியம். அரசியல் ரீதியாக சொல்லப்படுகிறது இவ்வாறான சம்பவங்கள் இனிமேல் நடக்காது என்றும் இதை தொடர்ந்து நடக்க விடக்கூடாது என்றும்ஆனாலும்இவ்வாறானசம்பவங்கள் தொடர்ந்தும் நடந்துகொண்டுதான்இருக்கின்றது.

ஆதலால் இவ்வாறான சம்பவங்களைமுளையிலேயே கிள்ளி எறியும் வகையில் இந்த போதைப்பொருள் பாவனையை நிறுத்த வேண்டும். இதில் பொதுமக்களுக்கும் அரசியல்வாதிகளுக்கும் பங்குண்டு. இந்த இரண்டும் ஒன்று சேரும் போதே இலகுவாக தீர்வுகாணமுடியும்.

ஏனெனில் இது ஒரு பிரதேசத்துக்கு மட்டுமான பிரச்சினை அல்ல. தமிழர்கள் வாழும் பகுதிகளெங்கும் இது நடைபெறுகின்றது. இன்று நடந்தேறியுள்ள றெஜினாவின் கொலையே கடைசியானது என எடுத்துக்கொண்டு இனிமேல் இவ்வாறான சம்பவங்கள் எங்கும் நடைபெறாது இருக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். அந்த தீர்வுதான் இந்த றெஜினா என்ற குழந்தையின் கொலைக்கு மட்டுமல்லாது இவ்வாறான சம்பவங்களுக்கு நீண்டகால தீர்வாக அமையும்.

நான் இன்று மத்திய அரசின் முகவராகவும் இருக்கவில்லை, மாகாண அரசின் முகவராகவும்இருக்க வில்லை. அவ்வாறு நான் இன்று இருந்திருந்தால் இந்த பிரச்சினைக்கு உரிய தீர்வுகளைக் காண்பதற்கான அனைத்து செயற்பாடுகளையும் முன்னெடுத்திருப்பேன்.

அந்தவகையில் கட்சிகள் பேதங்களால் அரசியல் காரணங்களை கொண்டதாக பிரச்சினைகளை அணுகாது சமூகநலன்கருதி அனைவரும் ஒன்றுபட்டு செயற்பட்டால் நிச்சயம் தீர்வுகாண முடியும்.

அந்தவகையில் கட்சி பேதங்களை மறந்து உழைத்தால் சிறுமி றெஜினாவின் இழப்பே இறுதிபடுகொலையாக இருக்கும்.

அதற்காக சகலரும் கட்சி பேதங்கள் இன்றி உழைக்க வேண்டும் என்றும் அதிகாரத்திலுள்ளவர்கள் உரிய நடவடிக்கைகளை எடுக்க முன்வரவேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)





தென்மராட்சி இலக்கிய அணியின் கம்பன் விழா கடந்த 27 ஆம் திகதி சாவகச்சேரி சங்கத்தானை கம்பன் கல்லூரி வளாகத்தில் ஓய்வு நிலை பிரதிக்கல்விப் பணிப்பாளர் அ.அகிலதாஸ் தலைமையில் இடம்பெற்றது. இதில்முதன்மை விருந்தினராக தொழிலதிபர் வை.சிவராசா கலந்து கொண்டு மங்கல விளக்கினை ஏற்றி நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

இந்நிகழ்வில் பேராசிரியர் க.கந்தசாமி மற்றும் திருமதி கந்தசாமி சியாமளா ஆகியோர் கம்பவாரிதி இ.ஜெயராஜ் அவர்களால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டனர்.நிகழ்வின் இறுதியில் கம்பவாரிதி இ.ஜெயராஜ் அவர்கள் தலைமையில் "கம்பரா மாயணத்தின் புகழுக்கு பெரிதும் காரணமாய் அமைவது அதில் பாதித்துள்ள அழகியலே ,அறிவியலே " என்ற தலைப்பில் சிறப்பு பட்டிமண்டபம் இடம்பெற்றது. (படங்கள்:- சுபேசன்)

# சாதனையாளர் கௌரவிப்பும் கற்றல் உபகரணங்கள் வழங்கலும்

கன்பொல்லை மக்கள் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் 2018 ஆம் ஆண்டிற்கான சாதனையாளர் கௌரவிப்பும் முன்பள்ளி சிறார்களுக்கான பாடசாலை கற்றல் உபகரணங்கள் வழங்கலும் மறைந்த மூத்த கலைஞர்கள் கௌரவிப்பும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் ஸ்ரீநாரதா பாடசாலை மைதானத்தில் நடைபெறும்.

இந் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினர்களாக பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா, மாகாண சபை உறுப்பினர் சிவயோகன், சிறப்பு விருந்தினர்களாக மன்னார் தமிழ்ச்சங்க அருட்தந்தை வண.தமிழ்நேசன் அடிகளார், ஸ்ரீநாரதா வித்தியாலய முன்னாள் அதிபர் க.இராசரத்தினம், உலக தமிழர்பண்பாட்டு இயக்க அறங்காவலர் வேல்.வேலுப்பிள்ளை, உலக தமிழர் பண்பாட்டு இயக்க தலைவர் சரவணையூர் விசு.செல்வராசா, தென்னாபிரிக்க தமிழ் பாடசாலை அதிபரும் உலக தமிழர் பண்பாட்டு இயக்கத்தலைவருமான எம்.தர்மகுமாரி, ஸ்ரீநாரதா வித்தியாலய அதிபர் ச.சுவேந்தன், ஜே/363 சுழுந்தி உத்தியோகத்தர் ச.குவேந்திரன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1450

### சரண்யா


எந்தத் தவறும் புரியாமல் இருப்பவர்களே...



பிறர் குற்றங்களை மன்னிக்கத் தகுதியுள்ளவர்கள்

### பார்வதி


விதை நெல்லைக்கூட விலையில்லாமல் உணவாக்குபவன் விவசாயி



உமியைக்கூட நெல்லின் விலையளவிற்கு மாற்றத் தெரிந்தவன் முதலாளி...!

### வெண்ணிலா

நமக்கு ஒன்று கிடைக்கவில்லையே என்று கவலைப்படு



அது மற்றவர்களுக்கும் கிடைக்கவில்லை என்று சந்தோசப்படாதே...

### ஆதி

பசித்த வயிறு பணம் இல்லா வாழ்க்கை பொய்யான உறவுகள்



இவை கற்றுத் தரும் பாடத்தை யாராலும் கற்றுத் தரமுடியாது

### அருண்

அப்பாவை இழந்த மகன்மாருக்கு மட்டுமே தெரியும்



குடும்பத்தை நடத்தும் வலி வாழ்நாள் முழுவதும் என்று...

### கார்த்தி

கையில் பெப்சி, கோக், லேஸ் வைத்திருந்தால் இயல்பாகப் பார்க்கிறார்கள்...



ஒரு கொய்யாக்காய் வைத்திருந்தால் விநோதமாகப் பார்க்கிறார்கள்...!

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.




# சிறுவர் அரங்கம்

## கருணை



பல்லவர்கள் காஞ்சிபுரத்தை ஆண்டு வந்த நேரம். சென்னை அருகிலுள்ள திருநின்றவூரில் காளத்தி முதலியார் என்பவர் வசித்தார். அவர் பெரும் கொடை வள்ளல். இவரது புகழைக் கேள்விப்பட்ட பல்லவ மன்னன் ஒருவன், முதலியார் மீது பொறாமை கொண்டான். தன்னை விட உயர்ந்த பரிசுகளைக் கொடுத்து, தன் புகழைச் சரியச் செய்கிறாரே என்று கொதித்தான். அதிகாரிகளை அனுப்பி, முதலியார் வைத்திருந்த பொருட்களை பறித்து விட்டான்.

வேறு எங்காவது போய் வாழலாம் என அவர் தன் மனைவியுடன் புறப்பட்டார். நீண்ட தூரம் சென்று ஒரு சத்திரத்தில் தங்கினர். பசி வயிற்றைக் கிள்ளியது. உணவளிப்பவர் யாருமில்லை.

கிழிந்த ஆடையுடன் புலவர் ஒருவர் அங்கே அமர்ந்திருந்தார். பசிக்களைப்பு அவரையும் வாட்டியிருந்தது. இருப்பினும் வாய் சும்மா இல்லை. "ஏ வறுமையே! இன்று நீ என்னை விரட்டுகிறாய். நாளை நான் உன்னை விரட்டுகிறேன் பார்! இன்று நீ என்ன ஆட்டம் வேண்டுமானாலும் போடு. நாளை திருநின்றவூர் காளத்தி முதலியாரிடம் பொருள் பெற்ற பின், உனக்கு என்னிடத்தில் வேலையின்றிப் போகும். ஒரேநாளில், நான் இலட்சாதிபதியாகி விடுவேன்" என்ற பொருள்பட அவர் ஒரு பாட்டைப் பாடினார்.

முதலியாருக்கு திக்கென்றது. "ஆஹா! யாரோ ஒரு புலவர், நான் இன்னும் பணக்காரனாகவே இருக்கிறேன் என எண்ணி, என்னை நம்பி ஊருக்குச் செல்கிறார். இவர் வரும் நேரத்தில், நான் அங்கு இல்லாமல் இருந்தால், பதில் சொல்லக்கூட நாதியிருக்காதே! என்ன கொடுமை! என்ன நடந்தாலும் சரி! இவர் அங்கு வந்து சேர்வதற்குள் நாம் முந்திப்போய் விட வேண்டும், என்றெண்ணி, மனைவியுடன் மீண்டும் ஊர் போய் சேர்ந்து வீட்டில் இருந்தார். எதிர்பார்த்ததைப் போல புலவர் வீட்டுக்கு வந்தார். முதலியார் அவரை வரவேற்றனர். தன் நிலையைச் சொல்லி பொருள் கேட்டார் புலவர். இது எதிர்பார்த்தது தானே! கேட்டதைக் கொடுக்காவிட்டால் மானம் போய் விடுமே! "மரணம் கொடுமையானது தான். ஆனால், ஒருவர் கேட்டு இல்லை எனச் சொல்வது அதை விடக் கொடுமையானது" என்ற கொள்கையுடையவர் முதலியார். எனவே, வேகமாக வீட்டின் பின் பக்கம் சென்றார். மானமிழந்து வாழ்வதை விட உயிர்விடுவதே மேல் என்ற கருத்தில், அங்கிருந்த பாம்புப் புற்றுக்குள் கையை விட்டார். அதில் இருந்த பாம்பு, கொடுத்துச் சிவந்த அந்தக்கரங்களை தீண்ட விரும்பவில்லை. "எத்தனை பேருக்கு அள்ளிக் கொடுத்த கை," என்று நினைத்த பாம்பு, தன் வாயில் இருந்த இரத்தினத்தை அவர் கையில் போட்டது. ஆச்சரியமும் மகிழ்ச்சியும் அடைந்த முதலியார், பெரும் விலை மதிப்புள்ள அந்தக் கல்லுடன் வீட்டுக்குள் வந்தார். புலவரிடம் ஒப்படைத்தார்.

"பெரும் பொருளாய் இருந்தால் சுமந்து செல்ல கடினமாக இருக்குமென நினைத்து, இந்த இரத்தினத்தை தந்தீர்களோ! இதன் விலை அளவற்றது. இதைக் கொண்டு நான் பிழைத்துக் கொள்வேன் என வாழ்த்திவிட்டு புறப்பட்டார். அதை பிரபுக்களால் கூட விலை கொடுத்து வாங்க முடியாது என்பதால், அரசனிடம் சென்றார். முதலியார் வீட்டில் தானமாக வாங்கி வந்ததாகவும் அதற்கு பொருள் தரும்படியும் கூறினார்.

அரசன் ஆவேசமானான். அதிகாரிகளைக் கடிந்து கொண்டான். "நீங்கள் பறிமுதல் செய்யும்போது, இதுபோன்ற இரத்தினங்களை ஏன் விட்டு வைத்தீர்கள்! முதலியார் இன்னும் நிறைய வைத்திருப்பார். நானே நேரில் போகிறேன், என கிளம்பினான். முதலியாரிடம் அவர் கைவசமுள்ள இரத்தினங்களைக் கேட்டான். முதலியார் நடந்த உண்மையை விளக்கினார். அதை நம்பாத மன்னன், "அப்படியானால், மீண்டும் புற்றுக்குள் கை விடும். பாம்பு இப்போது தந்தது நாகரத்தினம். அதனிடம் ஜீவரத்தினமும் இருக்கும். அதைக் கேட்டுப் பெறும் பார்க்கலாம்" என்றான்.

நடப்பது நடக்கட்டுமென முதலியார் புற்றில் கையை விட்டார். பாம்பு ஜீவரத்தினத்தை அவர் கைகளில் உமிழ்ந்து விட்டு, புற்றை விட்டுவெளியே வந்து உயிர்விட்டது. முதலியாரின் பெருமையை எண்ணியும்கொடிய பாம்புக்கு இருந்த இரக்க சிந்தனை கூட தன்னிடம் இல்லாமல் போனதே என்பதை எண்ணியும் வெட்கப்பட்டான். முதலியாரிடம் மன்னிப்புக் கேட்டு, மீண்டும்பொருட்களை ஒப்படைத்தான்.




## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- ❖ 1613-இலண்டனில் குளோப் நாடக அரங்கு தீக்கிரையானது.
- ❖ 1786-அலெக்சாண்டர் மாக்டொனெல் மற்றும் 500 கத்தோலிக்கர்கள் ஸ்கொட்லாந்தில் இருந்து சென்று ஒண்டாரியோவின் கிளெங்கரி என்ற ஊரில் குடியேறினர்.
- ❖ 1814-மெதடிஸ்த திருச்சபையைச் சேர்ந்த ஆறு மதப்பரப்புனர்கள் இலங்கையின் காலி நகரை வந்தடைந்தனர்.
- ❖ 1864-கனடா, கியூபெக்கில் இடம்பெற்ற தொடருந்து விபத்தில் 99 பேர் கொல்லப்பட்டனர்.
- ❖ 1895-சாரின் உருசியப் அரசின் படைக்குக் கட்டாய ஆளெடுக்கும் நடவடிக்கையைக் கண்டித்து டுகோபார் தமது ஆயுதங்களை எரித்தனர்.
- ❖ 1914-சைபீரியாவில் கிரிகோரி ரஸ்புடின் மீது கொலை முயற்சி நடந்தது.
- ❖ 1975-ஸ்டீவ் வாஸ்னியாக் முதலாவது அப்பிள் ஐ கணினியைச் சோதித்தார்.
- ❖ 1976-சீசெல்சு ஐக்கிய இராச்சியத்திடம் இருந்து விடுதலை பெற்றது.
- ❖ 1995-அட்லாண்டிசு விண்ணோடம் உருசிய விண்வெளி நிலையம் மீருடன் முதல் தடவையாக இணைந்தது.
- ❖ 1995-தென் கொரியாவின் சியோல் நகரில் பல்பொருள் அங்காடி ஒன்று இடிந்து வீழ்ந்ததில் 501 பேர் கொல்லப்பட்டனர். 937 பேர் காயமடைந்தனர்.
- ❖ 2006-குவாண்டானமோ விரிகுடா தடுப்பு முகாம் கைதிகளை இராணுவ நீதிமன்றத்தில் விசாரணை செய்ய அமெரிக்க அரசுத் தலைவர் ஜார்ஜ் வாக்கர் புஷ்ஷின் திட்டத்தை ஐக்கிய அமெரிக்க உச்ச நீதிமன்றம் தடை செய்தது.
- ❖ 2007-அப்பிள் நிறுவனம் தனது முதலாவது ஐ-போன் செல்லிடப்பேசியை அறிமுகப்படுத்தியது.

### பிறப்புகள்

- ❖ 1868-ஜார்ஜ் எல்லேரி ஹேல், அமெரிக்க வானியலாளர், ஊடகவியலாளர் (இ. 1938)
- ❖ 1893-பிரசந்தா சந்திரா மகாலனோபிசு, இந்தியப் பொருளியலாளர் (இ. 1972)
- ❖ 1909-தாமசு பறோ, ஆங்கிலேய இந்தியவியலாளர், சமஸ்கிருதப் பேராசிரியர் (இ. 1986)
- ❖ 1925-ஆர்.எஸ்.மனோகர், தமிழக நாடக, திரைப்பட நடிகர் (இ. 2006)
- ❖ 1925-ஜார்ஜியோ நபோலிடானோ, இத்தாலியின் 11 ஆவது அரசுத்தலைவர்
- ❖ 1945-சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க, இலங்கையின் 5 ஆவது அரசுத்தலைவர்
- ❖ 1990-ஹரீஷ் கல்யாண், தென்னிந்தியத் திரைப்பட நடிகர்

### இறப்புகள்

- ❖ 1966-தாமோதர் தர்மானந்தா கோசாம்பி, இந்திய மார்க்சியப் புலமையாளர், கணிதவியலாளர் (பி. 1907)
- ❖ 2009-வ.ஐ. சுப்பிரமணியம், தமிழக மொழியியலாளர் (பி. 1926)
- ❖ 2017-சூலமங்கலம் ராஜலட்சுமி, தமிழக கர்நாடக இசைப் பாடகி (பி. 1937)

### சிறப்பு நாள்

- ❖ பொறியாளர் நாள் (எக்குவடோர்)
- ❖ துறைத் தேர்ந்தோர் நாள் (நெதர்லாந்து)
- ❖ விடுதலை நாள் (ஐக்கிய இராச்சியத்திடம் இருந்து சீசெல்சு விடுதலை, 1976)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | கொடிகாமம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 70 | 80 | 80 | 120 |
| உருளைக்கிழங்கு | 110 | 130 | 130 | 140 | 120 |
| பச்சைமிளகாய் | 400 | 320 | 350 | 500 | 300 |
| தக்காளி | 320 | 240 | 250 | 280 | 250 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 35 | 30 | 40 | 40 |
| கோவா | 150 | 90 | 200 | 200 | 160 |
| கரட் | 250 | 220 | 250 | 400 | 280 |
| பூசணி | 40 | 20 | 40 | 40 | 30 |
| புடோல் | 120 | 120 | 120 | 120 | 130 |
| வாழைக்காய் | 80 | 35 | 80 | 80 | 60 |
| சின்ன வெங்காயம் | 120 | 110 | 140 | 160 | 140 |
| பெரிய வெங்காயம் | 100 | 105 | 120 | 120 | 120 |
| பாகற்காய் | 400 | 300 | 300 | 320 | 300 |
| வெண்டிக்காய் | 140 | 140 | 120 | 120 | 100 |
| கருணைக்கிழங்கு | 100 | 80 | 120 | 120 | 80 |
| பயற்றங்காய் | 200 | 130 | 160 | 140 | 200 |
| லீக்ஸ் | 300 | 240 | 280 | 300 | 300 |
| பீற்றூட் | 200 | 110 | 180 | 200 | 120 |
| கறிமிளகாய் | 250 | 120 | 200 | 400 | 200 |
| முருங்கைக்காய் | 600 | 440 | 600 | 600 | 800 |
| போஞ்சி | 320 | — | 320 | 320 | 260 |
| கத்தரிதம்பள்ள | 100 | 55 | 70 | 80 | 110 |
| கீரை - 1பிடி | 40 | 30 | 40 | 30 | 30 |
| தேசிக்காய் | 100 | 70 | 80 | 80 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 25-50 | 70 | 30-70 | 70 |
| இராசவள்ளி | 200 | 130 | 200 | 200 | 200 |
| வெங்காயப்பூ | 150 | — | 280 | 280 | 200 |
| முள்ளங்கி | [illegible] | 45 | 120 | 160 | 100 |
| பொன்னாங்காணி | 50 | 10 | 50 | 40 | 35 |
| வல்லாரை | 20 | 10 | 20 | 20 | 40 |
| [illegible] | [illegible] | 130 | 60 | 80 | [illegible] |

பாட்டு வாய்ச்சால் கிழவியும் பாடுவாள்...
~ தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk


## யாழ்.பல்கலைக்கழக நுழைவாயிலில் நந்தியை மீண்டும் வையுங்கள்

நேற்று முன்தினம் 27ஆம் திகதி பௌர்ணமி நாள். இந்நாளில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் முழுவதும் வெளிச்சக்கூடுகள் கட்டப் பட்டு பௌத்த சிங்கள மாணவர்கள் பொசன் பண்டிகையைக் கொண்டாடினர்.

பௌத்த சிங்கள மாணவர்கள் பொசன் பண்டிகையைக் கொண்டாடுவது தொடர்பில் எமக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை.

ஆனால் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகத்தில் அமைந்துள்ள பார்வதி பரமேஸ் வரப் பெருமானின் கோயிலுக்கு நேராக, கோயி லின் நுழைவாயில் அமைந்துள்ள இடமெல் லாம் வெளிச்சக்கூடுகளைக் கட்டி பௌத்த அடையாளங்களைக் காட்சிப்படுத்தியமை இந் துக்களை நிந்திக்கும் செயல் என்பது மறுக்க முடியாத உண்மை.

குறித்தொதுக்கப்பட்ட இடத்தில், வெளிச்சக் கூடுகளைக் கட்டி பொசன் பண்டிகையை அனுஷ்டிப்பது ஏற்புடையது.

ஆனால் அவ்வாறு செய்யாமல், பார்வதி பரமேஸ்வரன் கோயிலுக்கு முன்பாக பௌத்த மத அடையாளங்களைக் கட்டித் தொங்க விடு வதும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகம் முழுவதும் பௌத்த மயமாக்குவதும் ஏதோ வொரு உள்நோக்கம் கருதிய செயல் என்றே கூறவேண்டும்.

அதாவது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தில் பௌத்த அடையாளத்தை ஏற்படுத்துவத னூடாக தமிழ் – சிங்கள மாணவர்களிடையே மோதலை உண்டு பண்ணுவது, அதனூடு தமிழ் மாணவர்களைக் கைது செய்து சிறையில் அடைப்பது, படையினர் யாழ்ப்பாணத்தில் தொடர்ந்தும் நிலை கொண்டிருக்க வேண்டும் என்பதை உலக நாடுகளுக்கு எடுத்துக் கூறு வது என்பதன் அடிப்படையில் மேற்குறித்த நிகழ்வுகள் நடத்தப்படுகின்றன.

இத்தகைய செயல்களை யாழ்ப்பாணப் பல் கலைக்கழக நிர்வாகம் முற்றுமுழுதாகத் தடுக்க வேண்டும்.

அதேநேரம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நுழைவாயிலில் இருந்த இரண்டு நந்திகளை மீளவும் வைப்பதற்கு பல்கலைக்கழக நிர் வாகம் நடவடிக்கை எடுப்பது கட்டாயமானது.

இவ்விடயத்தில் யாழ்.பல்கலைக்கழகப் புத்தி ஜீவிகள் அழுத்தம் கொடுக்க வேண்டும்.

இதைச் செய்வதிலிருந்து விலகுவது என்ற முடிவை பல்கலைக்கழகப் புத்திஜீவிகள் எடுத் துக் கொண்டால்,

இந்து அமைப்புகள் நீதிமன்றத்தை நாடுதல் அல்லது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் முன் பாக தொடர் ஆர்ப்பாட்டத்தை மேற்கொள்ளு தல் என்ற தீர்மானத்துக்கு வந்தாக வேண்டும்.

சைவப் பெருவள்ளல் சேர் பொன்.இராம நாதனால் ஈந்தளிக்கப்பட்ட யாழ்ப்பாணப் பல் கலைக்கழக வளாகத்தின் நுழைவாயிலில் இருந்த இரண்டு நந்திகளும் அகற்றப்பட்டதன் பின்னணியில் சைவ அடையாளத்தை அகற் றுதல் என்ற நோக்கம் இருக்கிறது என்பது தெட்டத் தெளிவாகிறது.

இதன் ஒரு கட்டமே நேற்று முன்தினம் யாழ்ப் பாணப் பல்கலைக்கழக வளாகம் முழுவதிலும் பொசன் வெளிச்சக்கூடுகள் பறந்தன.

# காட்டுப்புலம் மாணவி படுகொலைக்கு வட மாகாண அதிபர் சங்கம் கண்டனம்

காட்டுப்புலம் அ.த.க பாட சாலை மாணவி சிவனேஸ் வரன் றெஜீனா கொலையை வடக்கு மாகாண அதிபர்கள் சங்கம் வன்மையாகக் கண் டித்துள்ளது.

இவ்வாறான கொலை கள் வடக்கு மாகாணத்தில் தொடர்ந்து நடைபெறுவது கண்டனத்துக்குரியதே.

நீதித்துறை இவ்வாறான செயல்களுடன் தொடர்புடை யவர்களை தண்டிப்பதன் மூலம் எதிர்காலத்தில் இவ் வாறான செயல்கள் நடை பெறாமல் தடுக்கலாம் என் பது எமது நம்பிக்கை.

யுத்தத்தின் பின்னர் வடக் கில் அதிகரித்த போதைப் பாவனை இளைஞர்களை தவறான வழிக்கு இட்டுச் செல்வதை யாவரும் மறுக்க முடியாது. எமது சிறார்கள் அச்சமின்றிப் பாடசாலை சென்று கற்கக்கூடிய சூழல் உருவாக்கப்பட வேண்டும்.

இவ்வாறான செயல்களி னால் எமது கல்வி சிதைக்கப் படுகிறது. எமது இனம் அழி வுப்பாதையில் செல்கிறதா? இல்லை திட்டமிட்டு அழிக்கப் படுகிறதா? என எண்ணத் தோன்றுகிறது.

இவ்விடயத்தில் நீதித் துறையின் செயற்பாடு காத் திரமானதாக அமைய வேண் டும். இனியும் இவ்வாறான செயல்கள் எமது பிரதேசத் தில் நடைபெறுவதை நாம் ஒவ்வொருவரும் அனுமதி க்க முடியாது என நாம் உறுதி எடுத்துக் கொள்வோம்.

ஆகவே நீதித்துறை விரைந்து செயற்பட்டு குற்ற வாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் என வட மாகாண அதிபர்கள் சங்கம் கேட்டுக் கொண்டுள்ளது. (ம)

## தேர்தல் செலவினங்களை குறைக்க விசேட சட்டமூலம்

(கொழும்பு)

தேர்தல் பிரசார நடவடிக் கையின் போது ஏற்படுகின்ற செலவினங்களை குறைத் துக் கொள்வது தொடர்பி லான சட்டமூலமொன்றை தயாரிக்கும் பணிகள் ஆரம் பிக்கப்பட்டுள்ளதாக சட்ட வல்லுநர் தீபானி குமார ஜீவ தெரிவித்துள்ளார்.

தேர்தல் பிரசார நடவடிக் கையின் போது ஏற்படுகின்ற செலவினங்களை குறைத் துக் கொள்வது தொடர்பி லான சட்டமூலமொன்றை தயாரிக்கும் பணிகள் சட்ட வாக்க திணைக்களத்தி னால் ஆரம்பிக்கப்பட்டுள் ளது.

இதற்கான ஆரம்பகட்ட சட்ட வரைபுகள் தேசிய தேர் தல்கள் ஆணைக்குழுவினூ டாக வழங்கப்பட்டுள்ளது டன், இந்த சட்டமூலத்தை தயாரிப்பதற்கான அமைச் சரவை அனுமதியும் கிடை த்துள்ளது.

அரசியல் கட்சிகள், தேர் தல் கண்காணிப்பாளர்கள் மற்றும் சிவில் அமைப்புக்க ளின் ஆலோசனைகள் மற் றும் பரிந்துரைகளை உள் ளடக்கி தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவினால் தேர் தல் செயற்பாடுகளுக்கான செலவினங்களை வரை யறுப்பதற்காகவே மேற்படி சட்டமூலம் தயாரிக்கப்பட்டு ள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## 'எரிந்தது நூலகமா? இல்லை- தாயகம்' 'எரியும் நினைவுகள்' ஆவணப்படம் திரையிடல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை அரசின் திட்ட மிட்ட அடையாள இன அழிப் பின் ஒரு அங்கமாக யாழ்ப் பாணம் பொது நூலகம் எரிக் கப்பட்டதன் 37ஆம் ஆண்டு நினைவை முன்னிட்டு 'எரிந் தது நூலகமா? இல்லை - தாயகம்' என்ற நூல் அறி முகமும், "எரியும் நினைவு கள்" ஆவணப்படம் திரை யிடலும் எதிர்வரும் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடை பெறும்.

அனைத்துலக மனித உரிமை சங்கத்தின் ஏற்பாட் டில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு ஏற் பாட்டாளர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். (இ-9)

## உதயங்க நாடு திரும்புவார்
### மகிந்த நம்பிக்கை

(கொழும்பு)

இலங்கை அரசினால் தேடப்பட்டு வரும் நபரான ரஷ்யாவிற்கான இலங்கை யின் முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்க தனது வேண்டுகோளின் பேரில் ஒரு மாத காலத்தில் நாடு திரும்புவார் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கதிர்காமம் கிரி விகா ரையில் மத வழிபாட்டில் நேற்று ஈடுபட்ட பின்னர் ஊட கவியலாளர்களை சந்தித்த போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, உதயங்க வீரதுங்கவிற்கு நாடு திரும்பு மாறு வேண்டுகோள் விடுத் துள்ளார். உதயங்க வீரதுங்க விற்கு மிக் போர் விமான கொள்வனவில் ஊழலில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட் டின் பேரில் நீதிமன்றம் பிடி யாணை பிறப்பித்துள்ளது. உதயங்க வீரதுங்கவிற்கு எதிராக இன்டர்போல் சிவப்பு அட்டை பிறப்பிக்கப்பட்ட போதும் வீரதுங்கவை நாட் டிற்குக் கொண்டுவரவில்லை.

மேலும் தேர்தல் அச்சம் காரணமாக கோத்தபாய ராஜ பக்ஷவிற்கு அரசாங்கம் பங் கம் விளைவிப்பதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)



## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### மரியாதை

மற்றவர்கள் உங்களுக்கு மரியாதை கொடுக்கிறார்கள் என்றால் உங்களிடம் நல்ல குணங்கள் உள்ளன என்பதால் அல்ல. அது அவர்களுடைய பெருந் தன்மை யால். நீங்கள் இறைவன் எல்லாம் வல்லவர், பெரியவர் என்று சொன்னால், நீங்கள் எல்லாம் வல்லவர், பெரியவர் என்று அர்த்தம். ஏற்கனவே எல்லாம் வல்லவராயும் பெரியவராயும் உள்ளார். நீங்கள் அவர் எத்தகையவர் என்று சொல்வதால் அது இறைவனை ஒன்றும் பாதிப்ப தில்லை.

நீங்கள் மற்றவர்களுக்கு மரியாதை கொடுக்கும் போது, அது உங்கள் பெருந்தன்மையைக் காட்டுகிறது. எனினும் உலகில் பலருக்கு நீங்கள் மரியாதை கொடுப்பதில்லை என்றால் அந்தளவிற்கு உங்களுடைய மதிப்பு குறைவு என்பது பொருள். நீங்கள் ஒவ்வொருவருக்கும் மரியாதை கொடுத்தால் அந்தளவிற்கு உங்களுடைய மதிப்பு அதிகம். அறிவாளி என்பவர் ஒவ்வொருவரையும் மதிக்கிறார்.

கேள்வி: ஆனால், குருதேவ, நாங்கள் ஒரு தவிரவா திக்கு மரியாதை கொடுக்க முடியாது!

ஸ்ரீஸ்ரீ: நீ ஒரு தீவிரவாதிக்கும் மரியாதை தரவேண் டும். ஏனென்றால் அவன் தவிரவாதியாயிருப்பதால் அவனுக்கு எவ்வித நன்மையும் இல்லையென்றாலும் உனக்குச் சரியான பாதையைக் காட்டுகிறான்.

நேர்த்தியான மனச்சாட்சியின் (Consaiqusners) குணமே மரியாதை கொடுப்பதாகும். ஆன்மாவிற்கு மரி யாதை செலுத்துவது என்றால் நம்பிக்கை என்பதாகும். நம்பிக்கை எனும்போது ஒளிவு மறைவற்ற வெளிப்படை.

நீங்கள் ஒளிவு மறைவின்றி வெளிப்படையாக மலர்ந்தால், நீங்கள் எனக்கு நெருக்கமாக இருக்கிறீர்கள்!

நீங்கள் எனக்கு நெருக்கமாக இருந்தால் நீங்கள் மலராமல் இருக்கமுடியாது.



## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### எந்தெந்த திதிகளில் என்ன செய்தால் புண்ணியம் கிடைக்கும்?

திதி- சந்திரனின் நாளாகும். மொத்தம் முப்பது திதிகள் உண்டு. அமாவாசையை அடுத்து சதுர்த்தசி வரையிலான 15 திதிகள் வளர் பிறை (சுக்லபட்சம்) காலமாகும். பௌர்ணமியை அடுத்து சதுர்த்தசி வரையிலான 15 திதிகள் தேய்பிறை காலமாகும் (கிருஷ்ண பட்சம்) ஆகும்.

வளர்பிறை காலத்தில் குறிப்பிட்ட திதியின் அதி தேவதையை வணங்கிவிட்டு சுப காரியங்களைச் செய்வது விசேஷமாகும். தேய் பிறை காலத்தில் சுபகாரியங்கள் செய்வதானால் பஞ்சமங்களை செய்வது உத்தமமாகும்.

பிரதமை: வளர்பிறை மற்றும் தேய்பிறை பிரதமை தினம் வாஸ்து காரியங்கள் செய்வதற்கும், திருமணம் செய்வதற்கும் உகந்ததாகும். அக்னி சம்பந்தமான காரியங்களிலும் ஈடுபடலாம். மதச் சடங்குகளை மேற்கொள்ளலாம். இந்த திதிக்கு அதிதேவதை அக்னி. (தொடரும்)

## இஸ்லாம் ஆன்மீக சிந்தனை

### சமாதானமாக வாழுங்கள்

✦ எவன், ஒருவனின் மானத்தை வெளிப்படுத்துகி றானோ, அவனுடைய மானத்தை அல்லாஹ் வெளிப் படுத்துகின்றான்.

✦ எவன் ஒருவனைக் காட்டிக் கொடுக்கிறானோ, அவனை இறைவன் காட்டிக் கொடுக்கின்றான்.

✦ யாரின் முகத்திலும் கையால் அறையாதீர்கள். முகத்தை அல்லாஹ் தனது கையால் படைத்து இருக் கின்றான்.

✦ தொழுகையை அதன் நேரத்தில் தொழுவதில் விரைந்து கொள்ளுங்கள்.

✦ கைப்பொருள் கைவிட்டுப் போவதற்கு முன் தான தருமங்கள் கொடுப்பதில் விரைந்து கொள்ளுங்கள்.


✦ வயது வந்த பெண்மக்களை திருமணம் செய்து வைப்பதில் விரைந்து கொள்ளுங்கள்.

✦ மரணம் வரும் முன்பு மறுமைக்குரிய நற்செயல் ஆற்றுவதில் விரைந்து கொள்ளுங்கள்.

✦ மனச்சஞ்சலம் உண்டாவதற்கு முன் உங்களுக் கிடையே ஏற்படும் சச்சரவுகளை சமாதானம் மூலம் தீர்த்துக் கொள்ள முயலுங்கள்.

## புட்சால் உதைபந்தாட்டம்

# சென்.பற்றிசை வீழ்த்தி ஸ்ரீமுருகன் சம்பியன்





அகில இலங்கை ரீதியில் இளவாலை சென்.ஹென்றீஸ் கல்லூரியினால் 2 ஆவது வருடமாக ஏற்பாடு செய்யப்பட்ட புட்சால் உதைபந்தாட்டத் தொடர் கடந்த 16 ஆம் திகதி நடைபெற்றது.

இத்தொடரில் 16 வயதுப்பிரிவில் பங்குபற்றிய ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலய அணியினர் இறுதிப் போட்டியில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியை 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சாம்பியனானது.

ஆட்டநாயக்னாக சமீதன் தெரிவுசெய்யப்பட்டார்.

தொடரின் அனைத்துப் போட்டிகளிலும் மிகச் சிறப்பாகச் செயற்பட்ட ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலய அணி கிண்ணத்தை வென்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளது. (க)




தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஊடாக மாவட்ட மட்ட இளைஞர் கழகங்களுக்கு இடையிலான வலைப்பந்தாட்ட போட்டியில் சங்கானை பிரதேச இளைஞர் சம்மேளன பெண்கள் அணி சம்பியனாக வெற்றிவாகை சூடியது. பதினைந்து பிரதேச சம்மேளனம் கலந்து கொண்ட இச்சுற்றில் வெற்றி பெற்று தேசிய மட்டத்திற்குத் தெரிவாகியுள்ளது. (க)




மாகாணமட்ட பாடசாலைகளுக்கிடையிலான 17 வயதிற்குட்பட்ட ஆண்களுக்கான கபடிப் போட்டியில் கிளிநொச்சி கோணாவில் மகாவித்தியாலய அணி மூன்றாமிடத்தைப் பெற்றது. பாடசாலை வரலாற்றில் முதன் முதலாக கபடி அணி மாகாண மட்டத்தில் வெற்றியீட்டியமை குறிப்பிடத்தக்க விடயமாகும். (க)

# அரியாலை சரஸ்வதி ச.சமூக நிலையத்தின் அரை இறுதி, இறுதிப் போட்டிகள்

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 99 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட வடக்கின் இளவரசன் யார் துடுப்பாட்டத் தொடரின் அரையிறுதி இறுதிப் போட்டிகள் எதிர்வரும் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அரியாலை கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அரையிறுதிப் போட்டியில் இணுவில் கலைஒளி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து எதிர்நொதேன் விளையாட்டுக்கழகமும் கார்மேல் போய்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து அளவெட்டி மத்தி விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளது.

23 வயதிற்குட்பட்டவர்களுக்கான துடுப்பாட்டப் போட்டிகள் இறுதிப் போட்டியில் மல்லாகம் ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கைதடி றோயல் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. (க)

# செல்ரன் அபாரம் கார்மேலிடம் கிண்ணம்



உடுவில் வை.எவ்.சி. விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்பட்ட அணிக்கு 8 பேர் 6 ஓவர்கள் கொண்ட மென்பந்தாட்ட கிரிக்கெட் போட்டியில் ஜி.பி.எஸ். அணியினை வீழ்த்தி கிண்ணம் வென்றது கார்மேல் போய்ஸ் அணி.

காலிறுதியில் ஸ்ரீமுருகன் அணியினையும் அரையிறுதியில் ஸ்பேஸ் அணியினையும் வீழ்த்தி இறுதிக்குள் நுழைந்த கார்மேல் போய்ஸ் அணி இறுதியில் ஜி.பி.எஸ்.அணியினை எதிர்கொண்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஜி.பி.எஸ். அணி நிர்ணயிக்கப்பட்ட ஓவர்கள் நிறைவில் 5 இலக்கினை இழந்து 52 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் இசான் 20, பாபு 10 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் அலன் 2, தீபன், சுறேந்திரன், றகீம் ஆகியோர் தலா ஒவ்வொரு இலக்கினை கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கார்மேல் போய்ஸ் 4.3 பந்து பரிமாற்றத்தில் 2 இலக்கினை இழந்து வெற்றிபெற்றது.

துடுப்பாட்டத்தில் செல்ரன் ஆட்டமிழக்காமல் 25, அஜன் 15 ஓட்டங்களைப் பெற்றனர், போட்டியின் ஆட்ட நாயகனாக செல்ரன் தெரிவு செய்யப்பட்டார். (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்







தெல்லிப்பழை பிரதேச இளைஞர் சம்மேளனத்தின் வருடாந்த விளையாட்டுப் போட்டிகள் மகாஜனாக் கல்லூரியில் அண்மையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வு சம்மேளனத் தலைவர் வஜிந்தன் தலைமையில் இடம்பெற்றது. நிகழ்வில் இளைஞர் சேவை அதிகாரி கௌதமி, பிரதம விருந்தனராக தெல்லிப்பழை பிரதேச செயலர், யாழ்.மாவட்ட இளைஞர் கழக சம்மேளனத் தலைவர் மற்றும் பாடசாலை அதிபர்கள், ரசிகர்கள், நற்பணி மன்றத்தின் தலைவர் மற்றும் விளையாட்டு வீரர்கள், இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர் உட்பட பலரும் கலந்து சிறப்பித்தனர். (க)

## ஆளுமையற்ற தவிசாளர்...

த்துக்கு தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினரை கொண்டுவர வேண்டும்.

இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர் சபையில் நேற்று வாதாடினார்.

இதனால் கரவெட்டி பிரதேச சபையின் நேற்றைய அமர்வின் முக்கால் பகுதி தவிசாளருக்கும் உறுப்பினர்களுக்கும் இடையிலான கருத்து மோதலாக இருந்தது.

அத்துடன் சபை பிற்பகல் 2.30 மணியுடன் முடிவுக்கு வந்தது.

கரவெட்டி (வடமராட்சி தெற்கு மேற்கு) பிரதேச சபை அமர்வு நேற்று வியாழக் கிழமை முற்பகல் 10 மணிக்கு பிரதேச சபை தவிசாளர் தலைமையில் ஆரம்பமானது.

பிரதேச அபிவிருத்தி தொடர்பாக உறுப்பினர்கள் தமது கருத்துக்களை முன்வைத்து உரையாடினர்.

அத்துடன், கரவெட்டி பிரதேச செயலகம், பிரதேச சபையுடன் இணைந்து செயலாற்றுவதில்லை என்ற குற்றச்சாட்டை தமிழ் தேசிய கூட்டமைப்பின் உறுப்பினர் முன்வைத்தார்.

அது தொடர்பாக உரிய தரப்புகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக தவிசாளர் எடுத்துரைத்தார்.

நெல்லியடி மீன் சந்தையை அபிவிருத்தி செய்யவேண்டிய தேவையுள்ளது என தவிசாளர் சபைக்கு தெரியப்படுத்தினார். அந்த விடயத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர் தவிசாளருடன் கருத்து முரண்பட்டார்.

கூட்டமைப்பின் தலைவர்கள் கொழும்பில் சிங்கள கட்சிகளுக்கு வால் பிடிக்கின்றனர் என கட்சியை இழுத்து தவிசாளரை வம்புக்கிழுத்தார்.

எமது தலைமையைப் பற்றிப் பேசுவதற்கு நீர் யார்? என தவிசாளர் கேள்வி எழுப்பினார்.

உறுப்பினரின் தர்க்கத்துக்கு தவிசாளரும் கருத்துக்களை வீசினார். அதனால் சபையிலிருந்து வெளியேறிய உறுப்பினர் சில நிமிடங்களில் மீளவும் சபைக்குள் வந்து அமர்ந்தார்.

ஆளுமையற்ற தவிசாளர் பதவி விலக வேண்டும். தமிழ் தேசிய மக்கள் முன்னணி உறுப்பினரை தவிசாளராக நாங்கள் நியமிக்கின்றோம் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர் தவிசாளரிடம் கூறினார்.

என்னுடைய ஆளுமை எனக்குத் தெரியும். உமக்கு விளக்கமில்லாவிடின் வாரும் நான் வகுப்பு எடுக்கிறேன். என்னைப் பதவியிலிருந்து விலகுமாறு கேட்க நீர் யார்? என் மீது நடவடிக்கை எடுக்க எனது கட்சித்தலைமை இருக்கிறது என தவிசாளர் ஒருமையில் பதிலளித்தார்.

இதனால் இருவருக்கும் இடையே கருத்து மோதல் உச்சத்துக்கு வந்தது.

தமிழ் தேசிய மக்கள் முன்னணி உறுப்பினர் சிவராசா முன்மொழிந்த இன அழிப்பு தீர்மானம் மட்டுமே சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட நிலையில் நேற்றைய சபை அமர்வு நிறைவடைந்தது. (ம-60)

## துரிதமாக நடத்து...

ரையாடல் பாராளுமன்ற கட்டடத்தொகுதியில் நேற்று இடம்பெற்றது.

சபாநாயகர் கரு ஜயசூரிய, மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சர், எல்லை நிர்ணய ஆணைக்குழவின் தலைவர், தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் ஆகியோர் கலந்துரையாடலில் கலந்து கொண்டனர்.

தேர்தலுடன் தொடர்புடைய முக்கிய விடயங்கள் பற்றி இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

மாகாணசபைத் தேர்தலை பழைய மற்றும் புதிய முறைகளின் கீழ் நடத்துவது பற்றியும், எல்லை நிர்ணயம் தொடர்பாகவும், இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

மாகாணசபைத் தேர்தல் தொடர்பாக அடுத்த மாதம் 5 ஆம் திகதி பாராளுமன்ற ஒத்திவைப்பு பிரேரணை மீதான விவாதத்தை நடத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் சபாநாயகர் கரு ஜயசூரிய இதன்போது தெரிவித்தார்.

இதன்போது தெரிவிக்கப்படும் கருத்துக்களைக் கவனத்தில் கொள்ளுமாறு எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் தலைவரிடம் சபாநாயகர் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

## படகுகளை விடுவிப்பதற்கு...

வட பகுதி மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். இந் நிலையில் அரசாங்கம் இந்திய இழுவைப் படகுகள் விடுவிப்பு என்பது எங்களால் நினைத்துப் பார்க்க முடியாத ஒரு விடயம்.

இலங்கை அரசாங்கத்தின் கையகத்தில் சுமார் 200 இந்திய இழுவைப் படகுகள் உள்ளன. இந்த இழுவைப் படகுகளை இலங்கை அரசாங்கம் கையகப்படுத்துவது என்றால் சுமார் 2 மில்லியன் ரூபா செலவு செய்யப்பட்டிருக்கும். இந்தப் பணம் எங்களுடைய வரிப் பணமாகும். எனவே இந்திய இழுவைப்படகுகளை விடுவிப்பதற்கு வடபகுதி மீனவர்களாகிய நாங்கள் எதிர்ப்புக்களைத் தெரிவிக்கின்றோம்.

அத்துடன் மீன்பிடி அமைச்சிடம் பல்வேறு கோரிக்கைகளை பல தடவை முன்வைத்துள்ளோம். எனினும் எவருமே வட பகுதி கடற்றொழிலாளர்கள் தொடர்பில் அக்கறை காட்டவில்லை.

எனவே வடபகுதி மீனவர்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப்படாது இந்திய இழுவைப்படகுகள் விடுவிக்கப்படுமானால் வட பகுதி மீனவர்கள் வீதிகளில் இறங்கி தொடர் போராட்டத்தை முன்னெடுப்பதுடன் அரச திணைக்களங்களை முடக்குவோம் என்றும் குறிப்பிட்டுள்ளது. (ம)

## விலையை குறைக்க...

வாழ்க்கைச் செலவினக் குழு இந்தத் தீர்மானத்தை மேற்கொண்டுள்ளது.

அமைச்சர்களான மலிக்க சமரவிக்கிரம, றிஷாத் பதியுதீன், விஜித் விஜயமுனி சொய்ஸா ஆகியோரின் பங்கேற்புடன் இந்தக் குழு கூடியது. உலக சந்தையில் அமுலில் உள்ள விலைக்கு அமைவாக உள்ளூர் சந்தையிலும் காஸின் விலை நிர்ணயிக்கப்பட இருக்கின்றது.

இதற்கு அமைவாகவே காஸின் விலையைக் குறைக்க வாழ்க்கை செலவினக் குழு தீர்மானித்ததாக கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சின் பணிப்பாளர் இந்திகா ரணதுங்க தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் சில நாட்களில் நுகர்வோர் அதிகார சபை காஸ் சிலிண்டருக்கான விலையை அறிவிக்கவுள்ளது. (ம)

## பகுதி நேர கடையடைப்பு...

சுழிபுரம் காட்டுப்புலம் பாடசாலை மாணவி கடந்த திங்கட்கிழமை கொடூரமான முறையில் பாலியல் கொடுமைக்கு உட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டிருந்தார்.

போதைப்பொருட் பாவனை வடக்கில் அதிகரித்துள்ள காரணத்தினால் இவ்வாறான படுகொலைகள் தொடர்ச்சியாக இடம்பெற்ற வண்ணம் உள்ளது. போதைப்பொருள கடத்தலை தடுப்பதற்கு பொலிஸார் மற்றும் சட்டத்துறையினர் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்தியும் சிறுவர் துஷ்பிரயோகங்களுக்கு முற்றுப் புள்ளி வைக்கும் வகையில் குற்றவாளிகள் கடுமையாக தண்டிக்கப்பட வேண்டும் என கோரியும் வட மாகாணம் தழுவிய பகிஷ்கரிப்பு முன்னெடுக்கப்படவுள்ளது.

சிறுமி றெஜினாவின் படுகொலையுடன் சம்பந்தப்பட்ட அனைவரும் உடனடியாக தண்டிக்கப்பட வேண்டும் என்றும் பொலிஸார் அசமந்த போக்காக நடப்பதை கண்டித்து எமது இனத்தை பாதுகாக்க இந்த போராட்டத்துக்கு அனைத்து தரப்பினரும் ஆதரவு தரும்படி காட்டுப்புல பொது அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

இந்த அரைநாள் கடையடைப்பு மற்றும் பகிஷ்கரிப்புக்கு வர்த்தக சங்கத்தினர், போக்குவரத்து துறையினர், சந்தை மற்றும் பொது அமைப்புக்கள் என்பன பொதுமக்களுடன் இணைந்து தமது ஆதரவை வழங்குவதாக அறிவித்துள்ளன. (ம-4,9)

## சிரேஷ்ட பள்ளிக்...

செய்யப்பட்ட சம்பவத்தினை எமது பள்ளிக் கல்வியாளர் ஒன்றியம் வன்மையாகக் கண்டிக்கின்றது.

எமது மண்ணில் தொடர்ச்சியாக இத்தகைய துர்ப்பாக்கிய சம்பவங்கள் நடைபெறுவதையிட்டு கல்விச் சமூகம் அதிர்ச்சியும் ஆழ்ந்த கவலையும் அடைகின்றது.

பெருமையும் கீர்த்தியும் மிக்க எமது தமிழ் சமூகம் இன்று இத்தகைய இழி நிலைமைகளை அடைவதற்கு எமது பிரதேசத்தில் தற்போது என்றுமில்லாதவாறு அதிகரித்துக் காணப்படும் போதைவஸ்துப் பாவனையும் அதனைக் கட்டுப்படுத்தும் அமைப்புகளின் பலவீனங்களுமே காரணமாக இருக்கின்றன.

கல்வி பொருளாதார நிலைமைகளில் பின் தங்கியுள்ள இது போன்ற பிரதேசங்களில் இவ்வாறான கொடூர சம்பவங்கள் நடைபெறுவது இவ்வாறான சமூகங்களின் முன்னேற்றத்தை மேலும் பின்தள்ளுவனவாகவே அமையும்.

இன்றைய இந்நிலைமைகள் மீண்டும் ஏற்படாதிருக்க எமது சமூக அமைப்புக்கள் விழிப்புடன் ஒருங்கிணைந்து செயற்பட வேண்டியது காலத்தின் தேவையாகும். மதத்தலைவர்கள் புத்திஜீவிகள், சமூக அமைப்புக்கள், சட்டத்துறையினர் அரசியலாளர்கள் என அனைவரும் ஒன்றிணைந்து இக்கொடூரக் கொலைக்கு எதிராக குரல் கொடுப்பதன் மூலம் உரிய தரப்பினர் இக் கொலைக்கும் காரணமான குற்றவாளிகளை கண்டறிந்து உயரிய தண்டனை வழங்குவதற்கும் இவ்வாறான கொடூரங்கள் இனிவரும் காலங்களில் நடைபெறா வண்ணம் தடுப்பதற்கும் கண்டிப்பான அழுத்தங்களைப் பிரயோகிக்க வேண்டும் என கேட்டுக்கொள்கின்றோம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# ஒட்டுசுட்டான் ஆயுதம் மீட்பு சம்பவத்தில் அரசியல் தலையீடு-வீரசேகர தெரிவிப்பு

(கொழும்பு)

அண்மையில் ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் விடுதலைப் புலிகளின் சீருடைகள் மற்றும் ஆயுதங்கள் கண்டெடுக்கப்பட்ட சம்பவத்தில் அரசியல் தலையீடு இருந்ததால் ஒரு பெரிய துரோகம் இழைக்கப்பட்டிருப்பதாக ரியர் அட்மிரல் சரத் வீரசேகர கூறியுள்ளார்.

நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் கூறினார்.

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் விடுதலைப் புலிகளின் சீருடைகள் மற்றும் ஆயுதங்கள் கண்டெடுக்கப்பட்ட குறித்த சம்பவத்தில் கைது செய்யப்பட்ட பிரதான சந்தேகநபர் விடுதலைப் புலிகளின் புலனாய்வுப் பிரிவு தலைவர் பொட்டு அம்மானின் டொசி உளவு பிரிவில் பணியாற்றியவர் ஒருவர் என்று அவர் கூறியுள்ளார்.

இர்ாணுவத்தின் ஊடாக சம்பளம் வழங்கப்பட்டு விடுதலைப் புலிகளின் திட்டங்களை அறிந்து கொள்வதற்கான உளவாளிகள் அந்த இயக்கத்திற்கு உள்ளே இன்னும் இருப்பதாக அவர் கூறியுள்ளார்.

இந்த நடவடிக்கையால் அதுபோன்ற ஒரு உளவாளிக்கு துரோகம் இழைத்துள்ளதாகவும், அவர் விளக்கமறியலில் இருந்து வெளியே வந்ததும் கொலை செய்யப்படலாம் என்றும் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர கூறியுள்ளார். (ம)

# டிசம்பர் மாதத்திற்கு முன்பதாக மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படும் சபாநாயகர் கருஜயசூரிய

(கொழும்பு)

மாகாண சபைத் தேர்தலை நடத்துவது குறித்து சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில், நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் நேற்று முற்பகல் விசேட கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் பைஸர் முஸ்தபா, தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய மற்றும் எல்லை நிர்ணய ஆணைக் குழுவின் பிரதிநிதிகள் ஆகியோர் அதில் கலந்து கொண்டனர்.

தேர்தலை நடத்துவது குறித்து நடைமுறையில் உள்ள சிக்கல்கள் தொடர்பில் இதன்போது விரிவாக கலந்துரையாடப்பட்டுள்ளது.

இதன்போது கருத்து வெளியிட்டுள்ள சபாநாயகர் கரு ஜயசூரிய, எதிர்வரும் டிசம்பர் மாதத்திற்கு முன்னதாக தேர்தலை நடத்துவதற்கு அவசியமான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்வதாக தெரிவித்துள்ளார்.

இதேவேளை, மாகாண சபைகள் எல்லை நிர்ணயப் பணிகள் தொடர்பில் எதிர்வரும் 5ஆம் திகதி நாடாளுமன்றத்தில் ஒத்திவைப்பு வேளை பிரேரணை ஒன்று முன்வைக்கப்பட உள்ளது.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர்கள் முன்வைக்கும் கருத்துக்களை எல்லை நிர்ணயப்பணிகளுக்காக பயன்படுத்த உள்ளதாக மாகாண சபைகள் எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார். (ம)

**வேலைக்கு ஆட்கள் தேவை**

லைடன் புடைவை நிலையத்திற்கு 2 பெண் பிள்ளைகள் தேவை.
(வேலை பழகியவர்களும், பழக விரும்புபவர்களும் விரும்பத்தக்கது)
**லைடன் புடைவை நிலையம்**
410, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
(க-3055)



## ஊர்காவற்றுறை...

குறித்த சிப்பாய் நேற்று இரவு கடமையில் இருந்த போது திடீரென தனக்கு தானே துப்பாக்கியால் சுட்டு தனது உயிரை மாய்த்துள்ளார். தவறான முடிவை எடுத்ததற்கான காரணம் எதுவும் இதுவரை தெரியவில்லை என இராணுவத்தரப்பு தெரிவித்துள்ளது. சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (ம-9)


மாபெரும் பொருளியல் கருத்தரங்கு

பிரபல ஆசிரியர்
R.தர்ஷன் (B.B.A Spl in Fm)

இடம்:-
பொருளியற் கல்லூரி
யாழ்ப்பாணம்.

[40 மணித்தியாலங்கள்]
ஆரம்பம்:- 06.07.2018
வெள்ளி காலை 8.30 A.m

✷Part=II -05வினாக்களுக்கான முழுமையான தயார்ப்படுத்தல் (உயர்தர விளக்கத்துடன்)
✷ Part=I -03மாதிரி வினாப்பத்திரங்களும்
Part=II -03மாதிரி வினாப்பத்திரங்களும் செய்விக்கப்படும்.

✷ எதிர்பார்ப்பு வினாக்களைக் கொண்ட வினாவிடை கையேடுகள்.
✷ புள்ளி விபரங்கள், தேசிய கணக்கீட்டின் புதிய வெளிப்படுத்துகை.

2015 ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சையில் மாவட்ட நிலை 1,2
2017 ஆம் ஆண்டு மீண்டும் மாவட்டநிலை 1,2 உட்பட அநேகமான மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்கு தெரிவானவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

Note:-
வெளி மாணவர்களும் பங்கு பற்றலாம்.

வினாப்பத்திரம், கையேடுகள் வரையறுக்கப்பட்ட தொகை அச்சிடப்படவுள்ளதால் உங்கள் அனுமதிகளை 02.07.2018 இற்கு முன்னர் உறுதிப்படுத்திப் பெற்றுக்கொள்ளவும்.
கட்டணம் -1500 ரூபாய்


## வயோதிபப் பெண்...

வார். மானிப்பாய் கல்லூரி ஒழுங்கையில் தனித்து வாழும் முதியவர் ஒருவரை பராமரிப்பதற்கு மேற்படி வயோதிபப்பெண் பணிக்கு அமர்த்தப்பட்டுள்ளார்.

நேற்று காலை குறித்த வீட்டுக்கு இருவர் பிச்சை எடுப்பது போல் வந்து பிச்சை எடுத்து விட்டு சென்றுள்ளனர். பின்னர் மீண்டும் வந்து அந்த வயோதிப பெண்ணை வீட்டின் அறைக்குள் இழுத்து சென்றுள்ளனர்.

குறித்த வயோதிபப் பெண்ணை இழுத்து செல்வதை அயல் வீட்டில் இருக்கும் ஒரு பெண் பார்த்துவிட்டு ஓடிவரும் பொழுது பெண்ணை இழுத்து சென்ற இருவரும் வெளியில் தப்பியோடிவிட்டனர். அறைக்குள் சென்று பார்க்கும் போது கழுத்தறுத்த நிலையில் பெண் சடலமாக காணப்பட்டுள்ளார்.

இறந்த இந்த பெண்மணிக்கு மல்லாகம் நீதிமன்றத்தில் 25 வருடங்களாக நடந்து வந்த காணி வழக்கில் இவருக்கு சாதகமாக தீர்ப்பு வழங்கப்படவுள்ளதாகவும் இதனால் திட்டமிட்டு இந்த கொலை நடந்திருக்கலாம் என்ற கோணத்தில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பாக மக்கள் சந்தேகத்தின் பேரில் ஆனைக்கோட்டைப் பகுதியில் சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடிய மனநோயாளியான ஒருவரை பிடித்து மானிப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளார்கள். (ம-9)

## மானிப்பாயில்...

தூக்கத் தொடங்கியுள்ளதாகவும் வெளியில் சுதந்திரமாக நடமாடுவதற்கு முடியவில்லை என பொதுமக்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

மானிப்பாய் லோட்டஸ் வீதியில் உள்ள வீடொன்றுக்குள் நேற்று அதிகாலை 4 மணிக்கு மோட்டார் சைக்கிள்களில் சென்ற 8 பேர் கொண்ட வாள்வெட்டுக் கும்பல், வீட்டின் கதவை கோடரியால் கொத்தி சேதப்படுத்தியதுடன், வீட்டில் இருந்த சிசிரீவி கமெராவினையும் அடித்து நொறுக்கியுள்ளனர். பின்னர் வீட்டின் முன்னால் நின்றிருந்த மோட்டார் சைக்கிள் மேல் பெற்றோல் குண்டுத் தாக்குதலை மேற்கொண்டு எரித்து சாம்பலாக்கி விட்டு சென்றுள்ளனர்.

பின்னர் மானிப்பாய் உடுவில் வீதியில் உள்ள வீடு ஒன்றுக்குள் புகுந்த வாள்வெட்டு குழுவினர் இளைஞன் ஒருவரை வாளால் வெட்டியுள்ளனர். இளைஞனை வெட்டும் போது அவரது சகோதரி குறுக்கே சென்றதால் அவரையும் வாளால் வெட்டிவிட்டு அந்தக் கும்பல் தப்பிச்சென்றுள்ளது. கை விரல்கள் துண்டாடப்பட்டு படுகாயமடைந்த இருவரும் யாழ் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ம-9)

## புத்துவெட்டுவா...

(வயது 81) என்ற முதியவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கடந்த 23ஆம் திகதி அதிகாலையில் இருந்து, குறித்த முதியவரைக் காணவில்லை என ஐயன்கன்குளம் பொலிஸாரிடம் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து, இராணுவத்தினரும் பொதுமக்களும் இணைந்து நடத்திய தேடுதல் நடவடிக்கையின்போதே, குறித்த முதியவரின் சடலம் மீட்கப்பட்டது. (ம-281)


விற்பனைக்கு

மிகவும் நல்ல நிலையிலுள்ள கொங்கிறீற் கல்லு அறுக்கும் இயந்திரம் விற்பனைக்கு உண்டு.
T.P:- 078 615 5929



விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு




UK- 550 /-Kg
கனடா-900 /-Kg
ஜேர்மனி- 700 /-Kg
நெதர்லாந்து-700 /-Kg

●மானிப்பாய் ●யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ●சாவகச்சேரி ●நெல்லியடி ●பருத்தித்துறை ●வல்வெட்டித்துறை
0768226240
V2 TRAVELS
(C-3011)



பதவி வெற்றிடங்கள்

O/L, A/L படித்தவர்களுக்கு உடனடி வேலைவாய்ப்பு... யாழ் மண்ணில் ஒரு தசாப்தகாலமாக வெற்றிகரமாக இயங்கிவரும் D.N.M.C இன் வடக்கு மற்றும் கிழக்கில் திறக்கப்படவிருக்கும் புதிய கிளைகளுக்கு அர்ப்பணிப்புடன் பணியாற்றக்கூடிய இளைஞர், யுவதிகள் தேவைப்படுகின்றனர். வயதெல்லை 18-30. தகுதிக்கேற்ப சிறந்த வருமானம்

தொடர்புகளுக்கு 0766767620
(சி-3057)



சுத்திகரிப்பாளர் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் நிறுவனம் ஒன்றிற்கு சுத்திகரிப்பு பணி செய்வதற்கு பெண் சுத்திகரிப்பு பணியாளர் தேவை.
(இ)
தொடர்பு:- 070 220 2208



பதவி வெற்றிடங்கள்

பின்வரும் பதவிகளுக்கு பொருத்தமானவர்கள் நேரில் தொடர்பு கொள்ளவும்.
☆ வெப் மெசின் இயக்குநர்கள் [ஆண்கள்]
☆ முகாமைத்துவ உதவியாளர்கள் [பெண்கள்]
சுயவிபரம் அடங்கிய விண்ணப்பத்துடன் நேரில் வருகை தரவும்.
-பொது முகாமையாளர்

வலம்புரி
இல.03, 2ம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம்.
(இ)


## சுற்றி...

கைது செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுழிபுரம் மத்தியில் நேற்று முன்தினம் மாலை நடத்தப்பட்ட தேடுதலில் இந்த கசிப்பு உற்பத்தியிடம் முற்றுகையிடப்பட்டது.

27 லீற்றர் கசிப்பு மீட்கப்பட்டது. கசிப்பை உற்பத்தி செய்தவர் என சந்தேகிக்கப்படும் 42 வயதுடைய ஒருவர் கைது செய்யப்பட்டார்.

நிலத்திலிருந்து 4 அடிக்கு கீழ் பங்கர் அமைக்கப்பட்டு கசிப்பு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அந்தப் பகுதியில் கசிப்பு உற்பத்தி இடம்பெறுவதாக மக்களால் நீண்ட நாள்களாக பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்ட போதிலும் நேற்று முன்தினம்மாலையே அதனை சுற்றிவளைத்து பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர் என மக்களால் தெரிவிக்கப்பட்டது. (ம)


அகில இலங்கைக் கம்பன் கழகம் நடாத்தும்
யாழ். கம்பன் விழா 2018



2018 ஜூன் 29,30
ஜூலை 1 ஆகிய திகதிகளில்
காலை 9.30 மணி:
நல்லூர் கம்பன் கோட்டம்.
மாலை 4.30 மணி:
நல்லூர் ஸ்ரீதுர்க்காதேவி மணிமண்டபம்.

இன்று (29.06.2018) வெள்ளி முதல் நாள் அமர்வு மாலை 4.30 மணி

திருநாள் மங்கலம்

| | |
|---|---|
| மங்கல இசை | திரு.கே.ஆர். சுந்தரமூர்த்தி குழுவினர் |
| மங்கல விளக்கேற்றல் | திரு.எஸ்.பி.சாமி தம்பதியர் (ஸ்தாபகர், தினக்குரல்) |
| கடவுள் வாழ்த்து | திரு.ப.சிவமைந்தன் |
| ஆசியுரை | ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள் (நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்) |
| ஆசியுரை | வண. பேராசிரியர் ஞா.புலேந்திரன் (யாழ். பல்கலைக்கழகம்) |
| ஆசியுரை | அஷ்ஷெய்க் மௌலவி எம்.ஏ.பைஸர் (காசிமி, மதனி) |
| தலைமையுரை | மாண்புமிகு ஜெ.விஸ்வநாதன் ( பெருந்தலைவர், கொழும்புக் கம்பன் கழகம்) |
| தொடக்கவுரை | வைத்தியநிபுணர் வை. மனோமோகன் (இருதய மருத்துவ நிபுணர், அவுஸ்திரேலியா) |
| சிறப்புரை | திரு.சுந்தரம் டிவகலாலா (வட மாகாண ஆளுநரின் இணைப்புச் செயலாளர்) |
| நூல் வெளியீடு | "கம்பனில் விளங்கிடும் விலங்குகள்" |
| இறுவட்டு வெளியீடு | • "2017 யாழ். கம்பன் விழா இறுவட்டு" • "2018 கொழும்புக் கம்பன் விழா இறுவட்டு" |
| முதற்பிரதி பெறுநர் | பேராசிரியர் க.கந்தசாமி<br>டாக்டர் சு.நச்சினார்க்கினியர்<br>பேராசிரியர் சோ.தேவராஜா |

இலக்கிய ஆணைக்குழு

ஆணையாளர்கள் :- 'இலக்கியச்சுடர் த.இராமலிங்கம்
பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா
கலாநிதி ஆறு. திருமுருகன்
பொருள் :- "ஊழின் பெருவலியைப் பெரிதும் உணர்த்தும் தலைமைப் பாத்திரம் எனும் தகுதி..."

| | |
|---|---|
| கைகேயிக்கே உரியது! | ந.விஜயசுந்தரம் |
| இராமனுக்கே உரியது! | இரா.செல்வவடிவேல் |
| இலக்குவனுக்கே உரியது! | தி.திருநந்தகுமார் |
| கும்பகர்ணனுக்கே உரியது! | ஸ்ரீ.பிரசாந்தன் |

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
அகில இலங்கைக் கம்பன் கழகம்
(இ)



எமது சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது
வெளிநாடுகளுக்கான துரித கடிதங்கள் பொதிகள் சேவை

20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கை
அருள்

● அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்
● அருள்ஸ் பிறைவேற் லிமிட்டற் நிறுவனங்களின் இணை நிறுவனம்.

சாவகச்சேரி
இல. 01 NDB வங்கிக் கட்டடம், தபால் கந்தோர் வீதி, சாவகச்சேரி.
076 443 1576

நெல்லியடி
இல. 01 பெற்றோல் செற் லேன் ,நெல்லியடி.
076 443 1576

கிளிநொச்சி
இல. 10, கரடிப்போக்கு, கிளிநொச்சி.
(வாகன புகைப்பரிசோதனை நிலையம் அருகில்)
076 443 1576
(C-2987)



போட்டிப் பரீட்சை வகுப்புக்கள் மற்றும் தடைதாண்டல் (EB) பரீட்சை வகுப்புக்கள் யாழ் நகரில் நடைபெறுகின்றன.
தொடர்புகளுக்கு
076 6883394
(சி-3058)



வலம்புரி
விளம்பரத தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.06.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.